# பூவரசம் பொழுது
# 2007

குறிஞ்சி மலர்



புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் கனடா

VIMIKA

*Banquet Hall*

*Welcome with dreams*



திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா, கல்லூரி
ஒன்றுகூடல், மற்றும் சகல விதமான வைபவங்களையும் ஆடம்பரமாக
கொண்டாடிட எம்மை நாடுங்கள்

ஸ்காபரோவிலும் மண்டப ஒழுங்குகள் செய்து தரப்படும்

50 பேர் முதல் 1000 பேர் வரை அமர்ந்து கொண்டாடி மகிழ்திட மிகப்
பிரமாண்டமான அழகிய மண்டபத்துடன் கூடிய ரேக் அவுட்டும்
கேற்றரிங்கும் செய்துதரப்படும்

WOODBINE BANQUET & CONVENTION HALL LTD

For Reservations:
Call GIRI

**TEL: 416.746.1223**
**FAX: 416.746.1053**
**CELL: 416.704.9755**
**EMAIL: giri@bellnet.ca**

ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்

பன்னிரெண்டாவது ஆண்டில்

எழுத்துப்போராளி - நாட்டுப்பற்றாளர் - கவிஞர்

## சு. வில்வரெத்தினம் அரங்கில்

# பூவரசம்பொழுது 2007

குறிஞ்சி மலர்

01.12.2007

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் கனடா


PUNGUDUTIVU OLD STUDENTS' ASSOCIATION OF CANADA

CANADA


கனடா

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!




# கனடிய தேசிய கீதம்



ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீயே
உந்தன் மைந்தர்கள் யாவரும்
உண்மை தேச பக்தர்கள்
நேரியவடக்காய், வலுவாய், சுதந்திரமாய்
உன் எழில் வடிவம் கண்டுவப்போம்
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நின்னைப் போற்றி அணிவகுத்தோம்
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
எம் நிலப்புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுப்போம்!
ஓ கனடா, நாம் நின்னைப் போற்றி
அணிவகுப்போம்!

# National Anthem : Canada



***O Canada!***
***Our home and native land!***
***True patriot love in all thy sons command***
***With glowing hearts we see thee rise***
***The true north strong and free!***
***From far and wide***
***O Canada we stand on guard for thee***
***God keep our land glorious and free!***
***O Canada we stand on guard for thee***
***O Canada we stand on guard for thee***

# விழா கீதம்

புங்குடுதீவு மக்கள் நடாத்தும் விழா
பூவரசம் பொழுதல்லவா!

மாலையில் ஓர்நாள் மயங்கிடும் வேளையில்
மாண்புடன் நடத்திடும் மங்கள நிகழ்வுகள்
இதயங்கள் யாவும் இனித்திடும் இனிமையில் - என்றும்
இதை எண்ணி நெஞ்சங்கள் நிறைந்திடும் நினைவினில்

புங்குடுதீவு

தீவகம் தன்னில் ஓர் புங்கை நகர்
தீந்தமிழ் வளர்ந்த எம் பூமியது
உலகெங்கும் உன் மக்கள் உயர்ந்திடுவார்! - அங்கு
உன்பெயரை நிலை நாட்டிடுவார் !

புங்குடுதீவு

முத்தமிழும் இங்கு ஒலிக்கின்றது
முந்தைய நினைவு தன்னை மீட்கின்றது
ஒன்று திரண்டு நாம் நடத்திடுவோம்
ஒவ்வொரு வருடமும் தொடர்ந்திடுவோம் !

புங்குடுதீவு

ஆக்கம் : இசைக்கலைமணி திருமதி சுமங்கலா சண்முகநாதன்

# பிரதம விருந்தினரிடமிருந்து......



பன்னிரெண்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் புங்குடுதீவு பூவரசம் பொழுது பெருவிழாவுக்கு என்னை பிரதம விருந்தினராக அழைத்தமைக்கு எனது நன்றிகள்

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் பல ஆண்டுகளாக நடாத்தி வரும் இவ்விழா மூலம் எமது கலை, கலாச்சார பாரம்பரியங்களை நமது வளர்ந்து வரும் இளம் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்ட உதவுகின்றது. இலைமறை காய்போல இருக்கும் இளம் கலைஞர்களின் படைப்புக்களை அரங்கேற்றி, அவர்களின் திறமைகளை மற்றவர் அறியும்படி செய்யும் நிகழ்வாக உள்ளது.

இது மட்டும் அல்லாது புலம்பெயர்ந்து இங்கு வந்தாலும், புங்குடுதீவு மக்கள் தமது மண்ணுக்கு உவகையுடன் ஆற்றிவரும் பணிகள் பல. சங்கத்தின் மூலம் அங்கு வாழும் மக்களுக்கு பலவிதங்களில் உதவி வருவதை கேள்வியுற்று மகிழ்ச்சியடைந்தேன். மற்றைய அமைப்புக்களுக்கு இது ஒரு வழிகாட்டியாக இவ்வாறான உதவிகளை செய்து காட்டுவது போற்றத்தக்கதாகவுள்ளது.

இந்நாட்டிலுள்ள பல பிரச்சனைகள், வேலைப்பழுக்கள் மத்தியிலும் இவ்விழாவினை சிறப்பாக நடாத்துவது என்பது இலகுவன்று. விழா இனிது நடைபெற எனது வாழ்த்துக்கள்.

Dr. கு.கிருபா F.R.C.S (Canada), F.R.C.O.G. (UK),
மகப்பேறு வைத்திய நிபுணர்
ஸ்காபரோ பொது வைத்தியசாலை, ரொறண்ரோ. கனடா.

# எனது உள்ளத்திலிருந்து.....



என் உயிரினும் மேலான என் இனிய உறவுகளே வணக்கம்!

இன்றைய மாலைப்பொழுதில் இனிமையும், இளமையும் தவழும் கலை நிகழ்வுகளைப்பார்த்து இரசித்துக் கொண்டிருக்கும் உங்களோடு நானும் சேர்ந்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

எனது தாய் மண்ணினில் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்ததில் உங்களைப்போன்று நானும் பெருமையடைகின்றேன். இவ்வாண்டு எமது புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக தலைவராக என்னை தெரிவு செய்ததையிட்டு பெருமையடையும் அதேவேளை எனது பொதுச்சேவைக்கு பக்க பலமாகவிருக்கும் எனது தாய், தந்தையர்க்கும், குடும்பப்பாரங்களை தான் சுமந்துகொண்டு என்னை ஒருநிலையில் சங்க நடவடிக்கைகளை செய்வதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய அன்பு மனைவிக்கும், பிள்ளைகளுக்கும், அத்துடன் கூடவிருந்து ஆற்றுப்படுத்தும் நிர்வாக உறுப்பினர்களுக்கும் எனது முதற்கண் நன்றிகள்.

எமது மண்ணின் மைந்தன் கவிஞர், நாட்டுப்பற்றாளர், எழுத்துப் போராளி அமரர் சு.வில்வரெத்தினம் அவர்களின் பெயரை இந்த அரங்கத்திற்கு சூட்டியதையிட்டு நான் பெருமையடைகின்றேன். நான் சிறுவயதினராக இருந்தபோது இவரை பலமுறை சந்திக்கும் பாக்கியம் கிடைத்தது. தாயக இன்னல்களால் புலம்பெயர்ந்த பின்னாள் எனது பிற மாவட்ட நண்பர்கள் இவரைப்பற்றி என்னிடம் பெருமைபட பேசுவதைக்கேட்டிருக்கின்றேன். அப்போ அமரர் பற்றியும், நான் அவரை பலமுறை சந்தித்தது பற்றியும், அவர் எனக்கு அறிவுரைகள் கூறியதைப்பற்றியும் சொல்லிப்பெருமைப்படுவேன். எம்முடன் இருந்த பெறுமதி மிக்க முத்து எம்மைவிட்டு போனபின்தான் அதன் அருமை தெரிந்தது. அவ் நல்முத்தின் பெருமை அறிந்து அரங்கத்திற்கு அமரரின் பெயரைச்சூட்டிய எனது நிர்வாகத்திற்கு நன்றிகள். பன்னிரெண்டாவது வருட பூவரசம் பொழுது கலை நிகழ்வு அரங்கத்திற்கு அமரரின் பெயரை சூட்டி எமது சங்கம் நிலையான பெயரை மீண்டும் இந்த மண்ணில் நிலை நிறுத்தியிருக்கின்றதென்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

எனது நீண்ட நாட்கனவான, எமது புங்குடுதீவு மண்ணின் பெயரால் கனேடிய மண்ணில் ஓர் கட்டிடம் வாங்க வேண்டும் என்கின்ற நினைப்பை என் இந்த ஆண்டு நிர்வாகத்தினர்க்கு தெரிவித்த போது அவர்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கியதுடன் அதற்காக கடுமையாக உழைத்தார்கள். இத்திட்டத்திற்காக நான் அதிஸ்ரலாபச்சீட்டு மூலம் நீங்கள் தரும் பணத்தினூடாக அக்கட்டிடத்தை வாங்குவதற்கு திட்டமிட்டிருந்தேன். காரணம் பெரும்தொகைப்பணம் அதற்கு தேவை என்பதுடன், நீங்கள் தரும் பணத்திற்கு பெறுமதியான பொருளை அதிஸ்ரசாலியான உங்களில் ஒருவர் பெற வேண்டும் என்பதற்காக முதலாவது பரிசாக மகிழ்வூர்தி (Car) ஒன்றை வழங்குவதற்கு உத்தேசித்தேன். அதற்காக எம் ஊரின் உறவுகளான பாலப்பாஸ் நிறுவன அதிபர் திரு. கதிர்காமநாதன் திவ்வியநாதன் அவர்களிடமும், முன்னாள் தலைவர், காப்புறுதி முகவர் திரு குணா செல்லையா அவர்களிடமும் அதற்கான பணத்தை தந்துதவுமாறு கேட்டிருந்தேன். அவர்களும் முகம் சுளிக்காது, முழு மனதுடன் மகிழ்வூர்திக்கான பணத்தில் ஒரு தொகையினை தந்ததுடன் ஆதரவினையும் தந்தார்கள். அவர்களுக்கு எனது நன்றியையும், அத்துடன் அவர்களுக்கு உங்கள் ஆதரவினை கொடுக்கும் வண்ணமும் கேட்டுக்கொள்கின்றேன்.

எமது நிர்வாகம் தொடர்ச்சியாக பல உதவிகளை ஊருக்கும், எமது தாயகத்திற்கும் செய்துகொண்டிருக்கின்றது. எமது இவ்வாண்டுக்கான நிர்வாகமும் அந்தவகையில் கிழக்கு மாகாண மக்களில், பத்தாயிரம் மக்கள் வாழ்வதற்கான தங்குமிட வசதிக்காக நிலம் வாங்குவதற்கு பணம் கொடுத்து பெரும் பங்காற்றியிருக்கின்றோம். வந்தாரை வாழவைக்கும் புனித பூமியான எம்மண் அதேவகையில் எமது தாயகத்தில் இடர்படும் எம் இளம் தளிர்கள், கல்வி மேம்பாடுகளில் சிறக்க எமது சங்கம் உதவவேண்டும் என்றும், அதற்கு தாங்களும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாண்டு எமது ஒன்றுகூடலில் ஏற்பட்ட துயரமான சம்பவத்தால் எமது உறவுகள் பட்ட வேதனைக்காய் மனம் வருந்துகின்றேன். தமது செல்வங்களின் உடல்நலக்குறைவினால் வைத்தியசாலைகளில் தங்கள் காலங்களை செலவு செய்ததுடன், ஆறுதல் சொல்லச்சென்ற எமக்கே ஆறுதல் சொன்ன உறவுகளுக்கு எனது நன்றிகள். எமது சங்கம் பல கொடிய, நெடிய இடர்பாடுகளுட்குள் சிக்குண்டாலும், தனது சிறப்பையும், பொழிவையும் இழக்காது, தனக்கு வந்த இன்னல்களை திறம்பட துணிந்து எதிர்கொண்டு ஒன்ராரியோ சுகாதாரத்திணைக்களத்துடன் ஒத்துழைத்து, அவர்கள் கேட்ட அனைத்தையும் செய்து, அவர்களின் பாராட்டையும் பெற்று, எமது தரப்பில் பிழையில்லை என்பதை அவர்களிடமிருந்து பெற்று வெற்றி பெற்றிருக்கின்றது. அன்றைய துன்ப நிகழ்வின் போது எம்முடன் தொடர்புகொண்டு ஆறுதல்கள் கூறிய, அதற்காக உழைத்த உங்களுக்கு எனது நன்றிகள்.

எமது பூவரசம்பொழுது 2007 கலைநிகழ்வு இவ்வாண்டும் சிறப்பான விழாவாக அமைய காரணமான வர்த்தக பெருந்தகைகளுக்கு எமது சங்கத்தின் சார்பிலும், எனது சார்பிலும் நன்றிகள். அத்துடன் இவ்விழா சிறப்பாய் அமைவதற்காக உழைத்த நிர்வாக உறுப்பினர்களுக்கும், தமது வேலைப்பழுக்கள் மத்தியிலும் கூடுதலான நேரத்தை சங்கத்திற்காக அர்ப்பணித்து உதவிய சோம சச்சிதானந்தன், நடா உதயகுமாரன், ச. சந்திரகுமாரன், கதிர் மகாத்மநாதன் மற்றும் குணா செல்லையா ஆகியோருக்கும், எமது பூவரசம்பொழுது மலரை குறுகியகாலத்தில் பொறுப்பெடுத்து, மலர் சிறப்புற அமைவதற்காய் இரவுபகல் பாராது திறம்பட உழைத்த தவ.கோபி அவர்களுக்கும் மற்றும் Digi Media Creations கருணா, Apex Creations கண்ணன் அவர்களுக்கும் இன்னும் பல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகளைக்கூறிக்கொண்டு விடைபெறுகின்றேன்.

நன்றி


ரமேஸ் செந்தில்நாதன்

தலைவர்

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் - கனடா

01.12.2007

# செயலாளரிடமிருந்து.........



"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே"


புலம் பெயர்ந்து அகதியாக வந்த எமக்கு, அடைக்கலம் தந்து வாழ்வளித்துக்கொண்டிருக்கும் கனடா நாட்டிலும், புத்துணர்வோடு புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் நிறுவி அதற்காக உழைத்துக்கொண்டிருக்கும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எனது வணக்கங்கள்.

பூவரசம் பொழுது என்றால் அது புங்குடுதீவு மக்களால் நடாத்தப்படும் பெரு விழா என்று, இங்கு வாழும் அனைத்து ஊர் மக்களாலும் பேசப்படும் நிகழ்வாக அமைந்து, விளங்கி வருகின்றது. இங்குள்ள ஊர்ச்சங்கங்களால் எடுக்கப்படும் விழாக்கள் யாவற்றிலும், எமது பூவரசம் பொழுது முதன்மை பெற்று விளங்கி வருகின்றது. அத்தோடு ஒன்றுகூடல், பூவரசம் பொழுது விழாக்கள் மூலம் தாயகத்தில், இடப்பெயர்வுகளாலும், போர்ச்சூழலாலும் பாதிப்பப்பட்ட அனைத்துப்பகுதி மக்களுக்கும் கூடியவரை உதவி வந்துள்ளது. இவற்றையெல்லாம் செய்வதற்கு காரணமாக அமைந்தவர்கள், வர்த்தகப் பெருமக்களும், இங்கு வாழும் எமதூரின் உறவுகளும் ஆவர்.

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் 1996 ஆம் ஆண்டு புங்குடுதீவு மகாவித்தியாலய முந்நாள் அதிபர் அமரர் வீ.வ. நல்லதம்பி அதிபர் அவர்களின் ஆசீர்வாதத்துடன் எமது மண்ணின் மைந்தன் சோம சச்சிதானந்தன் அண்ணாவும், அவருடன் சேர்ந்த துடிப்பான இளைஞர்களாலும் ஆரம்பிக்கப்பட்டு இன்று பன்னிரெண்டாவது அகவை அடைந்து பெருவளர்ச்சி கண்டு நிற்பதையிட்டு நாம் பெருமை கொள்ளவேண்டும். இக்காலப்பகுதிகளில் எமது சங்கப்பணிகளை முன்னெடுத்த அனைத்து நிர்வாகப்பதவி வகித்த அனைவருக்கும் என்றும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து, தொடர்ந்து பல ஆண்டுகளாக ஆதரவு நல்கிவரும் வர்த்தக பெருமக்களுக்கும், மதகுருமாருக்கும், மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொண்டு பன்னிரெண்டாவது ஆண்டில் பூத்துக்குலுங்கும் பூவரசம் பொழுதினை கண்டு இன்புற்று மகிழ்வீர்களாக என்று கூறி விடைபெறும்

நடா உதயகுமாரன்
செயலாளர்
புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்
03.11.2007

# பொருளாளரிடமிருந்து........



புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் 12வது ஆண்டில் கால்பதிக்கும் இவ்வேளை எம்மனங்கள் பூரிப்படைகின்றன. பூவரசம்பொழுது ஒன்று கூடல்கள் மூலம் கனடா வாழ் புங்குடுதீவு மக்கள் அனைவரும் ஒன்றாய்க் கூடி உண்டு மகிழ்வதோடு மட்டும் அன்றி தாயகத்தில் கொடியபோரினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் அனைத்து மக்களின் துன்பதுயரங்களில் பெருமளவு பங்குகொண்டுள்ளது. அத்தோடு பூவரசம்பொழுது கலைநிகழ்வுகள் மூலம் எமது மண்ணின் மக்களின் கலைத்திறமைகள் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்துள்ளது. சங்கம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இன்றுவரை இதன் பெருவளர்ச்சிக்கு தங்களின் பெறுமதிமிக்க நேரங்களை அர்ப்பணித்து செய்யப்பட்ட அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும் என்றும் பாராட்டப்படவேண்டியவர்கள். அத்தோடு வருடாவருடம் இடம்பெறும் பூவரசம்பொழுது விழாவிற்கு ஒன்றுகூடலுக்கும் ஆதரவு அளித்துவரும் கனடாவாழ் மக்களையும் நாம் என்றும் மறந்துவிட முடியாது. இவர்கள் தொடர்ந்து அளித்துவரும் நிதியுதவிகள்தான் சங்கத்தின் வளர்ச்சிக்கு காரணமாய் அமைந்தது.

நிறைந்த வளமும் புகழும் கொண்ட பூமியாக திகழ்ந்த எமது கிராமம் இன்று இலங்கை அரச படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டு பதினாறு ஆண்டுகளைக் கடந்து விட்டது. நாம் மடிந்தாலும் பிறந்த பூமியினிலேயே மடியவேண்டுமென்ற உணர்வோடு புலம்பெயராது எமது தாய்மண்ணில் வாழ்ந்திடும் அனைத்து உறவுகளுக்கும் தொடர்ந்து நாம் உதவிடவேண்டும். எமது தேசம் முற்றாக விடிவு பெற்றதும் அதனை மீண்டும் கட்டி எழுப்பும் பணி அனைத்து புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் புங்குடுதீவு மக்களின் கடமையாகும். அதற்காக இப்பொழுதே ஆயத்தம் செய்வோம். இவ்வாண்டு சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட சங்கத்திற்கான நிரந்தரக்கட்டிடம் அமைத்தல் விடயத்திற்கு எல்லோரும் பூரண ஒத்துழைப்பு வழங்கி எல்லா விடயத்திலும் முன்னுதாரணமாகத் திகழும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் இந்த விடயத்திலும் முதன்மை அடையப்போகிறதெனக் கூறி வர்த்தகப்பெருமக்கள் ஒன்றுகூடலின் போது நினைவுப் பரிசில்களுக்காக நிதி வழங்கியவர்கள் அனைவருக்கும் இதயம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

அன்புடன்
கண. சௌந்திரராஜன்
பொருளாளர்.

உ
மேருபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் - ரொறன்ரோ
MERUPURAM SRI BHATHIRAKALI AMMAN DEVASTHANAM - TORONTO
A Regd. Hindu Religious and Charitable Organization
1510 Birchmount Road, Unit 104, Toronto, Ontario, M1P 2G6, Canada.
Tel : 416 615 0100 www.torontokali.com

எல்லாம் வல்ல அன்னையின் பாதம் பணிந்து, தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் கூடுதலான ஈழத்தமிழர்களை கொண்டுள்ள நாடு கனடாவாகும். இங்கு எம்மின மக்கள் தங்களின் கலை, கலாச்சார,பண்பாட்டு சமய, சமூக நிகழ்வுகளை காலத்திற்கு காலம் சிறப்பான முறையில் முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் புங்குடுதீவு மக்களும் தங்களின் மண்வாசனை பொருந்திய பூவரசம்பொழுது என்னும் பல்சுவை நிரம்பிய நிகழ்ச்சிகளை உறவுகளின் சங்கமத்தினூடாக நடத்தி வருகின்றனர். இந்த சங்கம உறவினில் நாமும் இணைவதில் பெரு மகிழ்ச்சியே.

சிறுவயதினில் பொன்கொடுதீவின் காற்றினை கணேச மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற போது சில வருடம் சுவாசித்துள்ளேன். இதன் தொடர்பு மீண்டும் கனடா வாழ் புங்குடுதீவு மக்களுடன் கிடைத்திருப்பது அன்னையின் திருவருளே. இவ்வருடம் நடைபெறுகின்ற பூவரசம் பொழுது 2007 பல்தரப்பட்ட சுவைகளை சுமந்து வந்து நல்விருந்தாக அமையும் என்பது, புங்குடுதீவு மக்கள் பல்வேறுபட்ட துறைகளிலும், தம்மை முன்னிலைப்படுத்தி வந்துகொண்டிருப்பதன் தன்னிலை வெளிப்பாடுகளாகும். தாங்கள் தங்கள் மீது கொண்ட வெற்றியின் பிரதிபலிப்பே ரொறெண்டோ மாநகரில் வரப்போகும் பழைய மாணவர் சங்கத்திற்கான நிரந்தரக்கட்டிடமாகும். யாவும், விடாமுயற்சி நம்பிக்கை, ஒற்றுமையுடன் சேர்ந்து சிறந்த வெளியீடுகள் அமைய வேண்டுமென மேருபுரம் ஸ்ரீ மகா பத்திரகாளி அம்பாளின் திருப்பாதங்களை வேண்டி , நல்லாசிகளும், பாராட்டுக்களும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

வாழ்க தமிழ்! வளர்க கலை!!

"வேண்டுதல் அறிந்து வேண்டத்தக்கதை தருவாள் அன்னை"

இறைபணியில்

நல்லாசியுடன்

ப்ரம்மஸ்ரீ லிங்க சுரேஸ்குருக்கள் (B.BA.Colombo)

ப்ரம்மஸ்ரீ லிங்க ரமேஸ் குருக்கள் (Computer Programer)

26.10.2007

# ஆசிச்செய்தி......



உ

சிவமயம்

கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தால் நடாத்தப்பெறும்

## பூவரசம்பொழுதுக்காக

ஸ்ரீ சாரதாபீடஅதிபர், திருமணப்பதிவாளர்,சிவாச்சார்யமணி

கனேடிய ஸ்ரீ நயினாதீவு நாகம்மாள் கோவில் பிரதம குரு

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச குகனேஸ்வரக் குருக்கள்**

அவர்களால் வழங்கப்பெற்ற ஆசியுரை

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்

ஞானகுரு வாணிபதம் நாடு.

“பூவரசம் பொழுது” விழாக்கொண்டாட்ட நாள் நெருங்குகிறது என நினைக்கும்பொழுதே புங்குடுதீவு மண்ணில் பிறந்த அனைவரது உள்ளங்களிலும் மகிழ்வுணர்வு ஏற்படுவதை அவர்களின் முகத்தைப் பார்க்கும்பொழுதே புரிந்து கொள்ளலாம். தீவகங்களிலே தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு தீவகம் புங்குடுதீவு ஆகும். அங்குள்ள ஆலயங்கள் பள்ளிக்கூடங்கள் அனைத்துமே தமிழ் உணர்வையும் அவரவர் சமயங்களிலே பக்தியுணர்வையும் தப்பாது போதித்து வளர்த்துவந்த பெருமைக்குரியன என்பது குறிப்பிடக் கூடியஒன்றாகும். தாயகம் அமைதியும் மகிழ்ச்சியும் வளமையும் செழுமையும் திகழ்ந்து விளங்கிய அக்காலமுதல் இக்காலம் வரை, புங்குடுதீவு மக்கள் தமது சமயத்தையும் கல்வியையும் பண்பாட்டையும் சமுக ஒற்றுமையையும் பேணிவளர்ப்பதில் சளைக்கவேயில்லை. இதற்கு புங்குடுதீவில் உதித்த கல்விமான்களும் வர்த்தகப் பெருந்தகையாளர்களும் முக்கிய தூண்களாக மிளிர்வதை அனைவரும் அறிவர். தற்போதைய நாட்டுச் சூழல்களால் தமிழீழத்தின் பலபாகங்களும் சீரழிந்து போவதைப் பார்க்குமிடத்து நமது புங்குடுதீவு பழையமாணவர் சங்கம், இனப் பற்று மொழிப்பற்று தாயகப்பற்று சமயப்பற்று ஆகியவற்றை கருத்தில் ஊன்றி அவர்கள் முன்னெடுத்துவரும் அனைத்து முயற்சிகளும் வரவேற்கத்தக்கனவாகவும் பாராட்டுக்குரியனவாயும் திகழுவதை நன்கு அறியலாம். காலத்திற்குக் காலம் கனடா புங்குடுதீவு பழையமாணவர் சங்கம் செயல்திறன் மிக்க உறுப்பினர்களை தேர்வுசெய்து, அவர்கள் ஒன்றுகூடிக் கலந்து பேசித் தீர்மானிக்கும் ஆக்கவேலைகளுக்கும், தாயகத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவும் நற்பணிகளுக்கும், இங்கு வருடாவருடம் நிகழும் ஒன்றுகூடலின்போது இளைய தலைமுறையினரின் முன்னேற்றத்திற்காகவும் மூத்ததலைமுறையினரின் மனநிறைவுக்காகவும் அவர்கள் ஒழுங்குசெய்யும், அனைத்து நிகழ்வுகளுக்கும் பின்னணியில் புங்குடுதீவு மண்ணின் மக்கள் அனைவருமே தமக்குள் எதுவிதபாகுபாடுமின்றி ஆர்வமும் ஆதரவும் நல்கிவருவதனால் வருடாவருடம் “பூவரசம்பொழுது” அழகும் இளமையும் கொண்ட பருவமுடையதாக உலகப் புகழ்சூடி நிற்பது நமது மண்ணின் பெருமையைப் பறைசாற்றுவதைப் போலிருக்கிறது. இம் முயற்சியில் முன்னின்றுழைக்கும் அனைவருக்கும் எமது குலதெய்வமாகிய இறுபிட்டி ஸ்ரீ விநாயகப்பெருமானும் அனுதினமும் பூசித்து வழிபடும் கனேடிய ஸ்ரீ நாகம்மாள் தேவியும் திருவருள் பொழிந்து காக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்

வாழ்க! வாழ்க! வாழ்க!

சுபம்.

**Department of Geography**

**University of Jaffna**

*Jaffna, Sri Lanka*

*Telephone: 021-2226512*
*Fax : 021-2223091*
*17th October 2007*

## வாழ்த்துச்செய்தி

எமது தாய் மண்ணில் வீதியோரங்களிலும் வளவு எல்லைகளிலும் நிழல் பரப்பி மக்களின் மனதினைக் கொள்ளை கொண்டிருந்த பூவரசுகள் வேரோடு வெட்டிச் சாய்த்து மண்ணோடு மண்ணாகி காணப்படும் இவ்வேளையில் இப்பூவரசுகளின் கீழ் நிழலினை அனுபவித்த எம் உடன் பிறப்புக்கள் உலகிலேயே அமைதிக்கும் பண்பாட்டிற்கும் பெயர்பெற்ற கனடா மண்ணில் தாம் பிறந்து வளர்ந்த தாய் மண்ணை நேசித்து விழா எடுத்து உறவுகள் யாவரும் ஒன்றுகூடும் நிகழ்வானது வெற்றிபெற தாய் மண்ணிலிருந்து பிறந்த பூமியை நேசித்து வாழ்ந்துவரும் நான் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

நாம் பிறந்த மண்ணில் எப்போது அமைதி திரும்பும், எவ்வித இடையூறும் இன்றி வாழலாம் என ஏங்கிக்கொண்டிருக்கும் என்போன்ற பலரின் ஆதங்கத்தின் மத்தியில் எமது உடன்பிறப்புக்கள் சர்வதேசம் எங்கும் தம்மை அடையாளம் காட்டி விழா எடுத்து உறவுகளை இறுக்கப்படுத்திக் கொள்வது மகிழ்ச்சிக்குரியதேயாகும். அந்த வகையில் கனடா மண்ணில் தாங்கள் எடுக்கும் விழாவானது எம் போன்றவர்களுக்கு உற்சாகத்தையும் மனத்திருப்தியையும் அளிக்கின்றது. இருந்தபோதிலும் இத்தகைய விழாக்கள், ஒன்றுகூடல்கள் எவ்வளவுகாலம் நடைபெறும்? சென்றடைந்த நாடுகளின் கலாசார பாரம்பரியத்தை விரும்பியோ விரும்பாமலோ பகுதியாகவோ முழுமையாகவோ உள்வாங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் எமது மூன்றாம் தலைமுறையினர் எதிர்கொள்ளவேண்டியிருப்பது சாதாரண விடயமாகவே இருக்கிறது. எனவே இத்தகைய விளைவுகளை எமது பிறந்த மண்ணோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினர் இதனைச் சவாலாக எடுத்து எதிர்கால எம்சந்ததியினர் மூதாதையினர் பிறந்த மண்ணை நேசிப்பதற்கு உகந்தவர்களாக அவர்களை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவற்றுக்கெல்லாம் மகுடம்இடுவதுபோல "பூவரசம் பொழுது" ஒன்றுகூடல் நிகழ்வுகள் நிட்சயமாக இப்பிரதேசத்தினை இறுகப்பற்றவைக்கும் என நம்பலாம்.

இவ்வாண்டு நடைபெறும் ஒன்றுகூடல் நிகழ்வுக்கு புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் எனக்கும் அழைப்பினை விடுத்திருந்தது. நாட்டு சூழ்நிலை காரணமாகவும் பொருத்தமான கால அவகாசம் இல்லாத நிலையாலும் வருகைதர முடியாது போய்விட்டது. தாங்கள் என்னை அழைத்துக் கௌரவிக்க இருந்தமைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் எதிர்கால சூழ்நிலை சாதகமாக இருக்கும் பட்சத்தில் தாங்களது அன்புக்கட்டளையை ஏற்றுக்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"பூவரசம் பொழுது" நிகழ்வு சிறப்பாக நிகழவும் அதனை ஒட்டி வெளியிடும் நூல் புதுப்பொலிகை பெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

பேராசிரியர். கா. குகபாலன்
தலைவர், புவியியற்றுறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

ஸ்
"மண்ணின் சேவையே மகத்தான சேவை"

# புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம்
## சுவிற்சர்லாந்து
# PEOPLES SOCIETY FOR AWARENESS - PUNGUDUTHIVU SWITZERLAND

## "பூவரசம் பொழுதே வாழி!"

அன்புடையீர்!

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் கனடா நடாத்தும் பூவரசம் பொழுது அகவை பன்னிரெண்டை அகமிக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்!

புலம் என்றாலும் சரி, நிலம் என்றாலும் சரி, சொல்வது கொஞ்சம் செய்வது அதிகம் அதுதான் புங்குடுதீவு மக்களின் உண்மையான அடையாளப்பண்புகள் ஆகும்! ஓர் அமைப்பு பன்னிரெண்டு ஆண்டுகளாக புலம் பெயர் மண்ணில் எந்தவிதமான சுயநலமுமின்றி பொதுப்பணியை வெற்றிகரமாக நடாத்தி வருகிறதென்றால் அதற்கு மக்களின் கூட்டுமுயற்சியும் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை! எனவே பு.ப.மா. சங்கத்தையும், எம் பூமிப்புதல்வர்களையும் இவ்வுயர் பணிகண்டு நெஞ்சார வாழ்த்துகின்றேன்!

அண்மைக்காலத்தில் தமிழ் தேசியத்திற்கெதிரான இணையத்தளம் ஒன்றில் வெளிநாட்டில் உள்ள புங்குடுதீவுச் சங்கங்கள் அனைத்தும் புலிச்சங்கங்கள் என்பதை உறுதிப்படுத்தி செய்தி வெளியிட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள். இச்செய்தி சொல்கின்ற விடயம் என்னவெனில், புங்குடுதீவு மக்கள் தாய்மண்ணைவிட்டு புலம் பெயர்ந்து போனாலும் புலன்களை இழந்துவிடாதவர்கள்என்பதையே. அத்தோடு காலம் காலமாக தமிழுக்காகவும் தமிழ்த் தேசியத்திற்காகவும் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் பலர். எம்மண்ணில் வாழ்ந்த அவர் தம் சுவடுகளைப் பின்பற்றி வாழ்ந்த மக்கள் நாம்!

எனவேதான் எமது தமிழீழ தேசியத்தலைவர் அண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் கரத்தை பலப்படுத்தி விடுதலை மூச்சை வீச்சாக்கும் பணியில் எம்மக்கள் பணி உயரியதாக வரலாறு பதிவு செய்துள்ளது. இது எம் கடமையும் கூட.

இவ்வரலாற்றுப்பணியில் கனடா பு.ப.மா. சங்கம் இயன்றவரை பணி செய்துள்ளது. இனியும் செய்யும் என மனதார நம்புகின்றோம்! மேலும் எம்மக்கள் குறைந்தபட்சம் இருபத்தி ஐந்து ஆண்டுகளாக ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்ரேலிய நாடுகளிலும் இன்னும் இதர நாடுகளிலும் வாழ்ந்து வருகிறார்கள். அவற்றில் கணிசமாக கனடா, சுவிஸ், ஜேர்மனி, லண்டன், பிரான்ஸ், நோர்வே, அவுஸ்ரேலியா, டென்மார்க் மற்றும் கொழும்பு, வன்னி, இந்தியா போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களிடையே ஏன் ஓர் காலாண்டு சஞ்சிகை தொப்புள்கொடி உறவாக உறவுப் பாலமாக வெளிவரக்கூடாது? என்பதே என் ஆதங்கம்! இலக்கிய வல்லுனர்கள் மற்றும் சட்டத்துறை பொருளியல்துறை, பொறியியல்துறை, மருத்துவத்துறை, கலைத்துறை, சமய சமூக பண்பாட்டுத்துறை வல்லுனர்களின் ஆக்கங்களும் கருத்துக்களும் எம் புதிய தலைமுறைக்கு பயனுள்ளதாக அமையும். எம் உறவுகள் நாட்டு எல்லைகளால் பிரிவு பட்டாலும் இச்சஞ்சிகையூடாக ஓர் இறுகிய பிணைப்பில் வாழ வழி செய்யும் எனவும் கருதுகிறேன்.

இனி வரும் காலங்களில் ஒருமித்த கருத்தில் எண்ணங்களை பகிர்ந்து கொள்ள சஞ்சிகை வெளிவர கனடா பழைய மாணவர் சங்கம்தான் இப்பணியை ஆரம்பிக்க வேண்டுமென்று அன்புவேண்டுகோள் விடுக்கின்றேன். ஓர் நாட்டிற்கு நான்கு பத்திரிக்கை பக்கங்களை பயன்படுத்தவும், இப்படி அனைத்து நாட்டில் உள்ளவர்களும் ஏனைய நாட்டில் உள்ள மக்களின் எண்ணக் கருவூலங்களை அறிந்து கொள்ளவும் ஓர் அரிய வாய்ப்பாக இது இருக்கும்! இதை அனைத்து புலம்பெயர் நாடுகளிலுள்ள புங்குடுதீவு சங்கங்களும் பரிசிலினை செய்து 2008 தைப்பொங்கல் தினத்தில் வெளிவர ஆவன செய்வீர்களென உறுதியாக நம்புகின்றேன்.

இச்சஞ்சிகைக்கான தலைப்பாக திருப்பூங்குடி, பொற்பூமி, பொன்னகர் என ஆய்வு செய்து தலைப்பிடலாம் இனி ஆவன செய்வது நீங்கள் அனைவரும்தான்.

**"எண்ணமே வாழ்க்கை"**
**"தலைமுறைவாழ தலைதருவோரை தாய்மண் மறவாது"**
**வெல்க உங்கள் பணி**
**நன்றி!**

இங்ஙனம்
செல்வரெட்ணம் சுரேஷ் (சுவிஸ்)
புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு ஒன்றியம் சுவிஸ்

28.10.2007

# வாழ்த்துச்செய்தி......

கனடாவில் உள்ள புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்படும் "பூவரசம்பொழுது 2007" விழாவுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகின் செல்வந்த நாடுகளில் வாழும் புங்குடுதீவு மக்கள் தமது மண்ணை மறவாது, அதன் அபிவிருத்திற்காக பல உதவிகளையும் செய்து வருகின்றனர் என்பதும் உண்மையே. இதில் கனடாவில் உள்ள புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தினரது பங்கு பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். எனினும் புங்குடுதீவின் தற்போதைய நிலையை நோக்கும் போது அதனை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாடுகளிலுள்ள புங்குடுதீவு மக்கள் வைத்துள்ள சங்கங்களால் செய்யப்படும் உதவிகள் போதுமானதாகவில்லை.

1991 ஆம் ஆண்டு புங்குடுதீவு மக்களில் தொண்ணூறு வீதமானவர்கள் இடம்பெயர்ந்த பின்னர் அத்தீவின் நிலை பல வழிகளிலும், விவசாயம், கல்வி, வைத்திய வசதி, போக்குவரத்து வசதி, மின்சார வசதி, ஆலயங்களின் நித்திய பூசைகள், மக்களின் மனோநிலை, தொண்டு மனப்பான்மை போன்ற விடயங்களில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது. தற்போது புங்குடுதீவில் ஏறக்குறைய ஐயாயிரம் மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் தொன்னூற்றெட்டு சத வீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்கின்றனர். இப்பின்தங்கிய நிலையை நீக்கி, புங்குடுதீவு மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்கு பாரிய அளவு நிதி தேவைப்படுகின்றது. வெளிநாடுகளில் உள்ள புங்குடுதீவு மக்களால் நடாத்தப்படும் சங்கங்கள் இதனை மனதில் வைத்து, வரும் காலத்தில் செயற்பட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பூவரசம் பொழுது 2007 சிறப்பாக நடைபெறுவதற்கு எனது வாழ்த்துக்கள்.

ந.பேரின்பநாதன்

தலைவர்
பொருளியற்துறை
யாழ் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

சிவமயம்

# புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை
# Pungudutivu Educational Development Board

Date : 19.10.2007

**Patron :**
Prof.V.Sivasamy
N.S.J. Poorajah, J.P.

**President :**
Prof.K. Kugabalan
University of Jaffna.

**Vice President :**
K. Tharmakunasingam
Principal, M.M.V.

**Secretary :**
N. Perinpanathan
University of Jaffna.

**Asst.Secretary :**
S.K. Shanmugalingam
Principal, Ganesha Vidyalayam

**Treasurer:**
A. Thiyagarajah
Retd. Teacher

**Committee Members:**
Dr.K. Sritharan
Kamala Dispensary, Jaffna.

Dr.A.Perinpanathan
Save the Children - Jaffna

T.Thavarajah
Retd. Asst. Director of Education

P. Vairamuththu
Secretary, Pradesiya Saba

N. Kalainathan
Principal, Sri Seththivinayagar M.V.

N. Panchalingam
Principal, Subramaniya M.V.

N. Rajadurai
Principal, Kamalambikai M.V.

## வெளிநாடுகளில் வாழும் புங்குடுதீவு மக்களுக்கு எமது அன்பான வேண்டுகோள்

1990ஆம் ஆண்டின் பின்னர் புங்குடுதீவுக் கிராமத்தின் நிலைபற்றி தாங்கள் அறிந்ததே. அதனை மீண்டும் மீண்டும் தெரிவிக்க வேண்டியதில்லை என நினைக்கின்றேன். தமிழ் மக்களது வாழ்வும் வளமும் கல்வியினூடாகவே உயர்ச்சி பெற்றது. அதனை எத்துன்பம்வரினும் வரிந்துகட்டி தமது உறவுகளை கல்வியினூடாக உயர்த்தினர். எனினும் புங்குடுதீவுக் கிராமத்தின் கல்வித்தரம் 1990களின் பின்னர் தாழ்ந்து உயர்பெற முடியாதளவுக்குச் சென்றுவிட்டது என்றே கூறல் வேண்டும். அதற்குரிய காரணிகளில் முதன்மையானது கல்விப்புலத்தில் அக்கறைகொள்ளாத நிலை பெற்றோர்களிடம் காணப்படுவதேயாகும். இந்நிலை தொடர்விடுவோமாயின் கல்வியறிவற்ற சமூகத்தினை நாம்விட்டுச் சென்றோம் என்றநிலை ஏற்பட வாய்ப்புண்டு.

இந்நிலையில் கல்வி நிலையினை மேம்படுத்துவதற்கு எமது சபை சில ஆலோசனைகளை உங்கள்முன் சமர்ப்பிக்கின்றது.

1. பாலர் கல்வி (Pre school education) இல் நாம் அக்கறை கொள்ள வேண்டும். அதற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளபோதிலும் ஆசிரியர்களுக்கான வேதனம் வழங்குவதில் காணப்படும் இடர்பாடுகள் துரித வளர்ச்சிக்கு தடையாகவுள்ளது. எனவே ஆசிரியர்களுக்கான மாதாந்த வேதனத்தினை தாங்கள் சார்ந்த அமைப்புக்களூடாக வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.
2. ஆண்டு 5 (புலமைப்பரிசில்), க.பொ.த (சாதாரணம்), க.பொ.த (உயர்தரம்) ஆகிய வகுப்புக்களில் கல்வியபயிலும் மாணவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் மீட்டல் வகுப்புக்களை (Tuition Class) ஒழுங்கு செய்தல் அவசியமாகவுள்ளது. நயினாதீவுக் கிராமத்தில் வெளிநாட்டில் வாழ்பவர்களின் உதவியுடன் மேற்படி வகுப்புக்கள் நடைபெறுவதால் பெறுபேறுகளும் உயர்ந்துள்ளது. இம்மாதம் வெளியாகிய ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 5 மாணவர்கள் சித்தியடைந்துள்ள நிலையில் புங்குடுதீவில் ஒரே ஒரு மாணவர்தான் சித்தியடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.
3. இவ்வாறாக மேற்படி வகுப்புக்களில் சித்தியடையும் மாணவர்களை யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்கு உதவி செய்யப்படின் அவர்கள் உயர்வடைவதுடன் அவர்களது குடும்பமும் மேன்மையடைய வாய்ப்புண்டாகலாம்.

சிவமயம்

# புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை
# Pungudutivu Educational Development Board

Date : ......................


***Patron :***
Prof.V.Sivasamy
N.S.J. Poorajah, J.P.

***President :***
Prof.K. Kugabalan
University of Jaffna.

***Vice President :***
K. Tharmakunasingam
Principal, M.M.V.

***Secretary :***
N. Perinpanathan
University of Jaffna.

***Asst.Secretary :***
S.K. Shanmugalingam
Principal, Ganesha Vidyalayam

***Treasurer:***
A. Thiyagarajah
Retd. Teacher

***Committee Members:***
Dr.K. Sritharan
Kamala Dispensary, Jaffna.

Dr.A.Perinpanathan
Save the Children - Jaffna

T.Thavarajah
Retd. Asst. Director of Education

P. Vairamuththu
Secretary, Pradesiya Saba

N. Kalainathan
Principal, Sri Seththivinayagar M.V.

N. Panchalingam
Principal, Subramaniya M.V.

N. Rajadurai
Principal, Kamalambikai M.V.


4. கணனிக்கல்வியினை மாணவர்களுக்கு போதிப்பதற்கு சர்வோதயம் மூலம் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள போதிலும் அது முழுமைபெறவில்லை. மாணவர்களும் அக்கறை கொண்டவர்களாக இருக்கவில்லை. எனவே இக்கல்வியினை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் அவசியமானதாகவுள்ளது.
5. கல்விக்காலம் பெரும்பாலான மாணவர்களிடையே குறுகியதாக இருப்பதால் இளவயது விவாகமும் முறைசாராத விவாகமும் அதிகரித்து செல்கின்றது. இதனால் பல்வேறு பொருளாதார சமூக பண்பாட்டுப் பிரச்சினைகள் உருவாகிவருகின்றது. எனவே கல்வியறிவில் நாட்டம் கொள்ளவைப்பின் இத்தகைய போக்கினை குறைத்துக்கொள்ள வாய்ப்புண்டு.

எனவே வெளிநாடுகளில் வாழும் உங்களின் பரிபூரண ஆதரவு கிடைக்கப்பெறின் இங்கு எஞ்சிவாழும் தாயகத்தை நேசிக்கும் எம்போன்றவர்கள் வாழும் காலம்வரை எம்மாலான உதவிகளைப் புரியலாம் என நம்புகின்றோம். ஆகவே இதனை ஒரு வேண்டுகோளாக ஏற்று உங்களால் முடிந்தளவு எம் உறவுகளுக்கு உதவ வேண்டும் என வேண்டுகின்றோம்.

நன்றி

கா. குகபாலன் ........................ ந. பேரின்பநாதன் ........................

தலைவர் செயலாளர்

**Prof. K. Kugabalan,**
B. A. Hons., M. A., Ph. D.
HEAD/DEPT. OF GEOGRAPHY
UNIVERSITY OF JAFFNA
JAFFNA - SRI LANKA

# EASTERN SOCIAL DEVELOPMENT ORGANIZATION
## கிழக்கு சமுக அபிவிருத்தி நிறுவனம்

E-Mail: esdo_gnanam@yahoo.ca
www.easdo.org

4175 Lawrence ave east
106-Unit
Toronto Ont,
M1E 4T7
CANADA.
Tel:647-408-3345
416-724-7136

51A Selvanayagam Rd
Periya urani,
Batticaloa
SRI LANKA
011-94-65-222-6299

10-Aug-2007

தலைவர்.
புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்.
கனடா கிளை.
கனடா.

நெஞ்சில் ஈரமுள்ள முகம் தெரியாத உறவுகளுக்கு அல்லறும் கிழக்கு மக்களின் இனிய வணக்கங்கள்.

போரினாலும் இயற்கை அனர்தங்களாலும் இடம் பெயர்ந்து உறவுகளை பிரிந்து உடமைகளை இழந்து நிர்கதியாகி இழப்பதற்கு இனி உயிரை தவிர வேறெதுவும் இல்லை என்று கண்களில் ஏக்கத்துடனும் மனதில் பயத்துடனும் எல்லை கோட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது உறவுகளுக்கு நிதந்தர இருப்பிடம் சுயதொழில் வாய்ப்பு உருவாக்குவதற்காக பத்து ஏக்கர் காணி வேண்டுவதற்காக கனடிய டொலர்கள் 5000 வழங்கியதற்கு தங்களுக்கும் தங்கள் சங்க உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நண்றியை தெரிவிக்கிறோம். எதிர் வரும் காலங்களிலும் எமது மக்களின் தேவைகளில் பங்கு கொள்வீர்கள் எனும் ஆவலுடன் தங்களிடம் விடை பெறுகிறோம்.

நண்றி வணக்கம்.

தங்கள் அன்பின்.

A. ஞானம்
தலைவர்
E.S.D.O

# மலரினுள் நுழைய முன்னர் மலர்க்குழுவினருடன் ஓர் நிமிடம்



எம்முன்னோர்களின் வரலாற்றில் தமது தமது வாழ்வியல் பற்றிய முறைகளை ஆவணப்படுத்தும் முறைகள் இன்மையால் இன்று தமிழராகிய நாம் எமது வரலாற்றை தேடவேண்டிய தேவைக்குட் படுத்தப்பட்டுள்ளோம். அகழ்வாராட்சிகள் மூலம் தமிழனின் வரலாறுகள் பிரசித்தி பெற்றதாகவும், உலக நாகரிகங்களிலேயே முதன்மை பெற்றதாகவும், அகழ்வாய்வாளர்களும், ஆய்வாளர்களும் குறிப்பிடும் போது நாம் பெருமைப்படுவது ஏதோ உண்மைதான். நாம் எமதூரினை விட்டு தொன்னூற்றியொன்றின் நடுப்பகுதியில் சிங்களப்படைகளால் விரட்டியடிக்கப்படபின், நாடுகளற்ற ஜிப்சிகள் போன்று ஏதிலிகளாக புலம்பெயர்ந்து பல நாடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறு வாழும் நாடுகளிலே கனடாவில் கிட்டத்தட்ட முப்பதினாயிரம் எம்மூர் உறவுகள் வாழ்வதாகவும் கூறிக்கொள்கின்றோம். ஆனால் எமக்கு எம்மூரின் பழமை தெரிய வில்லை. அதன் வரலாறு தெரியவில்லை. ஏதோ நாம் அவ்வூரைச்சேர்ந்தவர் என்கின்றதை மட்டுமே சொல்லத் தெரிந்திருக்கின்றோம்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே"

நாம் வாழும் இவ்வுலகத்தில் எது சிறப்பானதாக இருந்தாலும், எம்மை பெற்ற தாயும் நாம் பிறந்து, தவழ்ந்து வாழ்ந்த நாடும் அவற்றைவிட உயர்ந்தது என்பதே உண்மை. அதை உணர்ந்து எழுதிய வள்ளுவனுக்கு எமது தமிழின் முதற்கண் வணக்கங்கள்.

நாம் இன்று நவீன உலகமென்னும் ஒன்றுக்குள் பொய்யாக உழன்று கொண்டிருக்கின்றோம். பழையவையை, அவை ஏதோ எமது கௌரவத்தை கெடுப்பதாக எண்ணி ஒதுக்குவதும், கூடவே எமதூரில் எவ்வாறு வாழ்ந்தோம் என்பதை மூடி மறைத்தும் எமது வாழ்வியலை புறக்கணிக்கின்றோம். எமதூரில் நாம் உண்டு, உறங்கியவைகளை மறக்கச்செய்கின்றோம். ஒடியற்பிட்டும், ஒடியற்கூழும், நுங்கும், பனம்பழமும், பனங்கள்ளும், பக்குவமாய் எடுக்கும் பதநீரும், பந்தமும், சூளும் கொண்டு கடலினில் பிடித்த மீன்வகைகள், சித்திரைக்காற்றில் உருண்டுவரும் இராவணன் மீசை (முள்ளி என்றும் அதை சொல்வோம். இருப்பினும் தமிழ் மன்னன் இராவணனின் தடித்த பெருமீசைக்கு அதை உவமானமாக வைத்தனரோ எம்பெரியோர்) நடக்கையில் கால் புதையும் வெண்மணல், பனங்கூடல், தென்னந்தோப்பு, துரவு, பச்சை, சிவப்பு, கறுப்பென கண்ணசைத்து எமை தம்வசம் ஈர்க்கும் ஈச்சை இலந்தைகள், கள்ளிக்காடுகள், முள்ளிக்காடுகள், மருத்துவ மூலிகைகளான நாகதாளி பற்றைகள், கத்தாழைப்பற்றைகள், ஆவரைகள், எருக்குகள், செம்மண்ணும் கழிமண்ணும் சேர்ந்திருக்கும் இடங்கள், உப்புவிளையும் பூமி ஒருபக்கம், உணவு விளையும் பூமி மறுபுறம், கண்டல்காடு ஒருபுறம், கல்லுநிறைபூமி மறுபுறம், சுற்றிவர கடற்கரை சூழ்ந்த கண்கவர் பூமி எமது புங்குடுதீவு.

அங்கு தண்ணீருக்கு பஞ்சமாம். யார் சொன்னார். தண்ணீருக்கு பஞ்சமில்லை. குடி தண்ணீருக்கு தட்டுப்பாடு என்பது உண்மை. அனைத்து இடத்திற்கும் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு இல்லை. சில பகுதிகளுக்கு மட்டும் உண்டு. புங்குடுதீவின் நுழைவாயிலில் (மடத்துவெளி) நல்ல தண்ணீர்க்கிணறுகள் உண்டு. நாச்சிமார் கோவிலடியில் நல்லதண்ணீர் கிணறுகள் உண்டு. கண்ணகை அம்மன் கோவிலடியில் நல்லதண்ணீர் கிணறுகள் உண்டு. (இங்கேதான் இலங்கை யிலேயே பிரசித்தி பெற்ற, எமதூருக்கு வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிலை பயிரிடப் படுகின்றது.) வைத்தியசாலைப்பகுதியில் நன்னீர் கிணறுகள் உண்டு. மாரியம்மன் கோவிலடியில் நன்னீர் கிணறுகள் உண்டு. சங்கத்தார் வயற்பகுதியில் நல்லதண்ணீர் கிணறுககள் உண்டு. நடுவுத் துருத்தியில் உண்டு. குறிகாட்டுவானில் உண்டு. இறுபிட்டி காளிகோவில் பகுதியில் நல்லதண்ணீர் கிணறுகள் உண்டு. கிராஞ்சியம்பதிப்பகுதியிலும் நல்ல தண்ணீர் கிணறுகள் உண்டு. மதவடிப் பிள்ளையார் கோவிலடிப்பகுதியிலும் நல்லதண்ணீர் கிணறுகள் உண்டு. ஊரைதீவு ஐயனார் கோவிற்பகுதியிலும் உண்டு. குறிச்சிக்காட்டுப்பகுதிகளிலும் நல்லதண்ணீர் கிணறுகள் உண்டு. தெங்கந்திடல் பகுதிகளிலும் நல்லதண்ணீர் கிணறுகள் உண்டு. இருப்பினும் பெரும்பாலான பகுதி களில் மழைக்காலம் தவிர்ந்த காலங்களில் குடிப்பதற்கு பாவிக்க முடியாத தண்ணீரே உண்டென் பதை மறுப்பதற்கில்லை. ஆனால் தண்ணீருக்கு பஞ்சமில்லை. குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு. அவ்வளவே.

அவ்வூருக்கென்று ஓர் வரலாறு உண்டு. முற்காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி, தற்போதைய ஈழப்போர்க்காலத்திலும் சரி, பல போரியல் வெற்றிகளை ஈட்டிக்கொடுக்க சாத்தியமாக விருந்தது எமதூர். புங்குடுதீவு எனப்படுவது புங்கு+ஊடு+தீவு என்பதை டானியல் ஜோன் என்னும் அறிஞர் விளக்கியதாக பேராசிரியர் இ.பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகின்றார். வேறு சிலரோ புங்கை மரங்கள் அதிக அளவில் இருந்தமையால் புங்குடுதீவு எனப்பெயர் வந்ததென்கின்றனர். இன்னும் சிலர் அவ்வூர் மக்களின் படிப்பாலும், உழைப்பினதும் வெளிப்பாடாய் பெரும்பெரும் வணிகர்கள், பெரும்பெரும் பதவிகளில் இருப்பவர்கள் என்போரின் வருமானத்தை தன்னகத்தே அது கொண்டிருப் பதால், அதன் காரணமாக பொன் விளையும் பூமியாக அது மிளிர்வதால் பொன்கொடுதீவென்பர். அதுவே மருவிமருவி புங்குடுதீவு என வந்தது என்பர். அனைத்து ஊகங்களுக்கும், ஆய்வுகளுக்கும் ஏதாவது ஒரு வகையில் வழிசமைக்கும் முகமாக எமது மலர்க்குழு இவ்வாண்டு இடப்பெயர் சுட்டும் காரணத்தை கண்டறிவதற்கு முயற்சிசெய்துள்ளது. எமது இம்முயற்சியினூடாக எமது வருங்கால சந்ததியினருக்கும் எம்மூர் பற்றிய பதிவுகளை கொடுக்கக்கூடியதாக இது அமையும் என்றும் நம்புகின்றோம். அவர்களுக்காகவேனும் இப்பொறுப்பை நாம் எடுத்துச்செய்யவேண்டிய தேவை எமக்கு இருக்கின்றது. ஆகையால் எமதூரின் இடப்பெயர் சுட்டும் காரணத்தை அறியும் ஆவலில் தொடக்கியிருக்கின்றோம். அதற்காக நாம் தெரிவு செய்தவர்கள் பெரியவர்களும், எமது நிர்வாக உறுப்பினர்களும். பெரியவர்கள் வாழும் காலத்திலேயே அவர்கள் வாயால் எமது ஊரின் வரலாற்றை சொல்லியிருக்கின்றார்கள். நாம் சேகரிக்கும் தகவல்களை எழுத்தின் ஊடாக கொடுக்கையில் பொய்கள் வரலாம், மெய்களும் வரலாம். ஆனால் நாம் எவை எப்படியாயினும் சொல்லவந்ததை சொல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இதனூடாகவேனும் எது உண்மையென்பதை ஆராயட்டும்.

எமது பெரியவர்கள் எம்வசம் இல்லையேல் எம்மால் எதுவிதமான தகவல்களையும், தரவுகளையும் பெறமுடியாது. அவைகளை ஆவணப்படுத்தவும் முடியாது. ஆகவே இப்போ இருக்கும் பெரியவர்களை வைத்தே இம்முயற்சியை தொடங்கியுள்ளோம். எம்மால் முடிந்தவரையில் அனைத்து வட்டாரங்களின் பிரதிநிதிகளுடனும் தொடர்புகொண்டு கேட்டிருந்தோம். அவர்களினூடேயும், நாம் பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் கிடைத்தவைகளை மட்டுமே பிரசுரிக்க முடிந்துள்ளது. உங்கள் பகுதிகளைப்பற்றி வராதவிடத்து அதற்கான பொறுப்பை நாம் பொறுப்பெடுக்கமுடியாது. காரணம் உங்கள் பகுதியின் நிர்வாக உறுப்பினரே அதற்கான பொறுப்பு. அவர்களுடன் பலமுறை தொடர்பு கொண்டு கேட்டும் அவர்கள் தரவில்லை. ஆகவே உறுப்பினரே பொறுப்பு.

அத்துடன் எமதூரின் காரணப்பெயர்கள் சில பேச்சுவழக்கில் உள்ளது. அப்பகுதிகளின் பெயர்கள் எமக்கு தெரிந்திருந்தும் அவைபற்றி விபரிக்க முடியவில்லை. காரணம் அவைபற்றி தகவல்கள் சொல்வதற்கு பெரியவர்கள் இன்மையால் அவைகளை விடுத்துள்ளோம். எமது இம்முயற்சி வெறும் ஆரம்பமே. வரும் காலங்களில் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கமானது எம் இவ்வாண்டின் முயற்சியை முழுதான வரலாற்று ஆவணமாக்கும் விதமானதாக அமைக்க வேண்டும் என்று மலர்க்குழு சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். காரணம் இம்மலர் தொகுப்பானது கடைசி வேளையிலேயே எமக்கு தரப்பட்டது. எமக்கு தரப்பட்ட கால அவகாசம் மிகக்குறைவு. அதற்குள்ளே இம்மலரை சிறப்பாக செய்துகொடுக்க வேண்டிய கட்டாயம். வேலைப்பழு ஒருபுறம், தகவல் திரட்ட வேண்டிய வேலைகள் மறுபுறம். இவை எல்லாவற்றையும்விட ஒவ்வொரு வருடமும் சிறப்பாகவரும் எமது மலரில் தரம் குறையக்கூடாதென்பதில் கூடிய கவனம். எமக்கு தரப்பட்ட காலம் இரண்டு மாதங்களுக்கு உட்பட்டதே. இருப்பினும் எம்மால் முடிந்தளவு சிறப்பாக செய்திருக்கின்றோம் என்கின்ற திருப்தி.

இருப்பினும் புங்குடுதீவு பழைய மாணவர் சங்கமானது, விடுபட்ட பலபகுதிகளின் இடப்பெயர் சுட்டும் காரணங்களை கண்டறிந்து அவற்றை தொகுத்து எமக்கும், எம் பின்னைய சந்ததியினருக்கும் எமதூர் பற்றிய தெளிவான (அண்ணளவாயாயினும்) வரலாற்றை கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கின்றோம். அதனூடு எமதூரின் வரலாற்றை, கலை பண்பாடுகளை எம்மவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பனம்கிழங்கும், பனம்பழமும் உண்டோம் என்றால் சிரித்தவர்கள் போய் இன்று, புலம் பெயர்ந்தபின் பனம்பழத்தை, பனம்கிழங்கை, பனக்கூடலை புகைப்படம் எடுத்து பாதுகாக்கின்றனர். அதிலிருந்து தமது நினைவுகளை மறக்காது பாதுகாப்பதுடன் தமது பிள்ளைகளுக்கும் அவற்றின் நினைவுகளை ஊட்டுகின்றனர். நன்றிகள் அவர்களுக்கு. அதேபோன்றுதான் எமது ஊர்களின் பெயர்களை பாதுகாக்கும் முயற்சியும். புங்குடுதீவு என்றவுடன்

சிரித்தவர்கள் இன்று, அதன் தொன்மை, ஒற்றுமை, கொடுத்துதவும் பாங்கு, தியாகம் போன்றவற்றாலும் விடாமுயற்சியின் ஊடே வாழ்வியலை உயர்த்தும் சிறப்பையும் கண்டு வியக்கின்றார்கள். தாமும் புங்குடுதீவில் பிறக்கவில்லையேயென ஏங்கித்தவிக்கின்றார்கள். அவ்வாறான எமதூரின் சிறப்பை சில வரிகளுட்குள் சிறைப்படுத்த முடியாது. அதை வருட, வசீகரிக்க முற்பட்டிருக்கின்றோம். ஒவ்வொரு முறைகளும் எமது மலருக்கு ஏதாவது ஓர் விடயத்தை கருப்பொருளாக எடுத்துச்செய்வோம். இம்முறை இடப்பெயர்களை எடுத்திருக்கின்றோம். உங்கள் அறிவுப்பசிக்கும், ஆர்வப்பசிக்கும், திறம்பட வரலாற்றுப் பகுதிகளையும், பேச்சுவழக்கு கதைகளையும், ஊகங்களாக சொல்லப்பட்டவைகளையும் ஆவணப் படுத்தித்தந்திருக்கின்றோம். இதில் பல தொழில் சார்ந்த இடப்பெயர்கள் வரலாம். ஆதலினால் அவை களை ஓர் சாதியை குறிக்கும் பகுதிகளாக நோக்கக்கூடாது. ஒவ்வொருவரும் செய்யும் தொழில் சார்ந்து, அல்லது தொழில் சார்ந்தவர்கள் கூடுதலாக வசிக்கும் பகுதிகளாக அவையிருக்கும். அவ்வளவே.

இம்மலர் பார்த்துவிட்டு எறிவதற்கல்ல. படித்துவிட்டு பக்குவப்படுத்துவதற்கு.இம்மலரினூடாக புங்குடுதீவின் இடப்பெயர் சுட்டும் காரணங்களை கண்டறிவதற்கான அரிய சந்தர்ப்பத்தை வழங்கிய புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ரமேஸ் செந்தில்நாதன் அவர்களுக்கும், அவர் தம் நிர்வாகத்தினருக்கும் என்றென்றும் எமது நன்றிகள் உரித்தாகட்டும். படிக்க ஆவலாயுள்ள உங்களுக்கு பக்கங்களைப் புரட்டித்தருகின்றோம். வாருங்கள் எம்முடன். வந்து படியுங்கள். பாதுகாருங்கள்.

நன்றி

மலர்க்குழு சார்பில்
தவ. கோபி

**மலர்க்குழு :**
தவ. கோபி
வ.ஞானகாந்தன் (ஆத்மஜோதி ஆரம்பகால பதிப்பாளர்)
ச.சிவானந்தன் B.A (கவிஞர் தாட்சாயிணி)
இரா. மோகன்

**உதவி :**
கதிர் மகாத்மன்
சோம சச்சிதானந்தன்

# காணிக்கை



கவிஞர்
எழுத்துப்போராளி
நாட்டுப்பற்றாளர்

## சு.வில்வரெத்தினம்

# சு. வில்வரெத்தினம் வாழ்வனுபவம் கவிதையாக....

- இ.ஜீவகாருண்யன் -

கவிஞர் சு.வில்வரெத்தினம் காலமானார் என்று ஒரு ஞாயிற்றுக்கிழமை தினக்குரலின் கடைசிப் பக்கத்தில் வந்திருந்த செய்தியைப் பார்த்துத் திடுக்கிட்டேன். செய்தி பொய்யாக இருக்குமோ என்று கூடத் தோன்றியது. எங்களுக்கு நெருக்கமான ஒருவர் இறந்து விடுகிற போது எமது அறிவையும் மீறிய உள்மன அவா அது. ஒரு ஏக்கம். இனி ஒருபோதும் சு.வி யைப் பார்க்க முடியாது. அவரது இனிமையான குரலில் பாடல்களைக் கேட்க முடியாது. மனைவிக்குக் கணவன் இல்லை, குழந்தைகளுக்கு அப்பா இல்லை. எம்மைப் போன்ற அவர்மீது அன்பும் பிரியமும் கொண்ட கலை இலக்கிய நண்பர் களுக்கு இனிய நண்பர் இல்லை. சாவு அந்த வகையான மர்மம். இருப்பதை இல்லாததாக்கி விடும் புதிர்.

நான் எவ்வாறு வில்வரத்தினத்தைச் சந்தித் தேன் என்பதை முதலில் சொல்ல வேண்டும். நாங்கள் சந்திக்கும்போது நாம் இருவரும் திருமணமாகாத இளைஞர்கள். எனக்கு வயது இருபத்தாறு. அவருக்கு வயது இருபத்தொன்று. அப்போது பொன்னம்பலத்துக்குக் கூட திருமண மாகி இருக்கவில்லை. அக்காலத்தில் மு.தளையசிங்கம் பெரும் சக்தியாக இயங்கிக் கொண்டிருந்தார். அவரால் கவரப்பட்டவர்களுள் நானும் ஒருவன். மு.த.வைச் சந்திப்பதற்காக புங்குடுதீவுக்குச் சென்றிருந்த போதே மு.த. வீட்டில் சு.வில்வரத்தினத்தை முதல்முதலில் சந்தித்தேன். 1972ம் ஆண்டு என்று நினைக்கிறேன். மு.த.வின் நோக்கு வித்யாசமானது. ஆழமானது. ஆத்மீகத்தில் தொடங்கி அனைத்தையும் தழுவி வளர்ந்து செல்வது. மு.த. வெறும் இலக்கிய வாதியாக மட்டும் இருக்க விரும்பியவரல்ல. இலக்கியத்திலிருந்து அவரது முயற்சிகள் தொடங் கினாலும் சமூகத்தையும் வாழ்க்கையையும் உண்மையான தளத்துக்கு உயர்த்தும் செயல்வீரராக வாழ முனைந்து கொண்டிருந்தார். இராமகிருஷ்ணர், விவேகானந்தர், மகாத்மா காந்தி, அரவிந்தர், பாரதி போன்றோரின் ஆத்மீக வழியைத் தொடர்ந்து முன்னையோரை விட ஆழமாகச் சென்று வாழ்க்கையை மாற்றும் முயற்சி யில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மு.த.வின் இந்த உண்மை வாழ்க்கையே சு.வி. யையும் என்னையும் நெருக்கமாக்கியது. இவ்வாறு சு.வி. யுடன் 1972 ம் ஆண்டில் தொடங்கிய நெருக்கம் 1992 வரை சுமார் 20 வருடங்களுக்கு இடைவிடாது தொடர்ந்தது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் புங்குடுதீவிலுள்ள சர்வமத சங்க இல்லத்தில் பிரார்த்தனையும் அதன் பின்னர் கலந்துரை யாடலும் நடைபெறும். நானும் வாய்ப்புக் கிடைக் கிற போதெல்லாம் அங்கு செல்வேன். கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்த போதும், யாழ்ப் பாணத்தில் வேலை செய்து கொண்டிருந்த போதும், வேறு இடங்களில் வேலை செய்து கொண்டிருந்த போதெல்லாம் புங்குடுதீவுக்குப் போவதும், மு.பொ., சு.வி, யைச் சந்திப்பதும் தொடர்ந்தது. புங்குடுதீவு பெருங்காட்டிலிருந்து ஆலடி ஊடாக சு.வி. யும் அவரது குடும்பமும் கால் நடையாக சிலவேளைகளில் சைக்கிள்களில் வல்லனிலுள்ள சர்வமத இல்லத்துக்கு வெள்ளிக் கிழமை மாலைகளில் செல்வது இன்னும் பசுமை யாக ஞாபகம் இருக்கின்றது. நான் புங்குடுதீ வுக்குச் செல்லும் காலங்களில் நானும் அவர்களு டன் நடந்து செல்வேன். எவ்வளவு சந்தோசமான நாட்கள் அவை. நாட்டில் குழப்பமில்லாத நாட்கள். சு.வி. யின் வார்த்தைகளில் சொல்வதானால் நிலாச் சோறுண்ணல், பாயிழைத்தல், கிடுகு பின்னல், தோட்டத்துக் கிணற்றில் துலா மிதித்தல், பொங்கலிட்டுப் பகிர்ந்துண்ணல், ஆனந்தக் கும்மி யடித்துக் கூட்டிசைத்த வாழ்வு என்று கிராம மணம் பேசும் இயல்பான வாழ்க்கை. திரும்பிப் பார்க்கும் போது அப்படி ஒரு வாழ்க்கை இனி வருமா என்ற ஏக்கமே மிஞ்சுகிறது. எத்தனை நாட்கள் நிலவின் கீழிருந்து இலக்கியம், அரசியல், வேறும் பலவும் கதைத்திருப்போம். கிராமத்து அழகை ரசித்த வாறும், கோயில்களின் மணி ஓசையைக் கேட்ட வாறும் இருப்போம், சில வேளைகளில் அவர் எழுதிய கவிதைகளை வாசித்துக் காட்டி என் அபிப்பிராயத்தைக் கேட்பார். அவர் கவிதைகளை அவர் வாசித்துக் கேட்பது ஒரு தனி அனுபவம். அழகாக குரலை உயர்த்தியும் குறைத்தும் பாவ னையோடு வாசிப்பார். சிலவேளைகளில் மு.பொ.வின் 'மார்கழிக் குமரி', நீலாவணனின் 'ஓ ஓ வண்டிக்காரா,' போன்ற பாடல்களுக்கு மெட்டமைத் துப் பாடுவார். யேசுதாஸின் பாடல்களைத் தனது இனிமையான குரலில் பாடுவார். யேசுதாஸ் மட்டுமல்ல, மதுரைச் சோமு, பாலமுரளி கிருஸ்ணா, கோவிந்தராஜன் இன்னும் பலரது பாடல்கள் அவரது குரலில் ஒலிக்கும். அவரோடு இருப்பதும், பாட்டுக் கேட்பதும், உரையாடுவதும், எல்லாம் ஒரு தனியான, இனிமையான மகிழ்ச்சி யான அனுபவம். அவரது கிராமிய அனுவங்களை அவரது கவிதைகள் பலவற்றில் காணலாம். அவர்களோடு பழகிய அந்த இருபது வருடப் பழக்கங்கள் என்னில் நிறையத் தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக வந்து சேர்ந்தது இந்த யுத்தம், இடப்பெயர்வு, படைகளின்

ஆக்கிரமிப்பு. தமிழ் மக்கள் வாழ்க்கையில் முழு இருள் சூழத் தொடங்கியது. அதனோடு நமது இலக்கியம், ஆத்மீகம் எல்லாம் திசை மாறி விட்டன. உயிர் தரிப்பதற்கான போராட்டமாக மாறி விட்டது. Between the devil and the deep sea என்று சொல்வார்களே அப்படி ஒரு நிலை. 1992ம் ஆண்டு புங்குடுதீவு படையினர் முற்றுகைக்குள்ளானது. அதனோடு எங்களது தொடர்பு விடுபட்டுப் போயிற்று. தீவுப்பகுதிக்கு நான் போக முடியாது. தீவுப் பகுதியிலிருந்து அவர் வர முடியாது. பின்னர் திருகோணமலைக்குக் குடும்பத்தோடு போனார். அதன் பின்னர் இரண்டொரு கடிதங்கள். அவர் வெளியிட்ட நெற்றி மண், காலத்துயர் ஆகிய வற்றை அனுப்பி வைத்திருந்தார். 2003ம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் நடந்த தூண்டி இலக்கிய விழாவில் கடைசியாகச் சந்தித்தோம். அவர் அப்போது பூரண ஆரோக்கியத்துடன் hale and hearty என்று சொல்வார்களே அப்படி யிருந்தார். என்னைவிட நீண்ட காலம் உயிர் வாழ்வார் என்று நினைத்துக் கொண்டேன். அந்தக் கணக்கு தவறாகி விட்டது. இந்தக் கணக்குகள் எல்லாம் புத்திக்குரியவை என்று எனக்கு இப்போது படுகிறது. இப்போது சு.வி. எம்மிடையேயில்லை. இனி அவரது நூல்களுடனும் நினைவுகளுடனும் தான் நாம் வாழ வேண்டும்.

2 சு.வி யின் ஆளுமை நான்கு பரிமாணங்களைக் கொண்டது.

1. மனம் திறந்த உண்மையான நண்பர் யாரோடும் சாதி, சமய, இன பேதமற்று நெருங்கி நட்புக் கொள்ளும் நண்பர். வெறுப்போ புறக்கணிப்போ யாரிடமும் எப்போதும் காட்டியதில்லை. அன்பால் அனைவரையும் அணைத்துச் செல்லும் இனிய சுபாவம் அவரோடு பழகிய பலரையும் ஒட்டி வைத்திருந்தது. முகமலர்ந்த உறவு அவரது.

2. தன்னைச் சுற்றியுள்ள அனைவரிலும் அக்கறை கொண்ட நடைமுறையில் அவ்வாறே வாழ்ந்த சமூகத் தொண்டன். யாருக்குக் கஷ்டம் நேரினும் பொருளாதார உதவி தொடக்கம் வேறு வகையிலான உதவிகளையும் தயக்கமின்றி உதவிட முன்வருவார்.

3. ஆத்மீகர் மு.த.வின் வழியில் அவரின் மறைவின் பின்னரும் தீவிரமாக இயங்கியவர்.

4. வாழ்க்கையைப் பல்வேறு கோணங்களில் பார்த்து தன் கவிதைகளைப் படைத்தவர். நட்பு, சமூக நோக்கு, அரசியல், ஆத்மீகம், இயற்கை நயப்பு, உண்மையைத் தேடல் அனைத்தும் அவரது கவிதைகளுடாக வெளிப்படுகின்றன.

3 சு.வி யின் கவிதைகள் 'உயிர்த்தெழுங் காலத் துக்காக' என்ற தலைப்பில் தொகுப்பாக வந்துள்ளன. 192 கவிதைகள், 402 பக்கங்களில். அவரது கவிதைகள், அவரது வாழ்க்கை நோக்கு, இலட்சியங்கள் எவை என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. அகங்களும் முகங்களும், காலத்துயர், காற்று வெளிக் கிராமம், நெற்றி மண் என்ற நான்கு தொகுதிகளிலுள்ள கவிதைகளும் அதன் பின்னர் எழுதிய கவிதைகளும் சேர்ந்து உருவாகியிருக்கிறது, 'உயிர்த்தெழுங் காலத்துக் காக'. சு.வி.யின் வாழ்க்கையில் ஏற்பட்ட தொடர்ச் சியான மனப்பதிவுகள், அவரைப் பாதித்த விடயங்கள், வாழ்க்கையில் அவர் கொண்ட ஈடுபாடுகள் அனைத்தையும் கண்டறிய இக் கவிதைத் தொகுதி உதவும். இன்னொரு விதத்தில் சொல்வதானால் அவரது பொய்யும் ஏமாற்றுமற்ற வாழ்வனுபவமே கவிதையாக மலர்ந்துள்ளது.

சு.வி.யின் கவிதைகள் அவரது வாழ்க்கை யின் நான்கு கட்டங்களைப் பிரதிபலிப்பன. புங்குடுதீவில் ஆத்மீகத் தொண்டுகள் செய்து கொண்டிருந்தபோது எழுதியவை, 'அகங்களும் முகங்களும்'. அது 1985 இல் வெளிவந்தது. தீவுப் பகுதி படையினரால் முற்றுகையிடப்பட்டபோது யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த சு.வி. புங்குடுதீவுக்குத் திரும்பிப் போக முடியாமல் மனைவியையும் மக்களையும் பிரிந்து யாழ்ப்பாணத்தில் பிரிவுத் துயரால் வாடியபோது 1992 இல் எழுதப்பட்டவை, 'காலத்துயர்' கவிதை கள். பின்னர் புங்குடுதீவுக்குத் திரும்பிப்போய் புங்குடுதீவில் படையினர் கட்டுப்பாட்டின்கீழ் மக்கள் பட்ட துன்பங்களை விபரிப்பவை, 1993-94 இல் எழுதிய 'காற்றுவெளிக் கிராமம்'. புங்குடுதீ விலிருந்து வெளியேறி திருக்கோணமலை யிலிருந்து எழுதிய 'நெற்றி மண்', 'உயிர்த்தெழுங் காலத்துக்காக'. அவை அவர் இடைவிடாது கவிதைகளை எழுதியவாறே வாழ்ந்தார் என்பதைக் காட்டுகின்றன.

இயல்பாகவே அவரிடமுள்ள ஆத்மீக ஈடுபாடு அவரது எல்லாக் கவிதைகளிலும் ஊடாடி நிற்பதைக் காண முடியும். அத்தோடு அவரைப் பாதித்த சம்பவங்களும் அவரது கவிதையின் கருப்பொருளாகின்றன. மு.நித்தியானந்தனும் நிர்மலாவும் சிறையிலடைக்கப்பட்ட சம்பவம் தொடக்கம் 1983 யூலைக் கலவரம், முஸ்லீம் தமிழ்க் கிராமங்கள் மோதிக் கொண்டவை, கொக்கட்டிச் சோலை, செம்மணி, பண்டாரவளைக் கொலைகள், நிமலராஜன் படுகொலை போன்ற விடயங்கள் அவரைப் பாதித்துக் கவிதைகளாகப்

பிறந்துள்ளன. விடுகதைகளும் புதிர்களும் கருப்பொருளாக கொண்ட தமிழகக் கவிதை மரபிலிருந்து ஈழத்துக் கவிஞர்கள் தனித்துவமான வர்கள். ஆழமான கருப்பொருளைக் கையாண்டு கலைத்துவமாகக் கவிதை படைப்பவர்கள் என்ப தற்குச் சான்றாக நிற்கும் ஈழத்துக் கவிஞர்களுள் சு.வில்வரத்தினம் முக்கியமானவர்.

சு.வி.யை நினைக்கையில் முதலில் நினைவுக்கு வருவது அவரது கம்பீரமான தோற்றம். அடுத்து இனிமையாகப் பாடக் கூடிய அவரது இனிமையான குரல். பழந்தமிழ் இலக் கியங்களிலிருந்து பாரதியூடாக இன்றுவரை யுள்ள தமிழக ஈழத்துக் கவிஞர்களிடமிருந்து மேற் கோள் காட்டி அதனைத் தன் குரலில் பாடக் கூடிய பரிச்சயம். அவருக்குப் பின்னால் அவரது வாழ்க் கையை ஆத்மீக, சமுதாயச் செயற்பாடு களுக்காக அர்ப்பணித்த வரலாறு உள்ளது. அவர் புங்குடுதீவில் இருந்தாலும் திருகோணமலையில் இருந்தாலும் அல்லது வேறு எங்கிருந்தாலும் தன் கலைத்துவ செயற்பாட்டலைகளைச் சுற்றியுள்ள வர்களிடையே தொற்ற வைத்து இயக்கமாக நின்றியங்கக் கூடிய ஆளுமை பெற்றவர். கருத்துக் களையும் உணர்வுகளையும் கவிதையில் தந்து விட்டு ஒதுங்கி நின்றவரல்ல. தான் நம்பும் இலட்சியத்துக்காகத் தன்னை அர்ப்பணித்து இயங்கியவர். மு.தளையசிங்கம் பிரகடனப் படுத்திய வாழ்க்கையையே இலக்கியமாக வாழ வேண்டும், வாழ்க்கை வேறு, இலக்கியம் வேறாக இருக்கக் கூடாது, சொன்னபடி வாழ வேண்டும், வாழ்வதையேய சொல்ல வேண்டும் என்பதைத் தன் வாழ்க்கையாகத் தெரிவு கொண்டவர்.

அகங்களும் முகங்களும் என்ற அவரது முதற் தொகுதியிலுள்ள முதற் கவிதையே ஆத்மீகம் பற்றியதுதான்.

உலகமே
இருளில் மூழ்கித் தவிக்கும்
கரீய பெரிய முட்டையாய்..

அவநம்பிக்கை போலத் தொடங்கும் இந்த வரிகளின் பின்னால் பெரும் நம்பிக்கை தரும் செய்தியை வைத்திருக்கிறார். உலகை உருவக முட்டையாக்கி குஞ்சு பொரிப்பதென அழகான படிமத்தைத் தந்திருக்கிறார். முட்டையுள் இருப்பது பரிதிக் குஞ்சு, பேர் ஞானம். உராய்வு என்பது இன்னொரு சிறந்த கவிதை.

கோளங்கள் நகரும்போது
ஒன்றோடொன்றுராய்ந்து
கீதம் எழுப்புதாம்.

என்று தொடங்கும் கவிதை நட்சத்திர அழகை வர்ணிப்பதூடாக பெரும் பிரபஞ்சப் பேருணர்வை உள்ளிறக்குகிறது. இயற்கையோடு ஒன்றிணைந்து, இயற்கையினூடாக ஐன்ஸ்ரைன் காணும் பிரபஞ்சத்தையும் தாண்டிய பேருணர்வை எம்மிடையே எழுப்புகிறார். இன்னும் இந்தத் தொகுதி விடியல், மழை, நட்சத்திரங்கள், நிலவு, கிராமத்து அழகு எனப் பல்வேறு இயற்கையையும் தொட்டுச் செல்கிறது. பிரமாண்டமான இயற்கையிலிருந்து சிறிது சிறிதாகத் தோன்றும் நிகழ்வுகள் வரை பேரியற்கையின் முடிவுறாத செயற்பாடுகள். கருவறையில் குழந்தைபோல நாமும் இயற்கைதான். பிரிக்கப்பட முடியாத பேரியற்கை தன் ஒவ்வொரு சிறு அம்சத்திலும் தன் முழுமையை உணர்த்தி நிற்கும் அற்புதத்தை கவிஞர் சு.வி. தன் இயற்கையோடியைந்த அனுபவத்தினூடாகத் தந்திருக்கிறார்.

அகங்களும் முகங்களும் தொகுதியில் காணப்படும் இந்தத் திறந்த மனலயிப்பு அடுத்த தொகுதியான காலத் துயரில் இல்லை. ஊரைப் பிரிந்த துயரம், ஏக்கம், தாபம், மனைவி மக்களைப் பிரிந்தது என மாறி மாறி ஒலிக்கிறது காலத்துயரில்.

'இரத்தப் பிடிப்பின்றி சோகையுற்றோம்'
'கூவிக் கூவிப் பரவெளியெங்கும்
அலையும் அவள் குரல்'

என்று செல்லும் அவரது துயர் அந்தத் தொகுதியின் பல கவிதைகளிலும் ஒலிக்கிறது. பல கவிதைகளின் தலைப்புகளே அதனைப் புலப்படுத்துகின்றன. 'பிடுங்கப்பட்ட சூரிய காந்திக்கான கவிதை', 'காலத்துயர்', 'தனித்து விடப்பட்ட ஒரு தீவின் புதல்வனுக்கு', 'குருதிக் காட்டில் ஓலங்கள்', 'தோப்பிழந்த குயிலின் துயர்', 'குருதி உறைந்த மௌனத்தினின்றும்'.

'காற்று வெளிக் கிராமம்' சற்று வித்யாச மான கவிதைகளைக் கொண்டது. காற்றையே சாட்சியாக வைத்து கவிதை சொல்கிறார் கவிஞர். படையினர் முற்றுகையோடு வெறிச்சோடிய புங்குடுதீவில் இருந்த கவிஞர் தன் அனுபவங்களை மிக அற்புதமாகவே அந்தத் தொகுதிக் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். முன்னர் இருந்த சீரும் சிறப்பும் இப்போதைய பரிதாப நிலையும் படையினர் ஆட்சியோடு பறிக்கப்பட்டுள்ள மக்கள் சுதந்திரமும் அவரது கவிதைப் பொருளாக இருக்கின்றன.

வெளியாரின் வருகையோடு
வேர் கொண்ட வாழ்வைப் பிடுங்கிக் கொண்டு
மக்களெல்லாம் வெளியேறிய பின்
விடியப் பார்த்தால்
வாழ்வெனும் வெள்ளம்
வற்றிக் கிடந்த திடலாய் கிராமம்
கை நிரம்ப வெறுமையுடன்
கந்தலுடைய பூண்ட கிராமம்

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு முறுகப் பிணைந்த வேர்கள், திரண்ட மிடுக்கு, கூட்டுக்களி, பூரிப்பைப் பொங்க லிட்டுப் பகிர்ந்துண்ட, ஆனந்தத்தைக் குடியமர்த்தி, கூட்டிசைந்த வாழ்வு என்று பலபடியாகக் கிராமிய வாழ்க்கையின் சிறப்பைக் காட்டிய அவர் 'காற்று வெளிக் கிராமம்' கவிதைகளில் எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்.

அடுத்த தொகுதி 'நெற்றி மண்'. இந்தத் தொகுதியில் 'காலத்துயர்' இலும் 'காற்றுவெளிக் கிராமம்' இலும் காணப்பட்ட துயரச் சாயல் குறைந்தே காணப்படுகிறது. கிராமப் புறத்தின் எளிமையைப் புலப்படுத்துவதினூடாக அந்தக் கலாச்சாரத்துக்குப் பின்னணியாக இருக்கும் ஆத்மீகச் சூழலையும் படம் பிடிக்கிறார். உணர் வெளிப்பரப்பு, தாய்மை, நித்யம் என்ற ஆத்மீகத் தளத்துக்குரிய சொற்களைக் கையாண்டு கவிதைகளை வார்க்கிறார்.

4 எதற்கும் விட்டுக் கொடுக்காத, நசிந்து போகாத சுயநலங்களுக்காக ஓடாத, உறுதியான நேர்மையான பண்புகளைக் கொண்ட சு.வி. யை, அந்தப் பண்புகளை சமூகத்துள் உள்ளிறக் குவதற்கு தன்னை அர்ப்பணித்துச் செயல்பட்ட சு.வி. யை uncompromising courage, ruthless intellectual honesty யை சமரசமற்ற துணிவையும் விட்டுக்கொடுக்காத அறிவு நேர்மையையும்- அவரது பல கவிதைகளில் காணலாம். அவரது சமயம் பற்றிய பார்வையையும், அரசியல், சமூக இலக்கியவாதிகளிடையே காணப்படும் போலித் தனங்களையும் எவ்வாறு தோலுரித்துக் காட்டு கிறார் என்பதையும் பார்க்க வேண்டும்.

'என்பிலிகளுக்கு' என்ற கவிதையை முதலில் பார்ப்போம்.

என்பிலிகளுக்கு வாழ்தல் இலகு,
கூனல் குனிதல்
நாலாய் வளைந்து நமஸ்கரித்தல்
நாய் வாலாய்க் குழைதலென
எல்லா வகையிலும் ...

என்று தொடங்கும் கவிதையை முழுவதும் வாசித்துப் பார்த்தால் அதனூடு ஓடும் எள்ளல் சுவையோடு தரப்படும் போலி மனிதர்களின் குணோபாவங்களை ரசித்து மகிழலாம்.

அடுத்து, 'புத்தரின் மௌனம் எடுத்த பேச்சுக்குரல்' பற்றி பேசுவோம். நேராக மனதைத் தைக்கின்ற பேச்சு நடையில், நேர் நின்று புத்தரே பேசுகின்ற தோரணையில் எழுதப்பட்டது அது, அது வீரியமான கவிதை வீச்சுக்கு நல்லதோர் உதாரணம்.

பௌத்தத்தின் பேரால் தோரணம் கட்டிய
வீதிகள் தோறும் நீங்கள் நிகழ்த்திய
இன சங்கார பெரகராக்களின் பின்னரும்
இங்கே எனக்கு அலங்கார இருக்கையோ?

எனது பெயரால்
ஆக்கிரமிப்பு, அடக்குமுறை
எனது பெயரால்தான் இனப்படுகொலை
குருதி அபிஷேகம் இவையெல்லாம்.

எனது ராஜாங்கத்தையே
உதறி நடந்த என்னைக்
கல்லாக்கிவிட்டு உங்கள்
சிங்கள பௌத்த ராஜாங்கத்துள்
சிம்மாசனம் தந்து
சிறை வைக்கப் பார்க்கிறீர்கள்.

இதைவிட அழகாக இன்றைய இலங்கை யின் பௌத்த சமயத்தை விமர்சிக்க முடியாது. இன சங்காரப் பெரகரா, சிங்கள பௌத்த ராஜாங்கம், என அழுத்தம் திருத்தமாக இன்றைய பௌத்தத்தின் சீரழிந்த நிலையைப் புலப்படுத்தி விடுகிறார்.

இதேபோன்று இன்று நடைமுறையி லிருக்கும் சைவசமயம் (இந்து சமயம்) அதன் போலித்தன்மை பாசாங்கு (hypocrisy) பற்றி ஆழமாகவே விமர்சனம் செய்கிறார். எடுத்த வுடனேயே ஆசாடபூதி சைவப் பெருமக்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார். (ஸ்தல புராணம்)

கோயில் கும்பிடுவதில்
எங்கள் சைவத்தமிழரை
குறை சொல்ல ஏலாது. நீறிட்ட நெற்றியில்
சந்தனப் பொட்டும்
மிஞ்சின சந்தனம மேனி முழுவதும்
பூசின கோலமும் சரிகைச் சால்வையொடு
நீளவே தொங்கும் தங்கச் சங்கிலியும்

நிச்சயமாக இந்த வகையான வேஷதாரி பக்தர் குழாமை எந்தக் கோயிலிலும் பார்க்க முடியும். கோயில் கட்டுவதிலும் அவர்களுக்கிடையே போட்டி.

அய்யனார் கோயில், வைரவர் கோயில்
அம்மன் கோயில், பிள்ளையார் கோயில்
.....................................................................
கறையான் புற்றுக்கள் கட்டினாற் போல.

அந்தக் கோயில்களைக் கட்டுவதும் ஒரு வியாபாரம். அதனையும் கவிஞர் சுட்டிக் காட்டவே செய்கிறார்.

கோயில் காசை றோளில் விட்டதும்
குருக்கள் மாரைப் பெருச்சாளி ஆக்கியதும்
குறைகளை மறைக்கக் கோபுரம் எழுப்பி
கோபுரத்தில் பாதியை மறைக்கும்
கும்பிடு கள்ளரைக் கொண்டு திரிந்ததும்

இதைவிட அழகாக இன்றைய கோயில் வழிபாட்டு முறையின் வேஷத்தைக் கிழிக்க முடியாது. இந்தச் சைவ வேளாண் மரபு சாதி வேற்றுமையை வளர்ப்பதிலும் முன்னின்று உழைக்கிறது. அதையும் கவிஞர் விமர்சிக்கவே செய்கிறார்.

உள்ளே விடுங்கள் உரிமை கொடுங்கள்
உரிமை இழந்தோர் உரத்துக் கேட்டார்

மாவிட்டபுரம் கந்தன் கோயில்
பன்றித் தலைச்சி அம்மன் கோயில்
வல்லிபுரத்து ஆழ்வார் கோயில்
எங்கும் உரிமைக் குரல்கள் கேட்டன

உறங்கிக் கிடந்த சைவ மரபு
தன்னிலை மறந்து ஆடத் தொடங்கியது

சன்னதம் கொண்ட அன்புச் சைவம்
சண்டித்தனங்கள் செய்ய எழுந்தது

கவனியுங்கள்: சண்டித்தனம், அன்புச் சைவம் என்ற வார்த்தைகளை.

அழகான சைவ வேளாண் மரபின் கோயில் கலாச்சாரம் பற்றி விரிவாகவே விளக்குகிறார். இந்தக் கோயில் கலாச்சாரத்துக்கும் ஆத்மீகக் கலாச்சாரத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வது அவசியமாகும். கோயில் கலாச்சாரம் ஆத்மீக உண்மைகளை விட்டு விட்டு வெறும் சடங்குகளையே பிடித்துக் கொண்டிருக் கிறது. தினக்குரல் பத்திரிகை சு.வி.யின் நேர் காணலின் முன் அறிமுகத்தில் ராம் கதிர்வேல் குறிப்பிடுவது போல, 'சு.வி. யின் ஆத்மீக ஈடுபாடு என்பது கோயில் மரபு, ஆசார மரபு, மற்றும் பிராமணிய மரபுக்கு எதிரானதாகவும் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் எழுச்சிக்கு வித்திடுவதாகவும் அமைந்தது.' இந்த இடத்தில் இவர் மு.த.வுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்ட சாதியினர் கோயில் நல்ல தண்ணீர் கிணற்றில் (தீவுப்பகுதியின் பெரும்பாலான இடங்களில் நல்ல குடி தண்ணீர் கிடைப்பது அரிது) தண்ணீர் அள்ள அனுமதிக்க வேண்டும் என்று சத்தியாக்கிரகம் இருந்து உயர் சாதியினரால் ஏவப்பட்ட பொலிஸ் படையினரால் தாக்கப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டவர் என்பதும் நினைவு கூறப்பட வேண்டியது.

'விமர்சன விகடங்கள்' என்பது ஒரு சுவை யான கவிதை. இது ஒரு எழுத்தாளரைப் பற்றிய விமர்சனமும் ஆகும். நானும் அந்த வெளியீட்டு விழாவுக்குப் போயிருந்தேன். பிரபல நாவலா சிரியர் ஒருவர் குறிப்பிட்ட நூலை விமர்சிக்கும்படி அழைக்கப்பட்டிருந்தார். அவர் அந்நூலை விமர்சனம் செய்வதை விட்டுவிட்டு தன் பாட்டுக்கு சம்பந்தா சம்பந்தமில்லாமல் கதைமேல் கதை யாகச் சொல்லித்தன் பேச்சை முடித்தார், கேட் போர் அனைவரும் படுமடையர்கள் என்ற நினைப் போடு. அதை எவ்வளவு சுவையாகச் சு.வி. சொல் கிறார் பாருங்கள்:

எளிமையாக விளக்கப் போனால்
இதற்கொரு கதை சொல்வேன் என்று
கதை சொல்லத் தொடங்கி மனு'ன் ஓர்
கழுதையின் மேலேறித் தொற்றி
கழுதையை விட்டிறங்கி பின்னொரு
குதிரையின் பிடரிமயிர் பிடித்தேறிப்
பெருவெளிச் சவாரி செய்த பின்
குதிரை விட்டிறங்கி
குரங்கொன்றின் வாலைப் பற்றி
குட்டிக் கதைகளின்
கும்பலில் இடை நழுவி
விமர்சனம் மெல்ல
எங்கோ விடையூர்ந்தேகிற்று

இது போன்று வருகின்ற இன்னொரு எள்ளல் கவிதைதான் 'காற்றுள்ள போதே...' இதுவும் ஒரு பிரபல நாவலாசிரியரைப் பற்றியதுதான்.

எத்தனை நாள் தான்
சுப்பற்ற கொல்லைக்குள்ளே புரட்சிச்
சுலோகங்கள் விதைத்தபடி.
போக்கையும் மாற்றி புதுச் சுலோகங்கள்
விதைக்கக் கற்போம். இல்லையெனின்
நமக்கெல்லாம் நாற்காலி யார் தருவார்?

அந்தச் சந்தர்ப்பவாத சுயநல எழுத்தாளர்களைச் சாடுகிறார். முக்கியமாக சந்தர்ப்பத்துக்கு ஏற்ற வாறு பொதுவுடைமையும் 'தாய் நாடு'ம் பற்றிப் பேசும் எழுத்தாளர்களைப் பற்றியது பின்வருவது:

வேறென்ன?
முன் கழற்றிப் போன முகமூடிகள் வீட்டுக்
கோடியுள்ளே பக்குவமாய்க்
கொழுவிக் கிடக்கிறது

பின்னொரு கால்
திரும்பவும் அணிந்து கொள்ளத்
தேவைப்படுமென்ற உங்கள்
தீர்க்க தரிசனம் வாழ்க... வாழ்க...

என்று எள்ளலோடு முடிக்கிறார். இதேபோன்று எள்ளல் தொனியோடு சொல்லும் கவிதைகள் பல உள்ளன. தமிழாராய்ச்சி மகா நாட்டின் போது

இழக்கப்பட்ட ஒன்பது உயிர்களுக்கான நினைவுச் சின்னம் பொலிசாரால் உடைக்கப்பட்டது. அதனை மீளக் கட்டிய யு.என்.பி. கட்சி பிரதமர் 'இதயத்தை உங்களிடமே விட்டுச் செல்கிறேன்' என்று சொல்லி யதும், நினைவுத் தூண்களுக்கு மலர் வளையம் சாத்தியதுமான 'பாசாங்கு' நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து எழுதியது, 'அகங்களும் முகங்களும் 1' யாழ்ப்பாண நூல் நிலையம், கடைகள் கொளுத்தப்பட்டு யாழ்ப்பாண நகரமே துயரத்தில் ஆழ்ந்திருந்தபோது அதைப்பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாமல் தேர்தல் வெற்றியில் பெரு மகிழ்ச்சி கொள்ளும் அரசியல்வாதிகளைப் பற்றி மட்டுமல்ல ஜனநாயகத்தின் போலித்தன்மை யையும் புட்டுக் காட்டுகிறது, அகங்களும் முகங் களும் 2 என்ற கவிதை.

தேர்தல் வெற்றித் திருவிழா ஊர்வலம்
நம்மவர்
மேளம் கொட்டுகிறார்,
குதிக்கிறார், விழுகிறார்
மாலை மரியாதைகளுடன்.

வெட்கம் கெட்டவர்கள்
வேற்றார் இட்ட நெருப்பின்
வெக்கை தணிந்து இன்னும்
சாம்பல் அள்ளவில்லை

தூர்ந்து போன தேசத்தை
தூக்கி நிறுத்த தோள் கொடுப்பாரில்லை
அதற்குள்
தேர்தல் வெற்றி ஊர்வலம் வருகிறார்

வேற்றார் (பேரினவாதிகள்) இட்ட நெருப்பின் (யாழ்ப்பாண நூலகம், பெரிய கடை முழுவதும்) எரிக்கப்பட்ட காட்சியைக் கண்டவர்களுக்கு அதன் தாக்கம் புரியும். கவிஞர் தானும் மு.புஸ்பராஜனும் நூலகம் எரிந்து கொண்டிருந்ததைக் கண்டதாக நேரில் கண்டதாக தினக்குரல் நேர்காணலில் சு.வி. தெரிவித்துள்ளார். (கவிஞர் எம்.ஏ.நு·.மானும் இந்தக் காட்சியைக் கண்முன் நிறுத்தும்படியாக ஒரு கவிதை எழுதியுள்ளார்.) பிரேதம் எரிந்து சுடலையில் சாம்பல் அள்ளும் நிகழ்ச்சி நடை பெறுகிறது. அதற்கிடையில் தேர்தல் வெற்றிக் கொண்டாண்டம்.

5 சு.வி. சில இடங்களில் எதுகை மோனை போன்ற வற்றிற்கு இடம் கொடுத்தும், பல இடங்களில் அவற்றைப் புறக்கணிப்பவராகவுமே காணப் படுகிறார். அவர் தன்னைப் பற்றிச் சொல்கையில் நான் யாப்பிலக்கணம் கற்றதில்லை, இலக்கணத் தன்மையுள்ளவை எனக்குப் பிடிக்காமல் போய் விட்டன, ஆனால் ஓசை நயமென்பது என் கவிதை யின் உள்ளிசையாக இருக்கிறது என்கிறார். அவரது பல கவிதைகளில் மொழியை உள்ளடக் கத்துக்கு ஏற்ப நகர்த்திச் செல்வதன் மூலம் 'உள்மன ஓசை மூலம்' உணர்வுகள் தொற்றிக் கொள்ளச் செய்கிறார்.

கவிஞரே நேர் நின்று கவிதை சொல்லும் பாணியையோ அல்லது அவரே கவிதைக்குப் பின்னால் நின்று படர்க்கையில் சொல்வது மாதிரி யான பாங்கையோ அவர் பெரும்பாலும் தன் கவி தையாக்கத்தில் கையாண்டுள்ளார்.

கவிஞரின் சொல்வளம் அபாரமானது. அவரே சொல்வது போல 'தேவாரம் முதல் நம்மாழ் வார் பாசுரங்கள் வரை கம்பன் முதல் பாரதி வரை மஹாகவி முதல் ஈழத்து இளம் கவிஞர்கள் வரை' படித்துச் சுவைத்து தன்னை நிறையவே வளப் படுத்தியுள்ளார். வார்த்தைகளை லாவகமாகக் கையாளும் சு.வி.யின் இயல்பான ஓட்டம் ஒன்றிருக் கிறது. தேவைக்கேற்ப 'தேனிப்பதில்லை' 'சிவனித்தல்' போன்ற பெயர்ச் சொற்களை வினை யாக்கம் செய்வது போன்ற முயற்சிகள் அவரது மொழி வளத்துக்கு இன்னோர் எடுத்துக்காட்டு. அடுத்த அம்சம் அவரது வீச்சான வெளிப்பாடு. 'புத்தரின் மௌனம் எடுத்த பேச்சுக்குரல்' தொடக் கம் பல கவிதைகளில் இந்த 'வீச்சான' வெளிப் பாட்டைக் காண முடியும். அவர் கிராமிய வாழ்க் கையில் கொண்ட ஈடுபாடு அவரது பல கவிதை களில் எதிரொலிக்கிறது.

'நிலாச் சோறுண்ணல்
நிலா ஊஞ்சலாடல்
பாயிழைத்தல், கிடுகு பின்னல்
தோட்டத்து கிணற்றில்
துலா மிதித்து...

என்றும்,

அம்மா ஒவ்வொரு நாளும்
முற்றம் பெருக்குவாள்
குப்பைகள் சேரும் கொளுத்தி எரிப்பாள்

என்றும் வருகின்ற வரிகளை இவற்றுக்கு உதாரண மாகக் காட்டலாம். 'காற்று வெளிக் கிராமம்' முழுவதுமே கிராமிய அழகையும் அதன் இன்றைய பரிதாப நிலையையும் சுட்டிக் காட்டும் கவிதை களாக உள்ளன.

● ● ●

பூவரசம்பொழுது சிறப்புற வாழ்த்துக்கள்

Taste & Quality

# BABU

**BABU CATERING, TAKE-OUT & CATREING**

**வெகுவிரைவில் புதிய சேவைகள்**

## Delivery Service
## More Faster Service
## Express Pick-up Counters

# 416-298-2228

**4800 Sheppard Ave. East, 201, Scarborough, ON.**
**(McCowan & Sheppard)**

# நினைத்துப்பார்......

- த.வடிவேலு -

ஈழத்தின் வடபால் உள்ளதும், கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்ட சப்த தீவுகளில் ஒன்றாக குறிப்பிடப்பட்டி ருப்பது புங்குடுதீவு. கந்த புராணத்தில் புங்குடுதீவு கிரவுஞ்சம் என குறிப்பிடப் பட்டுள்ளது. கடந்த பதினாறாம் நூற்றாண்டுக் காலப் பகுதி அந்நியரான ஒல்லாந்தர் ஈழத்தை ஆட்சிபுரிந்த காலம். அவர்கள் இத்தீவுக்கு மிடில்பேர்க் (Middle Burgh) எனப்பெயரிட் டிருந்தனர். மிதிகல் என்பது இதன் அர்த்தமாகும். நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு ஆகிய தீவுமக்கள் வெளிநகர்ப்பிரயாணத் தொடர்புத் தொடு இடமாய் விளங்குவது இத்தீவின் மேற்குக் கரையின் ஒருபகுதியான குறிகாட்டுவான் என்பதாகும். இப்பகுதி கடற்றுறையாய் விளங்கி வருகின்றது. இத்துறையிலிருந்து நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, வேலணைத்தீவு ஆகிய தீவுகள் கண்பார்வைக்கு எட்டியதாக குறித்துப்பார்க்க முடியுமாதலால் குறிகாட்டுவான் எனப்பெயர் வழங்களா யிற்று என்பர்.

அரை நூற்றாண்டுக்கு முன் இத்தீவி லிருந்து யாழ்நகர் செல்வதாயின் கடல் வழிப்பிரயாணமே வாய்த்திருந்தது. தரை வழிப் பிரயாணம் வலு சிரம காரியமாக விருந்துள்ளது. முற்போதைய நம் ஆன் றோர் பலரின் முயற்சியினாலும், அப்போதைய நல் அரசின் கருணைச் செயலாலும் 1938-1952க்கு இடைப் பட்ட ஆண்டுக்காலப் பகுதியில் யாழ்நகருக்கும், புங்குடுதீவுக்கும் தொடர்நெடுஞ்சாலை அமைவுற்ற தாகும். இதுபெரும் பேறாகும். இதன்மூலம் தீவு மக்களுக்குத் தரைவழிப்பிரயாணம் சுலப மாயிற்று, சுகமாயிற்று.

முன்பு இத்தீவு மக்களின் யாழ்நகர்ப் பிரயாணம் வடகரையான மடத்துறை யிலிருந்து கடல்வழியாக அக்கரை ஊரான வேலணை ஊடாகச் சென்று மறுகடல் கடந்தாற்றான் யாழ் நகர் அடையலாம். நெடுஞ்சாலை அமைவினால் தற்போது மடத்துவெளித்துறை பாவனையற்ற தாயிற்று.


இத்தீவு கிழக்கு மேற்காக சுமார் ஐந்தரை மைல்கள் நீளமும், அகலம் மூன்றுமைல்கள் தூரமுமானதும் யாழ்நகரி லிருந்து பதினெட்டுமைல்கள் தொலைவில் அமைந்த தாகும். நாற்புறமும் கடல்சூழ்ந்ததெனினும் கிழக்கு, வடக்கு மேற்குப் பகுதிக் கடல்கள் ஆழங் குறைந்தனவாயும், தென்பகுதிக் கடல் ஆழ்கடல் சமுத்திரமாயுள்ளது. தீவின் தென்பகுதிக் கரையோரத்திலிருந்து சுமார் இருநூற்றைம்பது




அடிக்கப்பாலேயே அழ்கடலாய் அமைந்துள்ளது. இத்தனை அடிதூரத்துள்ள கடலுட்பகுதி ஆழமிலா மிதவைக்கடலாகும். இம் மிதவைக்கடல் முடிவு அந்தம் தொடங்கி கிழக்கு மேற்காக நெடுஞ்சாலை அமைப்பில் ஒரு கல்லணை சுமார் ஒருமைல்கள் தூரமதாய் இயற்கையாய் அமைந்துள்ளது. கடல்வற்றுக் காலங்களில் இவ் அரண் அணை தெற்றெனக் கண்ணுக்குத்தெரியும். இவ்வணையில் கிழக்கு அந்தத்தின் நேர்நோக்குத் தரைக்கரையில் ஒல்லாந் தரால் கட்டப்பட்ட கலங்கரை விளக்குக் கட்டிடம் அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடற்குரிய தாகும். அவ்விடம் கோரியாவெனப் பெயர் வழங்கப்படுகிறது கோரியா என்பது கலங்களைக் கோரி அழைத்தல் என்று அர்த்தப்படும் படியான சொல்லாய் அமைகிறது. இந்த இயற்கை கடல் அரனால் தென்கரை கடல்பெருக்கு காலங்களில் கரைவதில்லை, அழிவதில்லை, அலைம்புறு வதில்லை.

இத்தீவின் அதிஉயர் இடங்களாய் கருதப் படும் இடங்கள் கடல் மட்டத்தி லிருந்து சுமார் முப்பது அடி உயரத்திற்கு மேற்படாதனவே கரை சார்ந்த தரைப் பகுதிகள் மிகக் குறைவுடை உயர்வே தென்கிழக்குக் கரையின் உயரமே சற்று உயர்பகுதியாகும். இப்பகுதியை மாவுதடல், வீராமலையென அழைப்பர். முலையில்லாத மலை தான் இந்தமலை. இத்தீவின் பிரசித்தி பெற்ற தலமான கண்ணகை அம்மன் ஆலய கண்ணகை சிலை இக்கடற்கரையில்தான் பெட்டியில் வந்த டைந்தது உண்மைக் கதை. இதனால் வீர அமலையென தெய்வ கண்ணகைப் பெயரெனக் குறிப்பிடுவர் இவ்விடத்தை.

தீவின் ஏனைய கடற்பகுதிகள் கரைத் தரைகள் உயரக்குறைவால் அதன் ஊடாக கடல்நீர் உட்புகுந்து ஒடைக் கடல் களாகவும், ஒடைக்கால்வாய்களாகவும் ஏற்பட்டு தீவின் வடக்கு மேற்கு கரைப் பகுதிகளில் சிலதரைப் பகுதிகள் தீவு வடிவாகி ஊரதீவு, வரதீவு, கண்ணாதீவு, கேரதீவு, களதீவு, பல்லதீவு மண்டைதீவு என்பன வடபகுதியிலும், மேல்கரை



யில் கொல்லதீவு எனவும் ஏழுதீவுகளாய் குறிப் பிடப்படுகின்றன. இவற்றில் கேரதீவு தனித் தன்மை யானது. புங்குடுதீவின் வடபகுதியில் ஏற்பட்ட இத்தீவு கிழக்கேயுள்ள மடத்துவெளி மேற்கே யுள்ள இருபிட்டி ஆகிய இரு இடங்களுக்கு நடுவதாய் சுமார் ஒன்றேகால் மைல் நீளமும் அரைமைலுக்குட்பட்ட அகலமும் கொண்ட தீவாயுமுள்ளது. இத்தீவின் தரை மணற்பாங்கா னவை. முழுமையும் காடாகும். ஆல், அரசு, பூவரசு, வேம்பு, வீரைதுவரை, மருதை முதலிய பருமரங் களும் பிறவுமானவை, ஈஞ்சு, நொச்சி, காரை, காண்டை, இலந்தை, தாழை, கள்ளி முதலி யனவும் பிறவுமான முட்செடிகளும் மிசிட்டை, குறிஞ்சி, கொவ்வை, சீந்தில், முல்லை முதலிய மூலிகைக்கொடிவகைகளும் பிற கொடிவகை களும் செறிந்து காணப்பட்டன. தற்போது காட ழித்து மக்கள் குடியிருப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. முடத்து வெளிக்கும் இருபிட்டிக்கும் இணைப்பு நெடுஞ்சாலை இத்தீவின் வடகரையோரமாக அமைக்கப்பட்டுள்ளது. மத்தியபகுதியில் பழமை வாய்ந்த ஐயனார் ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. இதன் கிழக்குக் கரையில் சோழகன் என்னும் ஒடைக்கடலும் மேற்கு கரையில் பல்லவன் என்ற ஒடைக்கடலும் எல்லைகளாய் ஒடிவந்து தென்பகுதியில் சங்கமமாகி புங்குடுதீவின் வடபுலத்தை சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவை களர்நிலமாய் ஆக்கியுள்ளது. இக்களர்நிலம் மாரி காலத்தில் மழைநீரும், கடல்நீரும் கலந்து கடல்போல் காட்சியளிக்கும். கோடைகாலத்தில் தண்ணீர் அற்ற பரவைத்தரையாய் தோற்றமளிக்கும். இதனால் இதன்நோக்க கருதி கள்ளியாறென பெயரிடப்பட்டுள்ளது. இந்நிலத்தில் காலத்திற்கு காலம் உப்பு விளைவதுமுண்டாதலால் உப்புக்கழி யெனவுமழைப்பர்.

சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் இத்தீவின் குடிசனச்செறிவு இடத்திற்கிடம் மேடுசார்ந்த இடப்பரப்பில் உறவு சார்புக்கூட்டமைப் பில்மக்கள் கூடிவாழ்ந்ததை அறியக்கிடக்கின்றன. பலவருடங்களுக்குப்பின்பே சனச்செறிவு கூடிற்று. அப்போது மக்கள் பள்ளமான வெளிநிலங்களை நெற்செய்கைக்கும், சற்று உயர்ந்த தரைகளை வரகு, சாமை, மொண்டி, எள்ளு கொள்ளு குரக்கன் முதலான தானிய வகைச்செய்கைக்கும், பிட்டிப் பாங்கான இடங்களை பயறு, உழுந்து முதலிய சிறுதானியச் செய்கைக்கும் பயன்படுத்தினர். வெளியான தரவைத்தன்மையான புல்தரைகளை வளர்ப்பு மிருங்களான ஆடு, மாடு, கழுதை, குதிரை, எருமை ஆகியனவற்றின் மேய்ப்புக் காகப்பயன்படுத்தியுள்ளமையைக் காணலாம். இவையாவும் வான் பார்த்த பூமியென்பர். (மழையைப் பார்த்தல்) நிலத்தடி தண்ணீர் உயர் நிலங்கள் மிளகாய், வெங்காயம், மரவள்ளி, புகையிலை ஆகிய வர்த்தகப் பயிர்கள் விளைவ ிக்கும் தோட்டங்க ளாகப் பயன்படுத்தியமையைக் காணலாம்.

மக்கள் தங்கள் வாழ்விடங்களின் நிலத் தோற்றம், நிலஇயல்பு, சூழ்நிலை ஆகியவற்றின் அடிப்படையில் வட்டாரம் விரிவு ஏற்படாதிருந்த காலத்து வதிவிடங்களுக்கு பெயரிட்டுக் கொண்டு ள்ளது தெரிய வருகிறது. கல்லிங்காடு (காடு + குவியல்) கற்காடு, ஊரிக்காடு, மணற்காடு, மண்காடு, கோயிற்காடு, இத்திக்காடு, நொச்சிக் காடு, கண்டியங்காடு (கண்டல்மரம்) ஈச்சங்காடு,





புங்கங்காடு, பெருங்காடு என்பனவும் பிறவும் காடு என்ற அமைவில் இங்கு இடங்களானது. இவற்றில் பெருங்காடு முக்கியதுவமாய் கொள்ளலாம். தீவின் மத்திய பகுதியில் பெரும்பகுதியை உள்ளடக்கியதால் வடபெருங்காடு, தென்பெருங்காடு என இருகுறிச்சிகளாகக் குறிப்பிடுவர். இப்பகுதி ஆல், அரசு, பூவரசு, மஞ்சவண்ணா இலுப்பை, நாவல், வேம்பு, மருதை, கருவாச்சி முதலினவும் பிறவுமான பருமரங் களும், கள்ளி, நொச்சி, இலந்தை, ஈஞ்சு, ஆவரை, எருக்கிலை, குமிழை, கொன்றை முதலியனவும் பிறவுமான செடிவகைகளும், காரை கற்றாளை முதலிய முட்செடிவகைகளும், பிரண்டை, காண்டை, முசிட்டை, குறிஞ்சா, சீந்தில், கொவ்வை முதலிய கொடிவகைகளும், மூலிகை வகைகளும் பிறவுமாகவும், பாம்பு, உடும்பு, முயல், நரி ஆகிய வனப்பிராணிகளும் செறிந்திருந்தன வென்பதையறியக் கூடியதாயுள்ளது. இவற்றின் அடிச்சுவடு சுமார் முக்கால் நூற்றாண்டுக்கு முன்வரை விளங்கிற்றென்பதை யாவருமறிவர். புலம் சார்ந்த இடப்பெயர்கள்: பெரியபுலம், அரியநாயகம் புலம், உயரப்புலம், சுட்டிப்புலம், காட்டுப்புலம் என்பனவும் பிறவுமாகும்.

மரப்பெயர்கள் கொண்ட இடங்கள்: புளியடி, விரம்புளியடி, புங்கடி, வேம்படி, பெருக்கடி, முருக்கடி, இலுப்பையடி, கருக்குவாச்சியடி, மருதடி, ஆலடி, குருந்தடி, தனிப்பனையடி, எனவும் பிறவு மாகும். கழுதைப்பிட்டி, இருபிட்டி, ஆடறுத் தபிட்டி எனவும் பிறவும் பிட்டிசார்ந்த தெங் கந்திடல் மாவுதிடல் என்பனவும் பிறவும் திடல் சார்ந்தவை. தரைப்பகுதி கூர்வடிவில் கடலுள் நீண்டு செல்லும் பகுதி முனையெனப்படும். ஈச்சாமுனை, தொட்டத்து முனை, நாவுண்டாமுனை என்பனவும் பிறவுமாம். குறிச்சியெனக் குறிப்பிடும் இடங்கள் நடுக்குறிச்சி, குறிச்சிக்காடு என்பனவும் பிறவுமாம். வெளியெனக் குறிப்பிடும் இடங்கள் மடத்துவெளி, பாண்டயாவெளி, தில்லைவெளி என்பனவும் பிறவுமாம். அரச சேவையாளர்கள், பணியாளர் கள் அதிகாரிகள் பெயர் அமைந்த இடங்களுமுண்டு. வல்லன், (வல்லமை உடையவர்கள் செறிந்த இடமாயும் அன்றைய தமிழ் அரசர்களுக்கு மறவர்களாய் சேவையாற்றிய வல்லவர்களாயுமிருக்கலாம்.) சவனா (வேக முடமை) நீலன்காடு ஆகியனவும் பிறவும், பெரியோர் வாழ்ந்த இடம் ஈசனார் முற்றம், பசுக்கள் கூட்டமாய் நீர் குடிக்க வருமிடம் (சங்கம் + ஆ + கேணி) சங்கத்தாகேணி இரு இடங்களுக்கு இடையில் துருத்தி (உயர்ந்து) நிற்பதால் நடுத்துருத்தி அக்கிரமங்களுக்குப்பயந்து பொருட்களைப் புதைத்த இடம் புதையல், சங்கு சேகரிப்பு இடம் சங்குமால், சங்குவேலி, தொழிலாளர் வகையால் தொழிலாளர்புரம் எனப்பல பெயரிடங்கள் காணப்படுகின்றன. தொன்றுதொட்டு வழங்கிவரும் பெயர்களின்றி ஒருவரால் ஆக்கப்பட்டு வழங்கப்படும் பெயர் இடங்களுமுண்டு. கண்ணகைபுரம் போன்றவாகும்.

தீவின் பலவிடங்களில் சிறிய பெரிய குளங்கள் பரவலாகக் காணப்படினும் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சின்னக்கிராய், பெரிய கராய், இணுவெட்டியா (இணு = மூங்கில், வெட்டியா = அரிப்பு) குளம் என்பன ஒரே நேர் நெடுங்குளமாய் சுமார் ஒருமைல் தொலைவு தூரம் நீண்டு நீர்வளம் கொண்டு காணப்படுவது நாட்டிற்கு இயற்கை தந்த நன்கொடையெனலாம்.

வரலாற்றுச்சான்று சார்ந்த இடங்களுமுண்டு. தீவின் மத்திய பகுதியில் கோட் டைக்காடு என இடப்பெயருண்டு. இப்பகுதி யில் ஒல்லாந்தர் கோட்டை கட்டியிருந்ததாகக் கூறுவர். அது அழிவுற்று இடிபாடுகள் மண்மூடி உயர் இடங்களாயுள்ளன. உரிமையாளர் சிலர்தம் தேவைகருதி நில அகழ்வு செய்தபொழுது அக்காலத்தான படிவற்கற்கள் புதைந்திருந்ததைப் பலரும் அறிவர். இவ்விடங்களில் அகழ்வாராய்சி செய்யின் பல உண்மைகள் புலம்படும் என்பது உண்மையாகும்.

எல்லாவளமிருந்தும் குடிநீர்வளம் மட்டும் குறையாயிற்று.



GEORGE SMITHERMAN, M.P.P.
TORONTO CENTRE-ROSEDALE

August 23, 2007

Mr. Somasundaram Satchithananthan
Tamil Caregivers Project
Providence Healthcare
Canada Saivite Council for Spiritual Support in Healthcare

Dear Mr. Satchithananthan,

I wish to congratulate you on the successful completion of the certification of Saivite Spiritual Support Worker as well as to thank you for the work that you are doing with the Tamil Caregiver Project.

To commemorate the event, I am pleased to enclose this photo.

Best wishes,

George Smitherman

George Smitherman
Deputy Premier of Ontario
Minister of Health and Long -Term Care
M.P.P., Toronto Centre - Rosedale



# பொன்கொடு தீவெனும் தாயவளே போற்றி உன்னை வணங்குகின்றோம்

- சோம. சச்சிதானந்தன் -

முத்தமிழ் இசைக்க மேகலை பிறக்க இந்துமகா சாகரம் இரைக்க! சிலப்பதிகாரம் செய்திகள் கூற மீகாமன் படை எடுக்க நாகங்கள் பூவெடுத்துப் பூசிக்க வெடியரசன் ஆட்சி செய்ய புயங்குதீபம் பிரியன் குத்தீவு பூங்குடி புங்கனூர் என வழங்கி மருவிய புங்குடுதீவின் மக்கள் புலம் பெயர் தேசங்கள் வந்தும் புத்துணர்வோடு புங்கு டுதீவு பழையமாணவர் சங்கம் நிறுவிய பூவரசம்



பொழுது எனும் நிகழ்வுற 12வது ஆண்டில் கொண் டாடி மகிழ்ந்திடும் இவ்வேளையில் நமக்குரிய அரசு எங்கே எப்போ இருந்ததென்ற வரலாறு மறைக்கப்பட்டும் மறந்தும் போன செய்தியானாலும் கந்தரோடையில் அமைந்த கதிரைமலை அரசுக்கு வெகுகாலத்திற்கு முன்பே தீவகத்தில் தான் அரசு இருந்தது. இந்த அரசின் கடைசி அரசனாக வெடியரசன் இருந்ததும் மீகாமன் படை எடுப்பும் நாகமணிக்கத்திற்காக நடந்த கடற்போருமே தீவக அரசு நிலைகுலையக்காரணமாகும் இது இன்று வரை மறைக்கப்பட்ட சிலப்பதிகாரச் சரித்திர மாகவுள்ளதை நாடறியும். ஆனால் இந்த அரசில் புங்குடுதீவு வகித்த முக்கியதுவத்தை முத்திரை யாகப் பதித்துள்ள செய்திகள் பல இன்றும் தாயகத்தில் உண்டு. கோட்டைக்காடு – கோட்டை யிருந்த பகுதி களதீவு–போர் நடந்த இடம் வெற்றியாமுனை–வெற்றி பெற்ற இடம். சோனக னோடை, பல்லவர் தீவு பெருங்காடு ஆகியன அரசியலோடு தொடர் புடைய கிராமங்களாகவும் இருந்துள்ளன. சீனன் புலம், சங்குமாலடி சிப்பியேற்றந்துறை வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு கொண்ட துறைமுகங்களாகவும் கிராமமாக இருந்ததோடு சீனன் புலம், சங்குமாலடி சிப்பியேற்றந்துறை வெளிநாட்டு வர்த்தக தொடர்பு கொண்ட துறைமுகங்களாகவும் கிராமமாகவும் இருந்ததோடு சிப்பியேற்றம் துறையில் பெரும் முஸ்லீம் வியாபாரிகளும் கடை களம் இருந்துள் ளன சிறந்த வகைச்சங்குகள் இங்கிருந்து பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1505ஆம் ஆண்டு நவம்பர்மாதம் போத்துக் கீசா எமது கடலாதிக்கத்தை கைப்பற்றும் வரை புங்குடுதீவின் வரலாறு இது.

1919ஆம் ஆண்டு தொடக்கம் புங்குடுதீவு மஹாஜன சேவா சங்கமும் 1926ஆம் ஆண்டு தொடக்கம் மலாயா புங்குடுதீவு ஐக்கிய சங்கமும் 1925ஆம் தொடக்கம் புங்குடுதீவு இளைஞர் கழகமும் 1947ஆம் ஆண்டு தொடக்கம் அரசியல் சார்ந்தோடும் 1972ஆம் ஆண்டு தொடக்கம் வட இலங்கை சர்வோதய இயக்கமும் எமது தாயகத் தீவில் கட்டியெழுப்பிய நிர்மாணப் பணிகளால் எமது தீவகம் சர்வதேசப் புகழ்பெற்றது. இருபத் தைந்துக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து நமது கிரா மத்தை தரிசிக்க நூற்றுக்கு மேற்பட்ட சர்வதேச மக்கள் வருகை தந்து சிறப்பித்தனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் உலகின் பல பல்கலைக் கழகமும் தொண்டர் நிறுவனங்களும் பலநாட்டு அரசாங்கங்களும் புங்குடுதீவில் மேற்கொள்ளப் பட்ட நிர்மாண வேலை அனுபவங்களை அறிந்து கொள்ள முன்வந்ததுடன் பாராட்டுகளும் பரிசில் களும் நிதி யும் வழங்கி கௌரவித்தனர்.

உலக நாடுகளிலிருந்து புங்குடுதீவு சுகா தாரக்கல்வி நிலையத்தில் கற்றுச்செல்லவும் கற்றுத்தரவும் வந்தநாடுகள் இங்கிலாந்து அமெரிக்கா, கனடா, மேற்கு யேர்மனி நெதர் லாந்து நியூசிலாந்து நேபால் ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து பேராசிரியர்கள் வந்து சென்றனர் அறிஞர் பெருமக்களை ஈன்றுபுறந்தந்த பெருமை எமது மண்ணுக்கு உண்டு இத்தீவின் அறிஞர்கள் விண்மதியில் ஆய்வு செய்து வெற்றி





# TMS FINANCIAL GROUP

- ☑ Corporate Tax Returns
- ☑ GST & PST Returns
- ☑ Bookkeeping
- ☑ Financial Statements
- ☑ Personal Tax Returns
- ☑ E-Files
- ☑ Company Incorporation
- ☑ Business Plans

All kind of Printing Jobs

**Tel :416-298-9322, 416-332-9855, 416-298-6718**
**Fax : 416-298-8270**

3300 McNicoll Ave. Unit A4, Scarborough, ON. M1V 5J6



யுடன் மீண்டார்கள் அவர்கள் ஆய்வுகளைப் படமெடுத்த கருவியை ஆக்கிய அறிஞனும் எம் தீவின் வழித்தோன்றலேயாவான்-என்பது வல்லி புரத்திற் கண்டெடுத்த பொற்சாசனத்திலும் இதன் பெருமை பொறிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக் கூடியதாகவுள்ளது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே யோகர் சுவாமிகளின் தொடர்பு புங்குடு தீவுக்கு கிடைத்தமை பற்றியும் 1964ல் சுவாமி மகாசமாதி பெற்றபின் அவரது அஸ்தி கொண்ட அவரது ஆலயம் புங்குடுதீவில் நிறுவப்பட்டு வழிபாடு நடப்பதையும் நற்சிந்தனை பாடப் படுவதையும் 1981ல் அமெரிக்காவிலிருந்து வந்த சுவாமியின் அடியார்களான 55 அமெரிக்கர்கள் புங்குடுதீவுக்கு வருகை தந்து சுவாமியை வழி பட்டுச் சென்றார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்வோமாக உலக அரசியலை மாற்றியமைத்த முதலாம் இரண்டாம் உலகப்போர்கள் புங்குடு தீவையும் மாற்றியது எமது மக்கள் கடல் கடந்து உலகெங்கும் பரவிச் சென்றனர். 1913 ஆம் ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதி புங்குடுதீவுக்கு புதிய பொற்காலமாய் அமைந்தது எனலாம்.

இன்னோரன்ன பெரும் சிறப்புக்களை கொண்டு விளங்கிநின்ற எமது தாயகபூமியை இலங்கை அரசபடைகள் ஆக்கிரமித்து பதினாறு வருடங்களை கடந்துவிட்டது இருபதினாயிரத் துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்ந்த பூமியில் இன்று நாலாயிரம் மக்கள் மட்டுமே வாழ்ந்து வருகின் றனர். போர்ச்சூழலில் அரசபடைகளின் கெடுபிடி களின் மத்தியில் வாழ்ந்துவரும் அந்த மக்களுக் கும் கல்விபயிலும் மாணவர்களுக்கும் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் தனது முழுமையான உதவிகளை சங்கம் ஆரம்பிக் கப்பட்ட காலம் முதல் இன்றுவரை செய்து வருகின்றது. ஏனைய நாடுகளிலுள்ள எமது ஊர் சங்கங்களும் தங்களது செயல்பாடுகளை வழங்கி வருகின்றனர். இன்று பன்னிரெண்டாவது அகவை யில் கால்பதித்திடும் சங்கம் எமது மண்ணின் வர்த்தகப் பெருமக்களும் ஏனைய ஊர் வர்த்தகப் பெருமக்கள், கனடாவாழ் புங்குடுதீவு மக்களும் அளித்து வரும் பேராதரவின் மூலம் எமது தாயக உறவுகளுக்கு மட்டுமன்றி போரினாலும் சூறாவளி சுனாமியினாலும் பாதிக்கப்பட்டு அல்லலுறும் வடக்கு கிழக்கு மக்களின் துயர் துடைப்பிலும் பங்க கொண்டுள்ளது என்பதை யாவரும் அறிந்த விடயமாகும். எனவே இந்தபணிகள் செய்வதற்கு ஆரம்பம் முதல் இன்றுவரை தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் பொருளாளர்களாகவும் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் இருந்து தங்களின் பெறுமதிக்க நேரங்களை நாட்களை காலங்களை அர்ப்பணித்து செயல்பட்ட செயற் பட்ட அந்த அன்பு உள்ளங்களையும், சங்கம் ஆரம்பிக்கும் நேரத்தில் என்னோடு உடனிருந்து செயற்பட்டவர்களையும், நாம் என்றும் மறந்துவிட முடியாது. எல்லோரினது அர்ப்பணிப்புக்களும் வீண் போகாதவாறு எமது சங்கம் பெருவளர்ச்சி அடைந்து நிற்கின்றது. எமது ஒற்றுமையும் ஆற்ற லும் பன்னிரெண்டாவது ஆண்டை அடைந்து நிற்கின்றது. பன்னிரெண்டாவது ஆண்டின் தலைவ ராக பதவி ஏற்றுள்ள அன்புத்தம்பி ரமேஸ்



செந்தில்நாதன் அவர்கள் தொடர்ந்து பல வருடங் களாக நிர்வாகசபை உறுப்பினராகவிருந்து நிதிப் பங்களிப்புக்களை நிறைவாக வழங்கிவந்தவர். தாயகப்பற்றும், தான் கல்வி கற்ற பள்ளிக் கூடங்களையும், அங்கு வாழ்ந்திடும் மக்களையும் மறவாது பணியாற்றி வருபவர். மிகவும் குறுகிய வயதில் புலம்பெயர்ந்து வெளிநாடு வந்து கடின உழைப்பின்மூலம் உயர்ச்சி அடைந்தவர். இப்படியான நல்மனம் கொண்டவருடன் நான் இருந்து பணியாற்றுவது எனக்கு மிகுந்த மன நிறைவை தருகின்றது. எனவே அவருடைய காலத்தில் அவரின் எண்ணத்தில் உதித்த அரும் பெரும் திட்டமான எமது சங்கத்ததிற்கான நிரந்தர பணிமனை விடயத்தினை நிறைவேற்றி வைப்பதற் காக அனைத்து வாழ் மக்களும் நிறைந்த ஆதரவு தனை வழங்குவார்கள். அதற்காக அனைத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் கடுமையாக பணி யாற்ற வேண்டியுள்ளது என்பதனை தெரிவித்துக் கொண்டு இவ்வாண்டு பூவரசம்பொழுது விழாவிற்கு நிறைவான ஆதரவு வழங்கிய அனைத்து வர்த்தக நிலைய அதிபர்களுக்கும் எம் இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து எமது மண்ணின் மைந்தன் சு.வி யின் அரங்கிற்கு அழைத்துச் செல்கின்றேன். என் கடன் பணி செய்து கிடப்பதே

# இடப்பெயர்களும் அவைக்கான காரணங்களும்

- துரை இரவீந்திரன் -

பூங்கணியின் வரலாற்றுகாலத்தில் தாய் வழி சமூக அமைப்பு ஏற்பட பண்டைய மக்கள் வாழ்ந்த இயற்கை சூழலை ஒத்ததாக வாழ்விடங் களை அமைத்தனர். தம்வாழ்விடங்கள் மற்றவர் களுக்கு சுட்டிக்காட்டவும் தம்மை வேறுபடுத்திக் காட்டவும் தம் இடங்களுக்கு பெயர்களை சூட்டிக் கொள்ளதொடங்கினர். அன்றைய நிலையில் அவர்களுக்கு இயற்கை வளங்களே பெயர்க் கருவுலங்களாக அமைந்தன. எனவே இவற்றின் அடியாக மரப்பெயர்களும், ஆற்றுப்பெயர்களும், நிலவியல்புப் பெயர்களும், குழு, இன, சாதிப் பெயர்களும் தொழிற் பெயர்களும் ஏற்பட்டன என கருதமுடிகிறது.



மனித இனவளர்ச்சியின் நீட்சியாக இடப் பெயர்களும் மாறிக் கொண்டு இருந்தது. இன்று எழுத்துவடிவ வளர்ச்சி வரலாற்றில் பதிவாக நம்மிடையே தங்கியுள்ளது ஊர் பெயர்களின் தோற்றத்துக்கான காரணத்தை அறிய முற்படும் போது ஓர் உண்மை எம்மை சுடுகிறது. பழமையின் தொன்மை எமக்கு பெருமை தருபவையே அவற்றை விட்டு விட முற்பட்டால் எமது பெருமை யை நாமே இழந்தவர்களாக ஆவோம்.

புங்குடுதீவு மண்ணின் மைந்தர்கள் பேசப் பட்ட அளவுக்கு இந்த மண் பேசப்படவில்லை. இம்மக்களின் மரபு தழுவிய வாழ்வியலோடு கலந்துவரும் கலாச்சாரத் தொடர்ச்சியும் நம்பிக் கைகளும் பதியப்படவில்லை. இதேவேளை எமது பண்பாட்டு அடையாளங்களும், ஆவணங் களும் மெல்ல திரிந்து அழிந்துவருகிறது. எமது மூதையர்கள் பற்றிய ஆவணங்களும் அழி மானங் களிடையே அழிந்து போகாதிருக்க புலம்பெயர் மண்ணில் ஆவணப்படுத்த முற்படுவது ஓர் சிறந்த முயற்சி ஆகும்.

புங்குடுதீவின் வடக்கு பகுதியில் இருக்கும் 7ம் வட்டாரம் இத்தீவின் நுழைவாயில் அமைத் திருக்கும் பெருமையை தன்னகத்தே கொண் டுள்ளது. "அம்பலவாணர் தம்போதி" என்றும் வரலாறு சிறப்புமிக்க சின்னமும் உள்ளது, அத்துடன் பலநூற்றாண்டுகளுக்கு முற்பட்ட ஐயனார் ஆலயமும் ஓர் தான்தோன்றிச்சரமாகும். இதுவே இவ்வட்டார மக்களின் தெய்வம் ஆகும். ஊரதீவு, வரதீவு, கேரதீவு என மூன்று பெரும் பகுதியை கொண்டது இவ்வட்டாரம் இதில் முதன் மையாக விளங்குகிறது ஊரதீவு ஆகும்.

## ஊரதீவு:


இத்தீவின் பெயர் உருவாக காரணமாக அமைவது அந்த நிலப்பகுதியில் அதிகமான ஊரிகள் உள்ளதால் அந்த தீவை ஊரி+தீவு = ஊரதீவு என அழைக்கப்படுவதாக சொல்லப் படுகிறது. அதேநேரம் இன்னோரு காரணமும் முன்வைக்கப்படுகிறது. இத்தீவின் வடிவம் ஊரி அமைப்பை ஒத்திருப்பதால் இதனை ஊரதீவு என அழைக்கப்படுகிறது என அறியமுடிகிறது. அதே போல் மிகப்பழைமையான கோயில், குளம் என்பன இங்கு உள்ளது. ஆதியில் மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்ட குடியிருப்பு இங்கு உருவாகி இருக்கலாம். காரணம் இறுப்பிட்டி, மடத்துவெளி, பெருங்காடு ஆகிய இடங்களில் வாழும் குடும்பங் களுக்கும் ஊரதீவு மக்களுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு இங்கிருந்த மக்கள் மெல்ல மெல்ல மற்றைய பகுதிகளில் குடியிருப்புக்களை ஏற்படுத்தியிருக்கலாம் என நம்ப பல காரணங்கள் உண்டு. இக்கருத்தை பல மூத்தவர்கள் வலி யுறுத்தினர்.

## வரதீவு:

ஊரதீவுடன் தொப்புள்கொடி உறவு கொண்ட ஊர் வரதீவு ஆகும். ஊரதீவு மக்கள் ஆரம்பகாலத்தில் மேட்டுப்பகுதியான வரதீவில் வரகு விளைத்தனர். பின்னர் மக்கள் குடியேற்றம் இடம் பெறுவது முற்றுமுழுதான ஊரதீவு குடும்ப உறவுகள் வரதீவில் வாழ்வதை அவதானிக்கலாம். வரகு+தீவு = வரதீவு என்றாகிவிட்டது. இன்று இந்த பெயர் மெல்ல மறைகிறது மடத்துவெளி என்கிற எல்லைக்குள் உள்வாங்கப்பட்டுவிட்டது. மடத்து வெளி சனசமூக நிலையம், மடத்துவெளி பாலர் பாடசாலை, மடத்துவெளி பாலசுப்பிரமணியர் ஆலயம் என்பன வரதீவின் பகுதிக்குள் இருப்ப தால் இப்பகுதி இன்று மடத்துவெளி என்றே அழைக்கப்படுகிறது.

## முனை:

கடலுக்குள் செல்லும் நீண்ட கூரிய தரைப் பகுதியை முனை என அழைப்பர். அந்த வகையில் ஊரதீவை இரண்டு முனைகளாக பிரித்து வழங்கப் படுகிறது கிழக்குமுனை, மேற்குமுனை இரண்டு முனைகளில் எல்லையாக ஒழுங்கை எனப்படும் சிறுவீதி பிரிக்கிறது.



## கண்ணாதீவு:

இந்த சிறுதீவு கண்ணா மரங்கள் நிறைந்து காணப் படுவதால் இத்தீவை கண்ணாதீவு என அழைக்கப்படுகிறது. இங்கு வீடுகள் இல்லை. அங்கு அறுகம்புல் அதிகம் இருப்பதால் கால் நடைகள் அங்குசென்று மேய்ந்து வருவது வழமை.

## சின்னப்பிட்டி:

கண்ணாத்தீவுக்கும் ஊரதீவுக்கும் இடையே காணப்படும் ஒரு மேட்டுபகுதி ஆகும். சிறிது+ பிட்டி = சின்னப்பிட்டி ஆகியது.

## கொழும்பான்பிட்டி:

ஊரதீவின் மேற்குபகுதியில் காணப்படும் ஒரு சிறியபிட்டி கொழும்பான்பிட்டி என அழைக்கப் படுகிறது. கொழும்பான்பிட்டி என அழைக்கப் படுவதற்கான காரணத்தை அறிய முடியவில்லை.

## பள்ளகாடு:

ஊரதீவின் கிழக்கு பகுதியில் இருக்கும் மக்கள் குடியிருப்பு பகுதி பள்ளகாடு ஆகும். முன்னர் பள்ளமான பகுதியில் காடு இருந்ததால் இவ்வாறு அழைக்கப்படுகிறது. பள்ளம்+ காடு = பள்ளகாடு. இன்று காடு இருந்ததுக்கான அடை யாளம் இல்லாது இருக்கும் பகுதி இது.

## வெள்ளேகுளம்:

பள்ளக்காட்டுக்கு கிழக்கே இருக்கும் குளம் ஆகும். இதனை அண்டியுள்ள பரந்த விளை நிலமும் இக்குளம் பெயர் கொண்டு அழைக்கப் படுகிறது. இக்குளத்தின் பெரும்பகுதி சேறு இல்லாது இருப்பதால் இக்குளம் இவ்வாறு அழைக்கப்படுகிறது.

## மெலிஞ்சிப் பிட்டி:

ஊரதீவின் கிழக்கு பகுதியில் இருக்கும் சற்று மேடான பகுதி இங்கு மெலிஞ்சி முட்செடி அதிகமாக காணப்பட்டதால் மெலிஞ்சிபிட்டி என்ற பெயர் பெற்றது. ஊரதீவு கிழக்கு பகுதிக்கு பள்ள காட்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந் துள்ளது.

## கொம்பர்பிட்டி:

கொம்பர் என்று அழைக்கப்பட்ட குடித் தலைவன் வாழ்ந்த பகுதி இதனால் கொம்பர்பிட்டி என அழைக்கப்படுகிறது. கொம்பர் என்கிற பரம்பரை தொடர்ச்சி இன்றும் உள்ளது.

## வண்ணான்குளம்:

ஊரதீவு வைரவர் கோயில் பகுதியில் இருக்கும் வண்ணான்குளம் என அழைக்கப் படுகிறது. சலவை தொழிலாளிகள் தங்கள் தொழிலை செய்வதற்கு பயன்படுத்துவதால் குளத் துக்கு இப்பெயர் பெற்றது.

## கோரவெளி:

ஐயனார் கோயிலுக்கு முன்பாக கிழக்கு பகுதியில் அமைந்திருக்கும் விளைச்சல் அதிகமுள்ள விளை நிலபகுதி இங்கு கோரபுல் அதிகம் இருக்கும். கோரபுல்+வெளி=கோரவெளி என அழைக்கப் பட்டது. முன்பு திருநாவுக்கரசு வித்தியாலயம் இங்கு இருந்தது.

## மலை:

ஐயனார் கோயிலுக்கு வடக்கு பகுதியில் காணப்படும் கற்களும், பாறைகளும் நிறைந்த பகுதி இங்கு தென்னை மரமும் அதிகம் உள்ளது. இந்த பகுதியில் ஐயனார் கோயிலுக்கு பெரும் தொண்டு புரிந்த மருதப்பர் என்கிறவரின் சமாதியும் உண்டு. இக்கோயிலில் வளர்ச்சியில் இவரின் பங்கு அளப்பரியது.



மலிவின் மறுபெயர் மஞ்சுளா பஷன்

# Manchulaa
## FASHION

இலங்கை, இந்தியா,
இந்தோனேசியா, இங்கிலாந்து,
சிங்கப்பூர், தாய்லாந்து,
அமெரிக்கா ஆகிய நாடுகளில்
இருந்து நேரடியாக
இறக்குமதி செய்யப்பட்ட
சகல வயதினருக்கும்
உரிய சகலவிதமான
உடுப்பு வகைகள்

ஒறிஜினல் எவர் சில்வர்
பாத்திரங்கள்,
அலங்காரப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தையும் மலிவு
விலையிலும்,
மணமகனுக்குரிய
சர்வாணி சூட் வாடகைக்கு
பெற்றுக் கொள்ளவும்
நாட வேண்டிய இடம்



5635 Finch Ave. E, Unit #3, Scarborough, ON. M1B 5K9
Tel : 416-297-9875 Fax : 416-297-7595

## கல்லோடை:

மலைப்பகுதிக்கு பின்னால் சிறுகற்கள் அதிகமான காணப்படுவதோடு நீர் ஓடி கடலுக்கு செல்வதாலும் இப்பகுதியை கல்லோடை என்று அழைப்பர்.

## தொட்டவெளி:

ஐயனார் கோயிலுக்கு பின்பாக காணப் படும் நிலப்பரப்பை தொட்டவெளி ஆகும். தோட்டம் செய்யப்பட்ட நிலப்பகுதி தோட்டவெளி என அழைக்கப்பட்டு பின்னர் தொட்டவெளியாக மருவியுள்ளது.

## உப்புவெளி:

முன்னர் விளைநிலமாக இருந்த பகுதி பின்னர் கடல் உட்புகுந்து உட்புகுந்த கடல்நீர் வற்றி செல்லும் போது உப்பு விளைந்தது. இதனால் உப்புவெளி என்று பெயரை பெற்றது. காளிகோயிலுக்கு முன்பாக இருக்கும் பகுதி ஆகும்.

## சோழகன் ஓடை:

சோழகக் காற்று காலத்தில் இப்பிரதேசத் தில் தண்ணீர் நிரம்பி நிற்பதோடு மேட்டு பிரதேசத்தில் இருந்து தண்ணீர் இந்த ஓடையை நோக்கி ஓடிவரும். இதனால் இதை சோழகன் ஓடை என அழைப்பர். ஊரதீவையும் கேரதீவையும் பிரிக்கும் பகுதியாகும். சோழக் காற்றுக் காலத்தில் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கி செல்லும் ஓர் சரணாலயமாக இருக்கிறது. இவ்வோடையை சுற்றி கள்ளி மரங்களும் ஈச்சம் பத்தையும் நிறைந்து காணப்படுகிறது.

## கேரதீவு:

சிறு காடுகளும், கோரைப்புல் நிறைந்து காணப் பட்டது. கோரைப்புல் இருந்ததால் கோரை+தீவு மருவி கேரதீவு என்றாகிவிட்டது. இங்கு இடுகாடு, சுடுகாடும் உள்ள மயானம் உண்டு அத்தோடு இத்தீவின் மேற்கு பகுதியில் மக்கள் குடியேற்றம் நிறைந்தபகுதியாக மாறிவிட்டது.

## சங்கு மாவடி வீதி:

கடலில் முக்குளித்து சங்குகள் சேகரிப் பதும் முத்துச்சிப்பிகள் சேகரிப்பதும் தற்போதை யகாலத் தொழில் வழக்காகக் காண்கிறோம். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன் புங்குடுதீவில் சங்கு சிப்பி சேகரிப்பு கடலின் முக்குளிப்பில்லை. நிலத்தடியில் புதையுண்டு பரந்து செறிந்து கிடந்த சங்கு சிப்பி சேகரிப்பு தனித்தன்மை விடயமாகும். பலகோடி ஆண்டு காலத்தை ஆன்றோர் கற்பகால மென்பர். அக்கற்ப காலத்திற்கு முன்னோ பின்னோ இத்தீவு கடல் திடலாய் மாறியதாற்றான் சங்கு சிப்பிகள் நிலத்தடி புதையுண்டனவோ என்னவோ? இது ஆய்வுக்குரியவை ஆகையால் அதை விடுவோமாக.

# சங்குமாவடி ஆக்கம்

த.வடிவேலு
ஓய்வு பெற்ற கி. சே. அலுவலகர் தரம் 1
சமாதான நீதவான்

கேரதீவின் தென்பக்கமாய் அமைந்துள்ள உப்புக்கழியான பரவைநிலத்திலும், ஊரதீவின் வடபாகமாக அமைந்துள்ள கண்ணாத்தீவின் சுற்றுப்புற பரவைக்கடல் நிலத்திலும் சுமார் இரண்டடி ஆழத்தில் சங்குகள் சிப்பிகள் புதை யுண்டு பரந்து செறிந்து காணப்பட்டன. இவைகள் சுமார் அரை நூற்றாண்டின் முற்பட்ட நாட்களில் விலை மதிப்புற்ற வணிகப் பொருட்களாக விளங்கியமையால் பெரும் வணிகர்கள் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய வெளிநாடுகளுக்கு இப்பொருட் களைக் கொள்வனவு செய்து சிறுவகைக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி வர்த்தகம் செய்வாரா யினர்.



இதன் அடிப்படையில் அதிக வருமானம் தரும் தொழில் ரீதியான சங்கு சிப்பி சேகரிப்புத் தொழிலை இத்தீவு மக்கள் ஈடுபட்டனர். இம் மூலதனப்பொருட்களான சங்கு சிப்பிகள் வளம் குன்றாது காணப்பட்டமை இவ்வூர் மக்களுக்கு இயற்கையன்னையின் நன்கொடையாகும். இத் தொழில் பெருஞ்சிரமகாரியமாகும். பெரும் விடா முயற்சி தேவையாகும். ஒரு சங்கு சேகரிப்புத் தொழிலாளி சங்கு சேகரிப்புக் கருவியாக இரு நீள இரும்புக்கம்பிக் கோல்களைப் பாவிப்பர்.

ஒரு இரும்புக்கம்பியின் ஒரு பக்கம் குத்தூசி போன்ற கூர்மை அமைப்புடனும், மறு இரும்புக்கம்பியின் ஒரு பக்கம் அங்குச உருவில் கொழுவி இழுத்தெடுக்கும் வகையில் அமைப்பு இருக்கும். இதில் குறிப்பிட்ட இப்பரவை நிலங்களில் குத்தூசிக் கோலால் துளையிட்டு சோதித்தும் பார்க்கும்பொழுது நிலத்தடியில் காணப்படும் சங்கில் நுனிக்கூர்மைக் கோல்பட்டு



ஒலிவரும் அவ்வொலி கொண்டே சங்கிருப்பதை தெரிந்து துளையைப் பெரிதுபடுத்தி மற்றைய கொழுவிக் கோலை உள்நுழைத்து உள்ளிருக்கும் சங்கை வெளிக் கொணர்வர். இப்படியாகப் பலமணிநேரச் செலவழிப்பும், தொழில்நுட்பமும் அனுபவ முதிர்ச்சியும் கொண்டே இத்தொழில் புரிந்து சங்கு சேகரிப்பர்.

பல தொழிலாளர்களின் முயற்சியால் சங்கு சேகரிப்பு பெருக வர்த்தகர்களும் பெருகினர், கொள்வனவும் பெருகிற்று. வர்த்தகர்கள் ஒரே இடத்தில் கொள்வனவு செய்வதற்கு சுலபமாகவும், சேகரிப்பாளர்கள் ஒரே இடத்தில் சந்தைப்படுத்தி விற்பனை செய்யவும், வணிகர்களின் விலைக் குறைப்பும், வேறுவகையுமான மோசடிகளைத் தவிர்க்கவும், சேகரிப்பாளர்கள் ஒவ்வொரு தனி நபரும் கணிசமான விலைப்பெறுமதிபெறவும், தரம் பிரித்து விற்பனைப்படுத்தவும், பாதுகாப்புக்குமாகவும் பிறபெரும் பெரும் கொட்டகைகள் (மால்கள்) அமைத்து விற்பனைத்தளமாக ஏற்படுத்திய இடம் சங்குமாவடி என பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளதாகத் தெரியவருகிறது. இவ்வாறே சிற்பி சேகரிப்புத் தொழிலும் சிறந்து விளங்கிற்று. பிற நாடுகளுக்கு சிப்பி ஏற்றுமதியான துறைகள் சிப்பி ஏத்தந்துறை (ஏற்றுதல்) யென இடப்பெயரும் வழங்கப்படுகிறது.

சிப்பி சேகரிப்பினையும் நினைவு கொள்ளல் நலமாகும். சிப்பியும், சங்கும் கடல்படு திரவியங்களாகும. சிப்பியும், சங்கும் ஈரறிவு உயிர்ப்பிராணிகளாகும். (பரிசஉணர்வு, நாஅறிவு உணர்வு) மட்டியிலிருந்து சிப்பி சேகரிக்கப் படுவதாகும். புங்குடுதீவின் முன்னைய மக்களின் சிப்பி சேகரிப்பு தனித்தன்மையானதுதான். நிலத்தடிப்புதைந்த சங்கு சேகரிப்பு மாதிரியானது தான். முதலில் குறிப்பிட்ட உப்புக்கழி கண்ணாதீவு பரவைக்கடல் நிலங்களில் ஊரியும் சிப்பியும் கலந்த களர் நிலத்தரையில் சுமார் ஓர் அடி தாழ்வில் வெள்ளைப்பரு சிப்பிகள் நிறைந்து காணப்படுகின்றன.

இத்தரையை மண்வெட்டியால் கொத்தி அகழ்வு செய்து சிறு சிறு கும்பிகளாகக் குவித்து சற்று உலர்ந்தபின் சுளண்டி என்ற அரிப்பான் கொண்டு மண்ணை அரித்துச் சிப்பி சேகரிப்பார்கள். இத்தொழிலும் வல்லமையும் ஊக்கமும் உடையோர்க்கே அதிக லாபம் ஈட்டிக்கொடுக்கும். சுளண்டி என்னும் அரிப்பான் தென்னீக்கினால் சுளகு போல் வடிவில் கயிற்றால் பின்னிப் பயன் படுத்தும் சாதனம். சிலவகைச் சுளண்டி வைரமான குச்சிக் கம்புகளை (விராலிவகை) கயிற்றால் பின்னி பலமான அரிப்பானாகப் பயன்படுத்துவர். எவ்வகை வாழ்க்கைக் கஷ்டத்திலும் எம்மவர் இன்பம் கண்டதை நாம் எண்ணிப்பார்ப்போமாக.

## சிப்பி ஏத்தம் துறை:

இங்கு எடுக்கப்படும் சிப்பி, சங்குகளை கொள்வனவு செய்ய கப்பல்களில் வெளிநாட்டவரும் வந்து அவற்றை ஏற்றும் துறையாக இருந்ததால் இதனை சிப்பி+ஏற்றும்+துறை பேச்சு வழக்கில் சிப்பி ஏத்தம் துறை என அழைக்கப்படுகிறது.

## ஆடு அறுத்த பிட்டி:

வரதீவுக்கு கிழக்கே ஊரதீவுக்கு இடைப்பட்ட சிறுபிட்டி. முன்னர் ஆடு பங்கு போடும் போது மக்கள் குடியிருப்பு பகுதியில் ஆட்டை கொலை செய்யாது இந்த பிட்டியில் உள்ள திருக்கொண்டை மரத்தில் தூக்கி பங்கு போடப்பட்டது. இதனால் இப்பிட்டியை ஆடு அறுத்த பிட்டி என்பர். இன்று இங்கு கிருஸ்ணர் கோயில் உருவாகியுள்ளது. இதனை உருவாக்கியவர் திரு.நல்லை



யூரான் அவர்கள் இப்பிட்டியை கண்ணபுரம் என அழைக்கப்படுகிறது.

## ஒலுகொண்டை:


வரதீவையும் ஊரதீவையும் பிரிக்கும் பகுதி ஒலுகொண்டை எனப்படுகிறது. தண்ணீரை திறந்து விடப்பயன்பட்ட தரிசு இதை அன்று கொலு என்று அழைக்கப்பட்டதாகவும் இச்சொற்கள் மருவி ஒலுகொண்டை என அழைக்கப்படுகிறது.

## அரசடிப்பிட்டி:

இதுவும் ஒரு சிறு வயல் பிரதேசம் அங்கு அரசமரம் நின்றதால் அதனை அரசடிப்பிட்டி என அழைக்கப்படுகிறது. ஒரு நூற்றாண்டைத் தாண்டி இவ் அரசமரம் அங்கு இருந்தது.

## வாண்டையார் வெளி:

நெற்செய்கைக்கு உகந்த மிகப் பெரிய விளைநிலப்பரப்பு வாண்டையார் என்னும் ஒரு வருடைய காணியாக இருந்ததால் இந்த பகுதியை வாண்டையார் வெளி என அழைக்கப்பட்டது. முன்பு பயிர்ச்செய்கைக்கு உகந்த பரந்த பகுதியை வெளி என்று அழைக்கப்படும். இதனால் வாண்டையார்+வெளி = வாண்டையார் வெளி என அழைக்கப்பட்டது. இப்பகுதி இரண்டாகப் பிரித்து ஒருபகுதி சின்னவண்டையர் வெளி எனவும், பெரிய வாண்டயர்வெளி எனவும் அழைக்கப்படும். சின்ன வாண்டையாருக்கு உரிய பகுதி சின்ன வாண்டையாவெளி எனவும். பெரிய வாண்டையாருக்கு உரிய பகுதி பெரியவாண்டயா வெளி எனவும் அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் இருக்கும் குளம் வாண்டையாகுளம் எனவும் அழைக்கப்படுகிறது. இக்குளம் பெரும் கற்களும், சுண்ணாம்புக்கற்களாலும் அணை கட்டப்பட்டுள்ளதை இன்றும் பார்க்க கூடியதாக உள்ளது. மிகப் பழமையான குளம் ஆகும். அங்கு இருக்கும் கிணறும் மிகப்பழமையானது இக்கிணற்றை வாண்டையார் கிணறு என்று அழைப்பர்.



## களதீவு:

பயிற்ச்செய்கைக் காலத்தில் பயறு, உழுந்து ஆகிய சிறுபயிர்கள் பயிரிடப்பட்டது. மாரி காலத்தில் இத்தீவை சுற்றி தண்ணீர் தங்கிவிடும். அப்போது கழுதைகளும் கால்நடைகளும் மேச்ச லுக்காக கொண்டுசெல்லப்படும் கழுதைகள் அங்கேயே நிற்பதால் கழுதை+தீவு = களதீவு ஆக பெயர் பெற்றது. இன்று பயிற்செய்கை செய்யப் படாது சிறு பற்றையாக மாறிவிட்டது. நீண்ட பெரிய மேட்டுப்பகுதி ஆகும்.


ஒரு ஆய்வுக் கட்டுரையானது அறிவு பூர்வமான சிந்தனையும், செயற்பாடும் சமகால தேவைகளையும் எதிர்கால செயற்பாடுகளையும் கருத்திற் கொண்டவையாக அமைதல் இயல்பு அதேநேரம் இத்தகைய கட்டுரைகளுக்கு வர லாற்று சான்று, கள ஆய்வு, ஆவணங்கள், மூதாதையர்களின் வழிகாட்டல் இன்றியமை யாதவை. இவற்றின் மூலம் நாம் இறுதியான முடிவுக்கு வரமுடியும். அதுவே சரியான ஆய்வு சார்ந்த வரலாற்று கட்டுரையாக அமையும். ஆனால் எனக்கு கிடைத்தது மூதாதையர்களின் வழி காட்டல் மட்டுமே புலம்பெயர்ந்த மண்ணில் இருந்து கொண்டு கள ஆய்வையோ, வரலாற்று சான்று களையோ, ஆவணங்களையே பெறமுடியாத சூழலில் இக்கட்டுரை எழுதப்படுகிறது, இக் கட்டுரை முழுமையானதாக அமையவில்லை. ஆனால் ஓர் முழுமையான கட்டுரை எழுதப்படும் பொழுது இக்கட்டுரையில் உள்ளவற்றை தவிர்த்து எழுத முடியாது என்பதை உறுதியாக என்னால் கூறமுடியும்.


ஓர் இனத்தின் அல்லது ஒரு நாட்டின் வரலாற்றை, நன்மை தீமைகளை, பழக்க வழக்கங் களை, முக்கிய நிகழ்வுகளை ஆவணப்படுத்தி வைத்தல் இன்றியமையாதது. தமிழரின் ஆதி வரலாறு சரியாக ஆவணப்படுத்தப்படாமை யாலேயே பல்வேறு கருத்துக்களும், குழப்பங் களும் ஏற்படுகின்றது. இதுபோன்ற ஆவணப்படுத் தல் எதிர்கால சந்ததியினருக்கு பெரிதும் தொடர வேண்டிய பணியிது தொடரட்டும்.

இக்கட்டுரை எனது முந்திய சந்ததி யினரான திரு.து.யோகலிங்கம் ஆசிரியர், திரு.அமிர்தலிங்கம், திரு.மு.ஆறுமுகம், திரு.சிவசாமி, திரு.கண்ணன், திரு.அம்பலவாணர், ஆகியோர் வழிகாட்டினர். இவர்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.



# NEW BROTHER'S PUBLICATIONS







# New Brother's Driving School

360 Fairview Road. West
Mississauga, ON. L5B 3W5

## T. Ramasamy

## 905-949-1718, 416-409-9258

# புங்குடுதீவின் இடப்பெயர்களில் எட்டாம், ஒன்பதாம் வட்டாரங்கள்

- எஸ். எம். தனபாலன் -

பண்டைய மனிதன் படிப்படியாக நாகரீக வளர்ச்சியடையத்தொடங்கி, நாடோடி வாழ்க்கை தவிர்த்து, தன்னை ஓரிடப்படுத்தி தொழிற்பட்ட காலத்திலிருந்தே, தான் வாழும் இடங்களுக்கு பெயரிட்டு அழைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது எனலாம். மானுடம் பண்பாட்டு வளர்ச்சியடைந்து, சமூக ஒழுங்குகளும், அதனது தேவைகளும் பன்முகப்பட்டு, வாழ்விடங்களின் எல்லை விரிவடைந்து செல்லவேண்டிய சூழ்நிலையில் இடப்பெயர்களின் அத்தியாவசியம் உணரப்பட்டிருக்க வேண்டும். அன்றிலிருந்து இன்றுவரை சமூக, பொருளாதார, விஞ்ஞான, பண்பாட்டுச் செயற்பாட்டுக் கூறுகளின் அடிப்படையில் இடப்பெயர் முக்கியத்துவம் பெற்றுவிட்டது.

பண்டைய மனிதன் தான் வாழ்ந்த சூழலில் காணப்பட்ட பறவைகள், விலங்குகள், மரம், செடிகொடி, ஆறுகள், குளங்கள் என்பனவற்றை இனங்கண்டு அவற்றின் உருவம், பயன்பாடு, செயற்பாடு என்பனவற்றின் அடிப்படையில் அவற்றிக்கு பெயரிட்டு, அதன் பெயரால் இடப்பெயர்களையும் அழைத்துக்கொண்டான். காலப்போக்கில் கடவுள், அரசன், சான்றோன், ஆட்சியாளர்கள், உடமையாளர்கள், புராண, இதிகாச, இலக்கிய மாந்தர்கள், மொழி, இனம், சமூக சேவையாளர்கள், தாய்தந்தையர், மூதாதையர், தொழிற்பகுதிகள், இட அமைவுக்கூறுகள், அதன் தன்மை, நிறம், தோற்றம் என்றின்ன பலவாறான வகையிலான இடப்பெயர்கள் தோற்றம் பெறலாயின.

இந்தவகையில் தமிழீழத்தின் வடக்கே யாழ்ப்பாண குடாநாட்டின் வடமேற்காக சிதறிக் கிடக்கின்ற தீவுக்கூட்டங்களின் மத்தியில் அமைந்திருக்கும் ''புங்குடுதீவிலும்'' பண்டைக்காலம் தொட்டே இடப்பெயர்கள் வழங்கிவருகின்றன. ஒவ்வொரு இடங்களுக்குமான பெயர்கள் அதற்கான காரணங்களை வெளிக்கொணர முயற்சியெடுத்திருக்கும் கனடா புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்தின் முயற்சி பாராட்டுக்குரியதாகும்.

புங்கைமரங்கள் நிறைந்து காணப்பட்டதால் புங்குடுதீவு என்ற பெயர் வந்தது என்று பொதுவாக கூறப்பட்டாலும், வரலாற்றாய்வாளர்கள் வேறு பல காரணங்களையும் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக ''ஈழத்து இடப்பெயர் ஆய்வு'' என்ற ஆய்வுப்புத்தகத்தில் அதன் ஆசிரியர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிடும் காரணங்கள் ஆராயத்தக்கவையாகும்.



1. தமிழகத்திலுள்ள ''பூங்குடி'' என்னும் ஊரிலிருந்து முஸ்லீம் படையெடுப்பினால் இடம் பெயர்ந்தவர்கள் வந்து தங்கி தமது ஊர்ப் பெயரான ''பூங்குடி'' எனும் பெயரை வைத்தார்கள் என்றும், அதுவே ''பூங்குடித்தீவு – புங்குடித்தீவு – புங்குடுதீவு'' என மருவிற்று என்றும்,

2. புயங்கு என்ற ஓரின மரங்கள் நிறைந்து காணப்பட்டமையால் இது ''புயங்கதீவு'' என்றழைக்கப்பட்டு பின்னர் புங்குடுதீவு என மருவிற்று என்றும்,

3. செல்வம் கொழித்த தீவாக விளங்கியமையால் ''பொன்கைதீவு'' என்று அழைக்கப்பட்டு பின்னர் புங்குடுதீவு என மருவிற்று என்றும் குறிப்பிடுகின்றார்.


ஆனாலும், மூதாதைகளின் வாய்மொழிச் சான்றுகளை ஒப்பிட்டு பார்க்குமிடத்தும், ''கந்த புராண மறைபொருள் விளக்கம் என்கின்ற புத்தகத்தில் டானியல் ஜோன் என்பவரின் கருத்துப்படியும் புங்கைமரங்களின் மஞ்சள் நிறப்பூவின் நிறத்தோடு எப்பொழுதும் பொலிந்து கொண்டிருந்த தீவு என்பதனால் புங்கை+உரு+தீவு = ''புங்கையிருத்தீவு–புங்குருத்தீவு – புங்குடுதீவு'' என்றாகியிருக்கலாம். (புங்கையென்பது மஞ்சள் நிறப்பூக்களையுடைய ஒருவகை மரம். உரு என்பது நிறம். தீவு என்பது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட பிரதேசம்) புங்கை மரங்கள் பிற்பட்ட காலத்தில் புங்கை மரங்கள் என்றும் அழைக்கப்பட்டன. ஆகவே புங்கு+உரு+தீவு = ''புங்குருதீவு – புங்குடுதீவு'' என்றும் மருவியிருக்கலாம் என்பதே பொருத்தமானது.

புங்குடுதீவு, சப்த தீவுகளுக்கும் மத்தியில் அமைந்திருப்பதால் ஒல்லாந்தர் இதனை "மிடில்பேர்க்" (Middle Burgh) எனப்பெயரிட்டு அழைத்தனர். மேலும் தென்னிந்திய அரசர்களான சோழர், பல்லவர் ஈழத்தின் மீது படையெடுத்த காலங்களிலும், அரசர்களும், படைவீரர்களும் தங்கியிருந்ததற்கான ஆதாரங்களும் இங்கு காணப்படுகின்றது. அதிலும் பல்லவர்களினது உணவுமுறை, பேச்சுவழக்குச்சாயல் என்பனவும் இம்மக்களிலே பெரிதும் காணப்படுகின்றது. தொடர்ந்து ஒல்லாந்தர், போர்த்துக்கீசர், ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலங்களிலும் இத்தீவு முக்கியத்துவம் பெற்றிருந்ததற்கான கட்டிட அழிவுகளை தீவின் தென்கரையிலும், ஊரைதீவுக்கு வடமேற்கேயுள்ள கடற்கரைப்பகுதிகளிலும், தென்மேற்கு கடற்பகுதிகளிலும் காணக்கூடியதாக விருக்கின்றது.

எனவேதான் புங்குடுதீவின் இடப்பெயர்கள் பலதரப்பட்ட வகையில் தோன்றியும், மருவியும் இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. புங்குடுதீவு பன்னிரெண்டு (வட்டாரங்கள்) கிராமசபை நிர்வாகப் பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு வட்டாரங்களிலும் பலநூறு இடப்பெயர்கள் சூட்டப் பட்ட, சிறுசிறு அலகுகளாக காணப்பட்டபோதும் அவ்விடப்பெயர்களுக்கான காரணங்கள் பலர் இன்னும் அறியாததே.

**புங்குடுதீவு எட்டாம், ஒன்பதாம் வட்டாரங்கள்.**

புங்குடுதீவின் வடக்கே, வேலணைத் தீவுக்கும் புங்குடுதீவுக்குமான, இணைப்புப் போக்குவரத்துப் பாலமான "அம்பலவாணர்



தாம்போதி" புங்குடுதீவின் நுழைவாயிலில் புங்குடுதீவை ஊடறுத்து, பிரதான போக்குவரத்துப் பெருந்தெருவாகி ஊடறுத்துச்செல்லும். மேற்குப் பகுதி ஏழாம் வட்டாரமாகவும், கிழக்குப்பகுதி எட்டாம் வட்டாரமாகவும் எல்லையிடப்பட்டுள்ளது. இதன் எல்லை தெற்குநோக்கிச் செல்லும் பெரும்தெருவின் நீண்ட கிழக்குப்பகுதியானது, தன் தெற்கு எல்லையை குறிச்சிக்காட்டுப்பகுதியிலிருந்து கிழக்காக வல்லன் வீதியுடன் இணையும் வல்லன் குறிச்சிக்காட்டு வீதியும், பின்னர் தெற்கு நோக்கிச்செல்லும், திகழிக் குளத்திற்கு வடக்காக அமைந்துள்ள "சுடலை



வீதி" கிழக்கே கடல் எல்லைவரை செல்கின்றது. இதுவே எட்டாம் வட்டாரத்தின் நிர்வாக எல்லை யாகும். இதற்குட்பட்ட நிலப்பகுதியில் கோவில்கள், பாடசாலைகள், நெல் வயல்கள், தோட்டக் காணிகள், பனை வளவுகள், வியாபாரத்தலங்கள், குளங்கள், ஆறுகள், சனசமூக நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், மீன்பிடித் துறைகள், சிறுகைத் தொழிற்பகுதிகள், குடியிருப்புக்கள் என்பன செறிந்து காணப்படுகின்றன. இவையெல்லாம் அவையவை அமைந்துள்ள இடத்தின் பெயரால் விழிக்கப்படுவதனால் இங்குள்ள இடப்பெயரின் அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

**"மடத்துதுறை" "மடத்துக்காடு" "மடத்துவெளி"**

புங்குடுதீவின் வடக்கே அம்பலவாணர் தாம்போதிக்கு தெற்கே பெரும்தெருவிற்கு வட கிழக்காகவுள்ள பகுதி "மடத்துறை" என அழைக் கப்படுகின்றது. அதற்கு தெற்கேயும் தென் கிழக்கேயும் பெரிய கம்பிலியன் வரையுள்ள பகுதி "மடத்துக்காடு" என்றும்,இதன் எல்லைக்கு தெற்கே "பெரிய கம்பிலியனும்" அதற்கு தெற்கே "சின்ன கம்பிலியனும்" கிழக்காக "மாரியன் ஓடையும்" தெற்கே "வல்லனும்" அமைந்துள்ளது. வல்லன் என்ற இடத்திற்கு வடக்கு, வடகிழக்காக அம்பல வாணர் தாம்போதிவரை அமைந்துள்ள பகுதியே "மடத்துவெளி" என்று அழைக்கப்படுகின்றது.

அம்பலவாணர் தாம்போதி அமைக்கப் படுவதற்கு முன்னர் புங்குடுதீவு மக்கள் யாழ்ப்பா ணத்திற்கு செல்வதற்காக மடத்துத்துறை எனும் இடத்திலிருந்து படகு மூலமே செல்ல வேண்டி

யிருந்த காலகட்டத்தில் பிரயாணிகள் தங்குவதற்காக மடத்துத்துறை பிள்ளையார் ஆலயத்திற்கு நேர் கிழக்காக ஓர் பெரிய மடம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த மடம் அமைக்கப்பட்டிருந்த பகுதியே புங்குடுதீவின் தந்தையென்று அழைக்கப்படும் வாணர் (அம்பலவாணர்) சகோதரர்களின் பூர்வீகமாகும். திரு. பெரியவாணர், திரு. சின்ன வாணர் சகோதரர்களின் பிறப்பிடமும் இதுவே. இந்த மடமானது சுண்ணாம்புக் கட்டிடமாகவும், பிரமாண்டமாகவும் இருந்ததனால் இந்தப்பகுதியின் சுட்டுப்பெயராக அமைந்து விட்டது. இந்த மடத்திற்கு அருகே இருந்த துறை "மடத்துத் துறை" என்றும், அருகேயிருந்த காட்டுப்பகுதி "மடத்துக்காடு" என்றும், வெளியாகவிருந்த விவசாயப்பகுதி "மடத்துவெளி" என்றும் அழைக்கப்படலாயிற்று. பின்னர் விவசாயப்பகுதி பெரு நிலப்பரப்பாக இருந்ததனாலும் பாடசாலை, நாடக மன்றம், மீன்பிடி அபிவிருத்திச்சங்கம், விளையாட்டுக்கழகம், கோவில், சனசமூக நிலையம் என்பன "மடத்துவெளி" என்ற குறியீட்டு விலாசத்துடன் அழைக்கப்பட்டதானாலும், எட்டாம் வட்டாரத்தில் வல்லனுக்கு வடக்கேயுள்ள பெரும்பகுதியும், பெருந்தெருவை அண்டி மேற்காக ஏழாம் வட்டாரத்தில் அமைந்திருக்கும் ஊரைதீவின் கிழக்கு, தென்கிழக்கு பகுதிகளும், முருகன் கோவிலடி என்பனவும் உள்ளடங்களாக மடத்துவெளி என்று அழைக்கப்படுகின்றது.

## காம்பிலியன்.

"சின்னக்காம்பிலியன்" "பெரிய காம்பிலியன்"

மடத்துவெளிப்பகுதிக்குள் அமைந்துள்ள பெரு நெல்வயல்கள் "பெரிய காம்பிலியன்" "சின்ன காம்பிலியன்" என்று அழைக்கப்பட்டன. கமம் + வெளி = "கமவெளி" என்ற பெயர் திரிபடைந்து "காம்பிலியன்" ஆனது என்று ஒருசாரரும், இந்த




நெல்வயல்கள் எப்பொழுதும் பெருமளவு விளைச்சலைக் கொடுத்து வந்ததால், பிரமாண்டமான நெற்சூடுகள் வைத்து பொலியடிப்பதற்கு முன்னூற்றுக்கும் அதிகமான எருதுகள் வெளியிடங்களிலிருந்து கொண்டுவந்து பயன்படுத்துவார்களாம். அப்படிப்பட்ட பொலியடிக்கின்ற கமம் என்பதைச் சுட்டி கமம்+பொலியன் = "கமம் பொலியன்" என்பது பின்னர் "கம்பிலியன் என்றாயிற்று என்று ஒருசாரரும் குறிப்பிடுகின்றனர். மேலும் "கம்" என்ற சொல் தமிழில் செய்கையைக் குறிப்பிடுவதனைக் கருத்துள்கொண்டு பார்க்கும் போது இரண்டாவது சாரரின் கூற்று பொருத்த முடையதே. கம்+பொலியன் = "கம்பொலியன் - கம்பிலியன்" அல்லது கமம் + பொலியன் = "கமப்பொலியன் - கம்பொலியன் - கம்பிலியன் என திரிந்திருக்கலாம் என்பது ஏற்கக்கூடியதாகும். நிலத்தளவால் கூடிய விளைச்சல் நிலத்தைக் கொண்ட வடபகுதி "பெரியகம்பிலியன்" என்றும் தெற்கே சற்றுக் குறைவான பரப்பளவைக்கொண்ட விளைநிலம் "சின்னக்கம்பிலியன்" என்றும் அழைக்கப்பட்டது. இதன் எல்லைகள் கிழக்கே கடற்கரைவரை பரந்திருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. இந்த இரு கம்பிலியன்களையும் கிழக்கு, மேற்காகச் செல்லும் "கம்பிலியன் வீதி எல்லை யிட்டு செல்கின்றது.

## மாரியன் ஓடை

பெரிய கம்பிலியனுக்கு நேர்கிழக்காக கடற்கரைவரையுள்ள பகுதி "மாரியன் ஓடை" என வழங்கப்படுகின்றது. இப்பகுதியில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் மீன்பிடித்தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள். பண்டைய காலத்தில் "மாரியன்" என்ற பெயருடையவர் வாழ்ந்த பகுதி என்பதாலும், பருவகால மழைநீர் மேட்டுப்பகுதியிலிருந்து கடலுடன் கலக்கும் ஓடையொன்று இப்பகுதியில் இருப்பதனாலும் இப்பகுதிக்கு "மாரியன் ஓடை" என்றாயிற்று என்பது மூதாதையர் கூற்றாகும். மடத்துவெளி மீன் பிடித்துறை இப்பகுதியிலேயே அமைந்துள்ளது.

## புங்கடி

பெருந்தெருவினூடாக தெற்கு நோக்கிச் செல்லும் பொழுது வரும் பிரதான தெருவான வல்லன் வீதி கிழக்கு நோக்கி செல்கின்றது. இந்த வல்லன் வீதிக்கு வடக்காக பெருந்தெருவை யண்டியுள்ள பகுதி "புங்கடி" எனப்படும். புங்கை மரங்கள் புங்குடுதீவில் அற்றுப்போன காலங்களிலும், இங்கு ஒரு புங்கைமரம் செழித்து நின்றது என்றும் அதனால், அதனைச் சூழவுள்ள பகுதி "புங்கடி" என்று அழைக்கப்பட்டதாகவும் நம்பப் படுகின்றது.


BUYING/SELLING HOME
416.PUNCH ME
FULL TIME REALTORS
PUNCH
SOCKALINGAM
Broker
SHIAMALA
SOCKALINGAM
Sales Representative
416.786.2463
Century 21
Affiliate Realty Inc. Brokerage*
208-80 Corporate Dr.
Scarborough, ON. M1H 3G5
Direct : 416. 786.2463
Tel : 416.290.1200

## பிட்டிவயல்.

மேலே குறிப்பிட்ட வல்லன் வீதிக்கு தெற்காக நீண்டு, உயர்ந்து காணப்படும் விவசாய நிலப்பரப்பு வல்லன் குறிச்சிக்காட்டு வீதிவரை பரந்து காணப்படுகின்றது. இந்தப்பகுதி ஏனைய பகுதிகளைவிட சற்று உயரமாக இருப்பதனாலும், விவசாயம் செய்யும் விளைநிலமாக இருப்பதனாலும் (உயரம் = பிட்டி) "பிட்டிவயல்" என அழைக்கப்பட்டது.



## வல்லன்

வல்லன் வீதிக்கு தெற்காக எட்டாம் வட்டார எல்லையைத்தாண்டி ஒம்பதாம் வட்டாரத்தில் "மாவுதிடல்" என்ற பெரும்பகுதிக்கு இடைப்பட்ட பகுதி "வல்லன்" என்று அழைக்கப்படுகின்றது. வல்லமை பொருந்திய ஒருவனும், அவன் சந்ததியினரும் வாழ்ந்த பகுதியானபடியால் இது "வல்லன்" என அழைக்கப்பட்டது. "வல்லன்" என்ற இந்த இடப்பெயர் மிக ஆதிகாலம் தொட்டே ஈழத்தின் ஏனைய பகுதியினரும் மிக அறிந்திருக்கக்கூடிய அளவிற்கு பிரபல்யமானதாகும். வல்லன் என்ற இந்த எட்டாம், ஒன்பதாம் வட்டாரத்தை உள்ளடக்கிய பெரும்பகுதிக்குள் மேலும் பல தொகுதி இடப்பெயர்கள் குறிப்பிடக்கூடியனவாகும். அவையாவன, நாகதம்பிரான் கோவிலடி" "ஆம்பைக்குளத்தடி" "நக்கந்துக் குளத்தடி" "புட்டிவயல்" "சிற்பியேத்துந்துறை" "கண்டிப்பிள்ளையார் கோவிலடி" "திகழி" "நாவிலடி" "சின்னக்கிராய்" என்பனவாகும்.

## நாகதம்பிரான் கோவிலடி

மடத்துவெளிக்கு தெற்காக புட்டிவயலுக்கு கிழக்காக இருக்கும் பகுதி நாகதம்பிரான் கோவிலடியாகும். இங்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் பண்டைக்காலம் தொட்டே அமைந்திருப்பதனால் ஆலயத்தினைச்சூழவுள்ள பகுதி இவ்வாறு அழைக்கப்பட்டது. மிகவும் பழமை வாய்ந்த புளியமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த நாகதம்பிரான் ஆலயத்தைச் சூழ, அருளிப் பூந்தோட்டம் காணப்படும். இங்கிருந்தே (இவ்வாலயத்தின் நேர் கொட்டில் மேற்குப்புறமாக நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது) நயினாதீவு நாகபூசனி அம்மனுக்கு நாகம் பூ எடுத்துச்சென்று வழிபட்டதாக ஐதீகம் உண்டு. பிற்பட்ட காலத்தில் எட்டாம், ஒன்பதாம் வட்டாரங்களின் தந்தையென அழைக்கப்படக்கூடியவரான சமூக சேவகர், ஆசிரியர் திரு. க. ஐயாத்துரை அவர்கள் இவ்வாலயத்தை புனர் நிர்மானம் செய்து இன்று அலங்காரத்திருவிழா செய்யும் ஆலயமாக இந்த நாகதம்பிரான் ஆலயம் விளங்குகின்றது.

## ஆம்பைக்குளத்தடி (ஆம்பக்குளம்)

பிட்டிவயலுக்கு கிழக்கே, வல்லன்வீதிக்கு மேற்கே, வல்லன் குறிச்சிக்காட்டு வீதிக்கு வடக்கே, நாகதம்பிரான் கோவிலடிக்கு தெற்கே அமைந்துள்ள பகுதி ஆம்பைக்குளத்தடியாகும். இக்குளத்தில் ஆம்பல் கொடி வளர்ந்து பூத்துக்கிடப்பதால் இப்பெயர் உருவாயிற்று. பின்னர் இது திரிபடைந்து சிலர் இதனை ஆம்பக்குளம் என்றும் அழைப்பர்.

## சிப்பியத்தம்துறை

எட்டாம், ஒன்பதாம் வட்டாரங்களுக்கான கிழக்கு எல்லையின் கடற்கரைப்பகுதியை இவ்வாறு அழைப்பர். பண்டைக்காலத்தில் புங்குடுதீவின் கிழக்குப்பகுதியில் சங்கு, சிப்பி என்பன சேகரிக்கப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது வரலாறு. அந்த தொழிற்பாட்டுக்கான ஏற்றுமதித் துறைமுகமாக இருந்த பகுதி என்பதனால் இப்பெயர் உருவாகிற்று. "சிப்பியேத்தம்துறை" என்பது மருவி "சிப்பியத்தம்துறை" என ஆயிற்று. இத்துறையின் ஏற்றுமதியில் வெளிப்பகுதியிலிருந்து வந்த முஸ்லீம் வியாபாரிகள் ஈடுபட்டதற்கான சான்றுகள் உண்டு. உதாரணமாக இதன் அருகே "சோனகன் திகழி" என்றொரு குளம் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. சிப்பியத்தம்



துறை மயானமும், இடுகாடும் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது.

## கண்டிப்பிள்ளையார் கோவிலடி.

எட்டாம் வட்டாரத்தின் கிழக்கே தெற்கு எல்லைப்பகுதியும், ஒன்பதாம் வட்டாரத்தின் கிழக்கே வட எல்லைப்பகுதியிலுமுள்ள நிலப் பரப்பே "திகழி" ஆகும். இங்கு "பெரியதி கழிக்குளம்" "சின்ன திகழிக்குளம்" "சோனகன் திகழிக்குளம்" "திகழி நெல்வயல்" என்பன வெவ்வேறாக அழைக்கப்படும். மிகப்பிரபல்யமான நில அகழ்வாராச்சியில் நான்காயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட மனிதனுடைய உறுப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதி இதுவாகும். (ஆதாரம் "EARLY SETTLEMENTS IN TAFFNA AN ARCHAEOLOGICAL SURVEY" என்ற ஆங்கில மொழிமூலமானது. ஆசிரியர் பொன்னம்பலம் ரகுபதி) இங்குள்ள குளங்களில் தண்ணீர் சற்று மாநிறமாக இருக்கும். இந்தக்குளங்களில் ஆடைகளை அலசி துவைத்து எடுத்தால் அவை மிகப்பிரகாசமாக வந்துவிடுமாம். எந்த விதமான, விஞ்ஞான ரீதியான அழுக்குப் போக்கிகளும் பாவிக்காமல் இவ்வாறு பிரகாசிப்பதால் அல்லது ஒளிர்வதால் திகழ்+ஒளி (ஒளிசெய்தல்) "திகழி" என அழைக்கப்பட்டது.

## பெரிய கிராய். சின்னக்கிராய்.



பெரியகிராய் ஒன்பதாம் வட்டாரத்திலும், சின்னக்கிராய் எட்டாம், ஒன்பதாம் வட்டாரங் களிலும் அமைந்துள்ளது. வல்லன் குறிச்சிக்காட்டு வீதிக்கு வடக்காகவும், தெற்காகவும், நாவிலடிக்கு மேற்காகவும் காணப்படும் பகுதிகள் கிராய் எனப்படும். வடக்கே "சின்னக்கிராயும்", தெற்கே "பெரியகிராயும்" உள்ளது. இது வயல் நிலமும், குளங்களும், வாய்க்காலும், சதுப்பு நிலங்களும் அடங்கிய பகுதியாகும். கிராய் என்பது தமிழில் "கரும் சேற்று நிலம்" அல்லது "புற்காடு" எனப் பொருள்படும். இங்கே புற்காடு, சேற்றுநிலம் என்பன ஒருங்கே காணப்படுவதால் இப்பெயர் வழங்கலாயிற்று. பெரும்பகுதி "பெரியகிராய்" என்றும், சிறுபகுதி "சின்னக்கிராய்" என்றும் ஆயிற்று. மாரிகாலங்களில் மழைத்தண்ணீர் பெருக் கெடுத்து பெரிய கிராய்க்குளம், சின்னக் கிராய்க்குளம் என்பன நிரம்பி பின்னர் கள்ளியாற்று ஓடை வாயிலாக கேரதீவுக்கருகே கடலுடன் கலப் பது வழக்கம். இந்தக்குளங்களின் அருகே குளத்து நீரின் உதவியுடன் நெற்செய்கை மாத்திரம் அன்றி மரக்கறிச்செய்கை, பழச்செய்கை என்பனவும் அப்பகுதி மக்களால் செய்கை பண்ணப்பட்டது.

## நாவிலடி

ஒன்பதாம் வட்டாரத்தில் சின்னக்கிராய்கு கிழக்கே, திகழிக்கு மேற்கே, வல்லன் வீதிக்கு தெற்கே, இலுப்பண்டை நாச்சிமார் கோவிலடிக்கு வடக்கே அமைந்துள்ள பகுதி "நாவிலடி" யாகும். இங்கு நன்னீர் கிணறும், குளம் ஒன்றும், நெல் வயல்களும் காணப்படுகின்றது. இப்பொழுது இல் லாவிட்டாலும் முற்காலத்தில் நாவில் மரங்கள் வளர்ந்து நின்ற பகுதி என்பதால் "நாவிலடி" என்று அழைக்கப்பட்டது.

## இலுப்பண்டை நாச்சிமார் கோவிலடி

ஒன்பதாம் வட்டாரத்தில் நாவிலடிக்கு தெற்காகவும், மாவுதிடலுக்கு வடக்காகவும், திகழிக்கு மேற்காகவும் அமைந்த பகுதியாகும். இங்கு ஸ்ரீ சண்முகநாதன் கனிஷ்ட மகாவித்தியா லயமும், அருகே நாச்சிமார் கோவிலும், வல்லன் தபாற்கந்தோரும், இப்பகுதியிலேயே அமைந்துள் ளது. மிகப்பிரமாண்டமான இலுப்பை மரமொன்று இப்பகுதியில் நின்றதால் இப்பகுதிக்கு இலுப்பை + அண்டை (அயல்) "இலுப்பண்டை" என்று அழைக் கப்பட்டது.

## மாவுதிடல்

ஒன்பதாம், பத்தாம் வட்டாரத்தில் வல்ல னுக்கு தெற்காகவும், பத்தாம் வட்டாரத்தில் வீரா மலைக்கு வடக்காகவும், கிழக்காகவும் உள்ள பெரும்பகுதி "மாவுதிடல்" என்றழைக்கப்படும். இது பத்தாம் வட்டாரத்தின் சிறுபகுதியையும் உள்ளடக்கியது. இப்பகுதியில் மரங்கள் நிறைந்து காணப்பட்டதால் இப்பெயர் வந்தது சிலர் கூறுவர். இன்னும் சிலர் தெற்கேயுள்ள கடல் நுரை அள்ளி வீசப்படும் பகுதி என்பதால் வந்தது என்பர். ஆனால் வரலாற்று ரீதியாக ஒப்பிட்டுப் பார்க்கும் போது மாவுதிடலுக்கு வடக்கே வல்லனும் தெற்கே யும், தென்மேற்கேயும் "வீராமலை" என்ற வீரத்தைக் குறிக்கும் பகுதி இருக்கின்றமையும் கருத்தூன்றிப்பார்த்தால் இடைப்பட்ட இப்பகுதியும் அதனோடு தொடர்புபட்ட வீரத்தினைக் விளை நிலமாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லலாம். இது "மாவுதிடர்" என்றிருந்து பின்னர் "மாவுதிடல்" என்று மருவியிருக்கலாம். "மாவுதிடர்" என்பதை "பெருவலி" பொருந்திய

வர்கள் அல்லது "திடவாலிகள்" என்று தமிழில் பொருள் கொள்ளலாம். எனவே "மாவுதிடர்" என்பது திடசாலிகள் வாழ்ந்த பகுதி என்பதால் ஏற்பட்டது என்பதே பொருத்தமானதாகும். புங்குடுதீவின் தெற்குப்புறக்கடற்கரையில் அமைந்திருக்கும் வெளிச்சவீடும் இப்பகுதிக்குள்ளேயே அமைந்துள்ளது.

## நக்கந்துக்குளத்தடி

நக்கந்துக்குளத்தை அண்டிய பகுதி "நக்கந்துக்குளத்தடி" என்றழைக்கப்பட்டது. இக்குளத்து நீர் கலங்கலாகவும், களிமண் நிறத்து நீர் போன்ற நிறத்திலும் இருக்கும். இக்குளத்தில் முற்காலத்தில் முதலைகள் காணப்பட்டதனால் இப்பெயர் ஏற்பட்டது. நக்கரம் என்பது முதலையைக் குறிக்கின்றது. நக்கரம்+குளம் = நக்கரம் குளம் என்பது மருவி நக்கந்துக்குளம் ஆயிற்று எனலாம்.

## கீரியடித்துறை

ஒன்பதாம் வட்டாரத்தின் தெற்கு எல்லையிலுள்ள கடற்கரைப்பகுதியை இவ்வாறு அழைப்பர். கீரி என்ற பிராணிகள் அதிகம் வாழ்ந்த பகுதி என்பதால் இப்பெயா வழங்கியிருக்கலாம். அங்குள்ள மீன்பிடித்துறையும் "கீரியடி மீன்பிடித் துறை" என்றே அழைக்கப்படுகின்றது.



## காத்தவராயர் கோவிலடி

ஒன்பதாம் வட்டாரத்தில் மாவுதிடலின் நடுப் பகுதியில் அமைந்துள்ள காத்தவராயர் கோவிலை அண்மித்த பகுதிகளை இவ்வாறு அழைப்பர். இப்பகுதி பெரும்பாலும் பனை, தென்னை என்பன நிறைந்த பெருவளவுகளாகும். இதன் மேற்குப் பகுதியிலும், கிழக்குப்பகுதியிலும் தோட்டச் செய்கைகளும் காணப்படுகின்றது.

## இணுபிட்டியாகுளம்.

இது எட்டாம் வட்டாரத்திலுள்ளது. இருபிட்டிக்கு இடைப்பட்ட இடம், நீர் தேங்கி நின்றதால் குளமாக பாவிக்கப்பட்டது. இருபிட்டியால் உருவான குளம் ஆகையால் இதற்கு இருபிட்டியாகுளம் என்ற பெயர் வந்தது. பின்னர் அது மருவி "இணுபிட்டியாகுளம்" என்றாயிற்று. இது குறிச்சிக்காட்டுக்கு வடக்காக பிட்டிவயலுக்கு தெற்காக பெருந்தெருவிற்கு கிழக்காக அமைந்துள்ளது.

## விரும்புளி

ஒன்பதாம் வட்டாரத்தில் பெரிய கிராயின் ஆரம்பத்தில் கிழக்குப் பக்கமாகவுள்ள பகுதி விரும்புளி எனப்படும். குடிசார் நிலத்துடன் நெல் வயல்களும் உண்டு. நல்லதண்ணீர் அதிகமாக கிடைக்கும் இடங்களில் இதுவும் ஒன்று. இங்கு ஒருவகைப்புளியமரம் (கோணல்ப்புளி) நின்றதாகவும், இப்புளியானது புளிப்புத்தன்மையற்ற ஒருவித சுவைதருவது. இதனை எல்லோரும் விரும்பி உண்ணுவர் என்பதனால் விரும்புளி என்ற பெயர் உருவாகியிருக்கலாம்.

## மலையடி


ஒன்பதாம் வட்டாரத்தில் புங்குடுதீவின் தென்கிழக்கு மூளையில் கற்பாறையினால் ஆன பகுதி கடலைத்தடுத்து நிற்கும். இக்கற்பாறை பதினைந்து அடியுயரம் வரை உள்ளது. இதை அண்டிய பகுதிகளை "மலையடி" என்று அழைப்பர். இங்கு காணப்படும் நாச்சிமார் கோவிலை "மலையடி நாச்சிமார்" என வழங்குவர். இதை அண்டிய பகுதிகளில் தென்னந்தோட்டங் களும், மரக்கறித்தோட்டங்களும், புகையிலைத் தோட்டங்களும் ஆங்காங்கு காணப்படுகின்றன. புங்குடுதீவின் நிலமட்டத்தைப்பொறுத்தவரை இந்தப்பகுதியே மிக உயரமான பகுதியாகும்.

## ஐயனார் கோவிலடி

ஒன்பதாம் வட்டாரத்தில் சிப்பியத்தந்து



றைக்கு தென்மேற்காக அமைந்திருக்கும் ஐயனார் கோவிலை அண்மித்த பகுதிகளை ஐயனார் கோவிலடி என்று அழைப்பர். மிகப்பழமை வாய்ந்த அருள்மிகு ஐயனார் ஆலயம் பிற்பட்ட காலங்களில்



புனருத்தாரணம் செய்யப்பட்டு அலங்காரத் திருவிழா நடைபெறும் ஆலயமாக மிளிர்கின்றது. "ஐயனார் கோவிற்குளம்" ஐயனார் இறங்கு துறை முகம்" என்பனவும் அருகே அமைந்துள்ளன.

## வீரபத்திரர் கோவிலடி


ஐயனார் கோவிலடிக்கு தெற்காக உள்ள பனங்காணிக்கு மத்தியில் அமைந்திருக்கும் வீரபத்திரர் கோவிலுக்கு அண்மையிலுள்ள பகுதி களை "வீரபத்திரர் கோவிலடி" என அழைப்பர். இதன் கிழக்கே அமைந்துள்ள கடற்கரைப்பகுதி மீன்பிடியாளர்கள் பயன்பாட்டிற்கு முக்கியத்துவம் பெற்றது. மிகப்பழமை வாய்ந்த இக்கோவிலானது இன்றும் பழமை மாறாது காணப்படுகின்றது.

இவைதவிர எட்டாம், ஒன்பதாம் வட்டாரங் களில் மேலும் சிறுசிறு குளங்கள், வயல்வெளிகள், வளவுகள் என்பன நிறைந்து காணப்படுகின்றன. உதாரணமாக எட்டாம் வட்டாரத்தில் "பல்லகட்டி" "பொன்னம்மா வளவு" குணமாலை கடையடி" "சடைச்சி வளவு" "முத்தன் வளவு" "கொத்த னார் வளவு" "கார்த்தியர் வளவு" "வெள்ளக் குளத்தடி" "உடையார் கிணத்தடி" "குருந்திப் புலம்" "ஆவரைப்பிட்டி" என்று பல சிறுபகுதி களும், ஒன்பதாம் வட்டாரத்தில் "பிராமணக்குளம்" "முதலிக்குளம்" "வண்ணான்குளம்" "பறையன் குளம்" "சோதிநாதர்குளம்" "நல்லதண்ணீர்க் கிணத்தடி" "கள்ளிக்காடு" "தட்டாப்பன்னை" "பிட்டிவயல்" "சேதா கடையடி" "லோயர் கடையடி" என பல சிறு இடப்பெயர்களும் வழக்கிலிருந்து வருகின்றன. இவைகளின் இடப் பெயர்கள் வெளிப்படையான பெயர்களை உடையவர்களாகவோ, உடமையாளர்களாகவோ, உடமையாளர்களின் மூதாதையர்களாகவோ, பாரம்பரிய தொழில் சார்ந்தவர்களாகவோ இருப் பது தெரிகின்றது. இதனால் இவ்விடப்பெயர்களை தனித்தனியாக ஆய்வு செய்யவில்லை.

இதுவரை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இடப்பெயர்களைவிட இன்னும் அதிகமாக இருக்கலாம். ஆனாலும் என் நினைவுட்குட்பட்ட தும், நான் விசாரித்து அறிந்து கொள்ளக்கூடிய தாகவிருந்ததுமானவற்றை மட்டுமே எழுத்துக் குட்படுத்தியிருக்கின்றேன்.

எஸ்.எம்.தனபாலன்
என் தேடுதலுக்கு உதவியவர்கள்

திரு. சி. கோபாலபிள்ளை
திரு. ஐ. எதிர்வீரசிங்கம்.
திருமதி. மா.சிவபாக்கியம்.
திருமதி. கு. பரமேஸ்வரி (சின்னத்தங்கம்.)
திரு. த. நடராசா ( உ.த. நூலகப் பொறுப்பாளர்)



# காணி நிலம் வேண்டும்

- என்.கே. மகாலிங்கம் -

புங்குடுதீவு என்ற காரணப் பெயர் வந்ததன் காரணத்தைப் பலரும் பலவிதமாகச் சொல்லலாம். ஆனால், புவியியல் தன்மையைக் கொண்டே பல இடங்களின் பெயர்கள் ஆரம்பத்தில் உருவாகின என்பது உண்மை. அதைத்தொடர்ந்தே வரலாறு வந்தது. புன்கை என்ற சொல் திரிபடைந்தே புங்கை என்று வந்துள்ளது. ஒரு காலத்தில் இக்கிராமத்தில் புங்கை மரங்கள் அதிகம் செறிந்து காணப்பட்டிருக்க வேண்டும். இந்த மரங்கள் எனக்குத் தெரிந்து காணப்பட்ட ஒன்று. அதில் நாங்கள் கிட்டியும் புள்ளும் வெட்டி விளையாடி உள்ளோம். புன்கை (புங்கை) மரம் ஆங்கிலத்தில் Indian Beech. தாவரவியலில் லத்தீன் பெயர் Pongamia glabra. கன்னடத்தில் காஞ்சி என்றும் மலையாளத்தில் பூன் என்றும் வழங்குவர். சிலப்பதிகாரத்தில் 'பொங்கல் வெண்பொரி சிந்தின புன்கு' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இந்த மரம் பனை, தென்னை போல புறத்தில் வைரமானது. (பிங்கலம்) சிறிய வெள்ளை நிறப் பூக்களை உதிர்க்கும். இந்த மரம் கிராமம் முழுவதும் நின்றிருக்க வேண்டும். புங்கடி, புங்கங்குளம், புங்கங்காடு என்ற பெயர்கள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

அதை விட, நாவல், வேம்பு, புளி, ஆல், ஈஞ்சு, குறிஞ்சாய், பூவரசு, முருக்கு, முருங்காய், காரை, முள்ளி, நாகதாளி முதலிய மரங்கள் இயற்கையாக வளர்ந்திருக்க வேண்டும். பின்னர் பனை, தென்னை, மாமரம் போன்றவை மக்களால் நட்டு வளர்க்கப் பட்டிருக்க வேண்டும். ஆல், புளி, புங்கு, முருக்கு, வேம்பு போன்ற மரங்கள் உள்ள இடங்களை அடையாளப்படுத்துவதற்காக (Landmark), இன்றும் அப்பெயர்கள் வழங்கி வருவதை நாம் பார்க்கலாம். அதுபோன்ற ஒன்றே புங்குகள் உள்ள தீவு புங்குடுதீவு. இலங்கையின் பௌத்த வரலாற்றின் ஆரம்ப காலங்களில் அதை 'பியங்குதீப' என்று அழைத்தார்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அதுவும் மரத்துடன் சம்பந்தப்பட்ட பெயரே. டச்சுக்காரர் தங்கள் நாட்டில் தீவுகளுடன் சம்பந்தப்பட்டவர்கள், வாழ்ந்தவர்கள். தீவுகளைப் போற்றுபவர்கள். அவர்கள் ஒவ்வொரு தீவுக்கும் ஒரு பெயர் கொடுத்திருந்தனர். அதில் புங்குடு தீவுக்கு இட்டபெயர் மிடில்செக்ஸ். தீவுகளுக்கு மையமான இடத்தில் இருப்பதால். இக்காரணிகளை விட்டு விட்டு, அதற்கு பொன்கொடுதீவு, திருப்பூங்குடி, புங்கையூர், பூம்புகார், பெண்கொடு தீவு போன்ற பெயர்களால் அழைப்பது எம்மவரின் கற்பனை வளத்தைக் காட்டுவதல்லாமல் வேறொன்றும் இல்லை.

இவ்விடத்தில், புங்கவர், புங்கர் போன்ற சொற்களின் பொருட்களை நோக்கினால் மேலும் எமது கற்பனையை வளப்படுத்தலாம். புங்கவன் என்பதற்கு சிறந்தோன், குரு, தேவன், புத்தன், அருகன் என்ற பொருட்களும் உள்ளன. புங்கவி என்றால் பார்வதி. இவற்றை வைத்து எம் கற்பனைக் குதிரையை ஓட்டலாம். புத்த குருமார் புங்குடுதீவில் வாழ்ந்ததற்கான வரலாறு உள்ளது. அதனால் வந்ததோ என்றும் காரணம் சொல்லலாம். அதுபோல புங்கன் என்றால் மூடன். எனக்குத் தெரிந்த ஒருவருக்கு புங்கன் என்ற பட்டப் பெயர் இருந்தது. புங்குடுதீவில் இருந்தவர்கள் அத்தனை பேரும் புங்கர்கள் என்றதால் புங்குடுதீவு என்ற பெயர் வந்ததோ! கற்பனையை ஓரளவுடன் நிறுத்திக் கொள்வது எம் உடல் நலத்துக்கு நல்லது.

காணி, வளவு என்ற சொற்கள் இரண்டையும் தற்காலத்தில் ஒரே பொருளுடைய சொல்லாக நாம் பாவித்தாலும் அவற்றுக்கு வேறு வேறான பொருள் இருக்கின்றன. வளவு என்பதற்கு 'தெருவிலிருந்து உள்பக்கமாக அமைந்திருக்கும் ஒரு வழியே உடைய பல வீடுகளின் தொகுதி' என்று தற்காலத் தமிழ் அகராதி தமிழ் நாட்டில் வழங்குவதாகக் கூறு கின்றது. இலங்கையில், 'இந்த வளவில் ஒரு பெரிய வீடு கட்டலாம்' என்ற பொருளில் வழங்குவதாக அதே அகராதி கூறுகின்றது. ஆனால், காணி என்பதற்கு நூறு குழி கொண்ட நில அளவு என்று இன்னொரு அகராதி கூறுகின்றது. அத்துடன் இலங்கையில் நெல்வயல், நன்செய் நிலம் முதலியவற்றையும் அது குறிக்கின்றது. ஒரு குழி 144 சதுர அடி நில அளவு. ஆகவே, அளவில் காணி சிறிதாகவும், வளவு பெரிதாகவும் உள்ளதை இங்கே நாம் கவனிக்கலாம். அத்துடன் வீடு அல்லது வீடுகள் உள்ள ஓர் இடமாகவும் வளவை நாம் எடுக்கலாம். சிங்களப் பகுதிகளில் 'வளவுவ' என்பது அந்த அர்த்தத்திலே வழங்கப்படுவதை நாம் கவனிக்கலாம். 'வளவுவ' உள்ள ஒருவரை 'வளவுக்காராயோ' என்றும் அவர்கள் கண்டிய பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

இந்தக் காணிகளுக்காக நாம் பிடித்த சண்டையும் நீதி மன்றம் ஏறியதும், விதானைமார் வந்து வழக்குத் தீர்த்ததும் எம் வரலாற்றில் ஓர் இருண்ட காலம். இப்பொழுதும் அதன் நீட்சியே வேறு வகையில் பெரிய அளவில் நடைபெறுகின்றது.

இந்தக் காணிகளின் பெயர்களை நாம் ஊன்றிக் கவனித்தால் ஆகக் குறைந்தது முந்நூறு ஆண்டு கால எமது வரலாற்றை அறியலாம். அதாவது, ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது, தமது வரி சேகரிப்பிற்காக எம்மிடமுள்ள காணிகளை அளந்து எம் மூதாதையிரிடமிருந்து வரிகளைப் பெற்றிருக்கின்றனர்.

அக்காலத்தில் இருந்த காணிகளின் பெயர் களின் பல இன்றும் தொடர்ந்து இருந்து வருகின்றது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உள்ள உடைமைகள்

வழமைகள், திருமண வழக்கங்கள் போன்றவற்றை தேச வழமைச் சட்டம் என்று எழுத்தில் எழுதிச் சட்டக் கோர்வையாகக் கோர்த்தார்கள். (1707) காணி நில விவரங்களை தோம்பு என்று அழைத்தார்கள். ஒவ்வொரு கிராமத்துக்கும் தங்கள் முகவர்களை அனுப்பி காணிகளை அளந்து அவற்றின் உரிமை யாளர்களின் பெயர்களைக் குறித்துக் கொண்டார்கள். அப்படி அளந்த ஒல்லாந்த உத்தியோகத்தரை மக்கள் 'உலாந்தாக்கள்' என்று சொன்னார்கள். ஒரு காணியை அளக்கையில் வடக்கே, தெற்கே, கிழக்கே, மேற்கே உள்ள காணிகள் யாருக்குச் சொந்தம் என்று சொன்னார்கள். அவை எல்லாம் எழுதப்பட்டு 'கச்சேரி' யில் வைக்கப்பட்டன. ஏதாவது காணி உரிமைப் பிரச்சினைகள் ஏற்பட்டபொழுது இவற்றின் அடிப்படையில் வழக்குகள் தீர்க்கப்பட்டன. அவ்வெழுத் துக்கள் முற்று முழுதாக நூற்றுக்கு நூறுவீதம் சரியானவை என்று கூற முடியாவிட்டாலும் ஓரளவு அதன் உரிமையாளர்களை அது குறிப்பிட்டது என்று நாம் எடுத்துக் கொள்ளலாம்.

நான் இந்தக் கட்டுரையில் கூற வருவது என்னவென்றால், அக்காலத்தில் புங்குடுதீவு நில விபரங்கள்-அதாவது, காணிகளின் பெயர்கள் புங்குடுதீவின் புவியியலைப் பிரதிபலித் திருக்கின்றன. வேறு வார்த்தைகளின் சொன்னால், எமது கிராமத்தின், காணிகளின் அல்லது நிலங்களின் காரணப் பெயரி லிருந்தே எமது கிராமத்தின் புவியியல் எப்படி இருந்தி ருக்கும் என்பதை அறிவதே இந்தக் கட்டுரையின் நோக்கம். எனது முடிவுகள் பெருமளவு ஆய்வாகவும் சிறிதளவு ஊகமாகவும் இருக்கும். இதைத் தொடர்ந்து ஆய்வு மாணவர்கள் இந்த மாயப் பெட்டியைத் Pandora's Box திறந்தால் எமது முந்நூறு ஆண்டு கால வரலாற்றை அறியமுடியும். அக்காலத்தில் வாழ்ந்த மக்களின் பெயர்கள், வழக்குகள், வழிபாடுகள், வழிபாட்டு இடங்கள், தொழில்கள் முதலியவற்றை அறியலாம். அப்படியான சிலவற்றை நாம் இங்கே பார்ப்போம்.

எமது கிராமத்தில் ஒல்லாந்தர் காலத்தில் பல காடுகள் இருந்திருக்கின்றன. குறிஞ்சிக்காடு (குறிச்சிக்காடு) ஈச்சங்காடு, வெந்தயக்காடு, பெருங்காடு, நாயத்தங்காடு, வேலிக்காடு, புங்கங் காடு போன்ற காடுகளின் பெயர்கள் என் நினைவிற்கு உடனடியாக வருபவை.

நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டிருந்திருக் கின்றன. குளங்கள் இருந்திருக்கின்றன. பெரிய கிராய், சின்னக்கிராய், வெட்டுக்குளம், ஆம்பல்குளம், செட்டி குளம், வண்ணாங்குளம், சவுனாக்குளம் முதலியன எனக்குத் தெரிந்த குளங்கள். தல்லமி என்றால் குழி அல்லது நீர்க்குண்டு. அந்தக் காலத்தில் அவ்விடம் நீர் நிறைந்த இடமாக இருக்க வேண்டும்.

செட்டிமார்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அல்லது அவர்களுக்குக் காணி, தோட்டம், குளம் முதலிய இருந்திருக்கின்றன. உதாரணமாக, எனது பெரியம்மா, பெரியமாமி வாழ்ந்த இடங் களுக்குப் பெயர் செட்டி தோட்டம், செட்டியார்குளம். அவை இரண்டுமே கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள இடங்கள். அதிலிருந்து அங்கு செட்டிமார்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதும் கண்ணகி கோயில் கட்டி வழிபட்டிருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது. இலங்கை முழுவதும், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் 18, 19 ஆம் நூற்றாண்டு ஆரம்ப காலங்களில் செட்டிமார்கள் நிறைந்து காணப்பட்டிருக்கிறார்கள் என்பது வரலாறு. அதைவிட, பல கிராமங்களில் செட்டி குறிச்சி இருந்திருக்கின்றது.

கண்ணகி சிலை கடலில் அடைந்து வந்ததும், அவ்விடத்தில் வந்தவுடன் அதைத் தூக்க முடியாமல் போனதும் கட்டுக் கதை என்பதே என் எண்ணம். எமது கிராமம் முழுவதுமே இப்படியான சிறு தெய்வ வழிபாடே திக்குத் திக்காக இருந்திருக்க வேண்டும் என்பதை பெரிய தம்பிரான் கோவில், பிள்ளையார் கோவில், ஐயனார் கோயில், பத்திரகாளி கோயில், நாயமார் கோயில், நாச்சிமார் கோவில், மாரியம்மன் கோவில், காளி கோயில், பேச்சியம்மன் கோவில், வைரவர் கோயில், முருகன் கோயில் முதலிய பெயர்களி லிருந்தே நாம் அறியலாம். பின்னர் ஆகம, பிராமண செல் வாக்கு வந்து ராஜராஜேஸ்வரி அம்பாள், சிவன், பாலசுப்ரமணியர், விக்கினேஸ்வரர், என்பன போன்ற பெயர்களாக மாற்றப்பட்டு விட்டன என்பதே உண்மை. அத்துடன், இந்தச் சிறுதெய்வங்களுக்கு ஒரு காலத்தில் உயிர்ப்பலி கொடுக்கப்பட்டது. அவற்றுக்கு நேர்த்திக் கடனாக ஆடு, சேவல்களை நேர்ந்து விட்டது உண்டு.

சங்குவேலி என்ற இடம் உள்ளது. அப்படி யென்றால் எமது கடலில் சங்கு எடுப்பது அதிக அளவு ஒரு காலத்தில் நடந்திருந்திருக்கிறது.


தெல்லியான் வளவு என்றொரு இடம் இருக்கிறது. தெல்லியான் என்றால் அஞ்சல்காரன் அல்லது பல்லக்குத் தூக்கி என்பது பொருள். அப்படியென்றால் அக்காலத்தில் அந்தத் தொழிலைச் செய்தவர் அங்கு இருந்திருக்கிறார். அல்லது அவருக்கு காணி இருந்திருக்கின்றது.

நன்னூல் (274) இடுகுறி, காரணம், மர போடாக்கம் என்றும், இலக்கணச் சுருக்கம் இடுகுறி, காரணம், காரண இடுகுறி என்று மூன்றாகவும் பெயர்ச் சொற்களைக் பகுத்துள்ளது. ஆகவே, சிலவேளை இடப்பெயர்களை ஆராயும் போது, காரணம் இன்றியே இடுகுறியாகவும், காலவோட்டத்தில் காரணமாக வைக்கப்பட்ட பெயர் காரண இடுகுறியாகவும் வந்திருக்கலாம். ஆகவே, நாம் எல்லாப் பெயரும் காரணப் பெயரே என்று முடிவு கட்டுதல் ஆய்வின்பாற்படாது.

# எங்கள் ஊரும் எனது மண்ணும்

- நாக சாந்தலிங்கம் -

இந்து மகா சமுத்திரத்தில் மாங்காய் வடிவில் நீரில் மிதந்து கொண்டிருப்பது போன்ற தோற்றத்தில் காட்சி அளித்து, உலகநாடுகளின் கவனத்தை தன்பால் ஈர்த்து இந்து சமுத்திரத்தின் முத்து என்று அழைக்கப்படும் பெருமை பெற்ற அழகிய தீவு இலங்கை. அங்கு தமிழ் ஈழம், ஸ்ரீலங்கா என இரு வேறு நாடுகள். அவற்றில் தமிழ் ஈழத்தில் புகழ் பெற்ற தீவுகளில் ஒன்றான புங்குடுதீவு எங்கள் ஊராகும். அந்தப் புண்ணியபூமி கடல் கொண்ட குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாயுள்ள தீவுக் கண்டங்களில் ஒன்று என்று குறிப்பிடுவது சாலப் பொருத்தமானது.



ஆன்மீகம், தார்மீகம், தெய்வீகம் தழைத்தோங்கும் எங்கள் ஊரை மகா சமாதி அடைந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் "ஒரு தெய்வீக விளைநிலம்" எனப் பாராட்டியமை எங்கள் எல்லோர்க்கும் பெருமை சேர்க்கிறது. எங்கள் ஊருக்கு காலத்திற்குக் காலம் பல பெயர்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. அவற்றுள் திருப்பூங்குடி, பொன்கையூர், பூங்கொடித்தீவு, புயங்குதீவு, கொங்கரடிவா, மிடில்பேர்க், புங்குடுதீவு என்பன குறிப்பிடத்தக்கன.

தமிழகத்தில் பூங்குடி என்றொரு கிராமம் இருந்ததாகவும், அங்கு வசித்த மக்கள் முஸ்லீம் படையெடுப்பு ஏற்பட்டு பல அனர்த்தங்களுக்கு உள்ளாகிய வேளையில் எங்கள் ஊருக்கு தப்பி வந்து குடியேறியதாகவும், அதனால் "திருப் பூங்குடி" என்றும் "பூங்கொடித்தீவு" என்றும் அழைக்கப்பட்டுப் பின்னாளில் புங்குடுதீவாக மாற்றம் பெற்றது என்றும் அறியமுடிகிறது. இலங்கையிலேயே முதன்முதலாக வில்லிசையை அறிமுகப்படுத்திய, பிரபல வில்லிசைக் கலைஞராக விளங்கிய அமரர் வீ.கே. ஆறுமுகம் ஆசிரியர் அவர்கள் எங்கள் ஊரினில் பிறந்தது என்பதுடன், அவர் தன் பெயரின் முன்னால் திருப்பூங்குடி என்பதையும் சேர்த்து திருப்பூங்குடி ஆறுமுகம் என அழைக்கப்பட்டு வந்ததையும் நாடறியும்.

எங்கள் ஊர் செல்வச் செழிப்பில் மிதந்து கொண்டிருந்தமையால் "பொன்கையூர்," "பொன் னகையூர்" போன்ற பெயர்களைப் பெற்றிருந்தது என்பாரும் உள்ளனர். பொன்கையூர்ப் பர்வதன், பொன்கைவாணன், பொன்கைவேந்தன் போன்ற புனை பெயர்களைக் கொண்டோரை இன்றும் நம் மத்தியில் காணமுடிகிறது.

மஞ்சள் நிறமும், மிகுந்த வாசனையுங் கொண்ட "புயங்கு" என்னும் ஒருவகை மரம் செறிந்து காணப்பட்டமையால் "புயங்குதீவு" எனப் பெயர் பெற்றிருந்தது என்பார் சிலர்.

"புயங்குதீவம்" என்ற பெயர் எங்கள் ஊரையே சுட்டியுள்ளது என வல்லிபுரச் சாசன மூலம் தெரியவந்துள்ளது எனவும், சிங்கள நிகண்டில் "நம்பொத்த" எனக் குறிப்பிட்டுள்ளது எனவும் கூறுவாரும் உள்ளனர்.

மாறி மாறி எங்கள் தீவுகளை ஆட்சி செய்த ஐரோப்பியர் தத்தமது நாடுகளின் நிலத் தோற்றத்துடன் ஒத்துப்போகக்கூடியதாகக் காணப்பட்ட இடங்களுக்கு தங்கள் தீவுகளின் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர். போர்த்துக்கேயர் எங்கள் ஊருக்கு "கொங்கரடிவா"என்னும் பெயரை இட்டுச் சென்றனர்.

ஒல்லாந்தர் சப்ததீவுகளைக் கொண்ட ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள அத்தனை தீவுகளுக்கும் தமது நாட்டுப் பெயர்களைச்


# விரும்பியோ அல்லால் விதிவசமோ.... புலம்பெயர்ந்தோம்

ந்தவரை மேல்நாட்டவர் போல் வாழவும் பழகிக்கொண்டோம். இருந்தும் சில பின்னடைவுகள் எம்மிடம் எஞ்சி நிற்கின்றன. அதில் ஒன்றுதான் நீண்டகால பாதுகாப்பான ஆயுட்காப்புறுதி செய்யாதிருத்தல் என்பது. நெருங்கிய உறவுகளிலோ அல்லது நமது குடும்பத்திலோ ஒரு இழப்பு ஏற்பட்டபின் வரும் ஞானோதயம் யாருக்கும் உதவாது. ஆகையால் யாராவது ஒரு முகவரை அணுகி ஏதாவது நல்ல நிறுவனத்தில் கட்டாயம் ஆயுட் காப்புறுதி செய்து வையுங்கள். நீங்கள் தெரிவு செய்யும்

**அந்த முகவர் நானாக இருந்தால் எனக்கும் மகிழ்ச்சிதான்.**



digi Media Creations



**Guna Selliah**
**Life Insurance Broker**
**416.371.7776**

RBC

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

759 Warden Ave., Toronto,
Ontario, M1L 4B5
Tel: 416.759.5453 ext: 401
Fax: 416.759.6220
E-mail: guna@lilandinsurance.com

LIFE • CRITICAL • NON MEDICAL • RESP

கனவுகளில் உருவாகி...

எதிர்பார்ப்புகளால் செதுக்கப்பட்டு ...

ஒரு நிறைவான

வீட்டில் !

நீங்கள்

திருப்தியாக வாழ்வதற்கு!

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

ROYAL LEPAGE

Connect Realty, Brokerage

**Roger Kuhan Thambiah**

Salesperson

**Cell: 416.564.5820**

Bus: 416.284.5555

Fax: 416.284.5727

E-mail: roger.thambiah@gmail.com

880 Ellesmere Rd., Suite 203

Scarborough, ON M1P 2W6



*Where Your Dreams Come True*






உங்கள் கனவுகளை
என்றும் செழுமையான நினைவுகளாக்கிட...

# Phalappass

பாலப்பாஸ்

**647.895.1248**
**416-897-2129**

270 Eddyston Avenue
Toronto ON M3N 1H7


For
All your
Baby Needs...
குழந்தைகளுக்கான தொட்டில்கள், Stollers, Carseats மற்றும்
அனைத்துப் பொருட்களும், சிறுவர்களுக்கான றெடிமேட்
ஆடைகள், விளையாட்டுப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தும் ஒரே இடத்தில்
For all your baby needs.... Cribs, stollers,
Carseats High Chairs, Toys, clothing, gfts,
Baby Assessories..... The List Goes On.....
Kid's
World
2480 Eglinton Ave. E., Unit 4, Scarborough, ON (Midland & Eglinton)
416-266-1010

# சத்தி யாழ் சந்தை




இந்திய, இலங்கை உணவுப் பொருட்கள்
பசுமையான உடன் மரக்கறி வகைகள், பழ வகைகள்,
உடன் கடலுணவுகள், இறைச்சி வகைகள்,
அனைத்திற்கும்

**Tel: 416.266.5025**
**Fax: 416.266.9089**

# Sathi Yal Market

199 Markham Road, Scarborough, ON



digi Media Creations

# Meenakxy

Take Out & Catering


**Fine Sri Lankan & South Indian Food**

மீனாட்சி



3419 Fieldgate Drive, Mississauga, ON

**Tel: 905.238.6114**


ISHWAR JEWELLERS
Specializing in: 22k Gold & Diamond Jewellery
2617 Islington Ave., Etobicoke, ON
416.747.7100
digi Media Creations

# ABBIRAMI

*Catering and Take Out Services*





அபிராமியின் வாழையிலை விருந்து

2619 Eglinton Ave. East
Scarborough, ON

**416.266.5372**



நிர்வாக உறுப்பினர்கள் - 2007

# வீடு வாங்க, விற்க



HOMELIFE
HIGHER STANDARDS

**Pirabaa Nallathamby (Babu)**
Sales Representative

**Cell: 416.399.8093**
**Tel: 416.264.0101**
**Fax: 416.261.1519**
nvpiraba@hotmail.com

HomeLife/Future Realty Inc., Brokerage
262 Markham Road, Scarborough, ON M1J 3C5



* Independently Owned and Operated, REALTOR*

# டாக்டர். கோபால் கோபாலகிருஷ்ணன்

- 26 வருடங்கள் தொடர்ந்து பல் வைத்திய அனுபவம் இலங்கை, ஓமான், கனடா(நியூபவுண்லாந்து) நாடுகளில் அரசாங்க பல் வைத்திய விரிவுரையாளராக கடமையாற்றிய அனுபவம்
- இலங்கை பேராதனை மருத்துவபீடம் பல்வைத்திய விரிவுரையாளராக கடமையாற்றிய அனுபவம்
- பற்களை ஒழுங்குபடுத்துதல் Orthodontics பலவருட அனுபவம்
- மருத்துவப் பிரச்சினை உள்ளவர்களின் பல்வைத்தியத்தில் பலவருட அனுபவம்
- Oral Surgery - Dr. William Prusin

**உங்களுக்குத் தெரியுமா? பல் வலித்தால் பிடுங்கத் தேவை இல்லை**
**வேர் அடைத்தல் மூலம் பிடுங்காமல் வைத்திருக்க முடியும்**




**வாரத்தில் ஆறு நாட்களும் சேவை**



**Sundays by appointment only**

# Tel: 416-299-7080


1910 Kennedy Rd. (Kennedy/Ellesmere) Scarborough

## குடும்ப பல் வைத்தியர்

**Dr. Gopal Gopalakrishnan**

Family Dentist with Orthodontic Practice

**FRIENDLY GENTLE CARING ENVIRONMENT**



digi Media Creations




• Professional Service • Free Market Evaluation • No Obligation Consultation
• Reasonable & Competitive Commission Rate



TEAM PLATINUM AWARD WINNER

**Siva Shanmuganathan**

Broker

**Direct: 416.545.7482**

Bus: 416.264.0101



TEAM PLATINUM AWARD WINNER

**Joy H. Selvanayagam**

Sales Representative

**Direct: 416.358.6928**

Bus: 416.264.0101

HOMELIFE
HIGHER STANDARDS

Homelife / Future Realty Inc.

INDEPENDENTLY OWNED AND OPERATED

This is not intended to solicit buyers or sellers currently under contract with a broker.

# பாதுகாப்பான மற்றும் இதமான தூக்கம்
# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அவசியம்



- HEATING AIR CONDITIONING
- CENTRAL VACCUM
- SECURITY ALARM SYSTEM
- RANGE HOOT

digi Media Creations

அனுபவமும் சேவை நேர்த்தியும் கொண்டவர்களின் சேவை!

## RAMAN APPLIANCES INC.

Show Room: 3021 Markham Rd
Suit 51, Scarborough, ON
**CELL: 647.893.4414**



ராமன் செல்லையா
Raman

# TRAFFIC TICKET INFO CENTRE

**PETER MONTICCIOLO**
Retired Police Officer

# T. Praba

**CELL: 647.866.2545**



**We Defend you**

உங்களுக்கு நாங்கள் உதவுகிறோம்

இலவச ஆலோசனைகள்

646 Oakwood Ave., Unit #2 (1Block 5 of Eglinton), Toronto, ON Fax: 416.781.1577

**Lawyers Available - Free Consultation**

உ

# சாரதா பீடம்

## ஸ்ரீ நிவாசகுகனேஸ்வர சர்மா

புங்குடுதீவு-5, இலங்கை

திருமணம், பதிவுத்திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும் கணபதி ஹோமம், லட்சுமி ஹோமம், கிரக சாந்தி போன்ற வைதீக கிரியைகளையும் நடத்த நாடவேண்டிய இடம். மற்றும் திருமண மண்டப ஒழுங்குகளுக்கும் அழையுங்கள்.



## குகன் குருக்கள்

**416.292.6089, 416.335.5505**

# FAMILY MEDICAL CENTRE

## குடும்ப நல வைத்திய நிலையம்

2677 Kennedy Road, Suite 10
(on Kennedy Between Finch and Huntingwood)

**416.412.7300**

குடும்ப நல வைத்தியர்கள்

**Dr. ஸ்ரீகரன் சின்னத்துரை**

**Dr. Sriharan Sinnadurai** MD, CCFP

**Dr. (Mrs.) துஷ்யந்தி ஸ்ரீகரன்**

**Dr. (Mrs.) Thushiyanthy Sriharan** MD, CCFP

விசேடமாக பெண்கள், குழந்தைகள், முதியவர்களுக்கான மருத்துவ சேவைகள், சிறப்பு மருத்துவர் சேவைகள் **(Specialist)**, மருத்துவ ஆலோசனைகள் **(Consulting)**, இரத்தப் பரிசோதனை, தடுப்பு ஊசி மருந்துகள், **ECG** வசதிகள்


**New Patients Accepted. Call for an appointment**

**416.412.7300**

வாரத்தில் ஏழு நாட்களும் சேவை


| | |
|---|---|
| Sunday | 10:00am - 2:00pm |
| Monday | 10:00am - 8:00pm |
| Tuesday | 3:00pm - 8:00pm |
| Wednesday - Friday | 10:00am - 8:00pm |
| Saturday | 9:00am - 3:00pm |

One Block north of Huntingwood on the east side





digi Media Creations

புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம் கனடா - ஒன்றுகூடல் 2007 இலிருந்து சில காட்சிகள்



















Indian Cuisine & Banquet Hall



J&J BANQUET HALL Swagat

415 Hood Road, Markham L3R 3W2
www.jjswagat.com
Tel: 905.475.5870, Fax: 905.475-2475
E-mail: info@jjswagat.com

digi Media Creations



# சிக்கலில்லாது அடமானக் கடன்

அனைத்துவிதமான
- Mortgage
- Loans
- Line of Credit

தேவைகளுக்கும்

**Bad Credit No Problem**

## Dr. V. Kandia Ananthmoorthy

Mortgage Specialist

3330 Pharmacy Ave. Unit L, Scarborough, ON

**Cell: 416.823.3686**

Tel: 416-773-0009





ஆராதனாஸ்
ஆடவர் நங்கையரின் ஆடை
தெரிவுகளின் அழகு மாடம்
துரித பணமாற்றுச்
சேவையும் உண்டு
2007 Finch Avenue West,
North York, ON (Jane & Finch)
416.740.7711




Coming Soon
Jaffna Cine Arts & Kannagi Arts
இணைந்து வழங்கும்
தயாரிப்பு
தரனின்
நிலா
www.nilamovie.com
இசை
பாடல்கள்
ஒளிப்பதிவு
படத்தொகுப்பு
வசனம்
உதவி இயக்கம்
K.ஜெகன்
கதை
திரைக்கதை
இயக்கம்
V.தரன்

# சக்தி என்றால் காப்புறுதி

காப்புறுதித் துறையில் எதிர்வருடம் "வெள்ளி விழா" கொண்டாட இருக்கும் வேளையில் எனது தொழிலுக்கு முதலிட்ட **"450"** இற்கும் மேலான புங்குடுதீவு வாழ் வாடிக்கையாளர்க்கும், மற்றும் நண்பர்களுக்கும் இருகரம் கூப்பி எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இங்ஙனம்

உங்கள் சக்தி

- ஏறத்தாழ **"9600"** திருப்திகரமான வாடிக்கையாளர்கள்.
- ஏறத்தாழ **"100"** துரித மரண இழப்பீடுகள்
- ஏறத்தாழ **"20"** நிரந்தர ஊன இழப்பீடுகள்
- அன்றும், இன்றும், என்றும் ஒரேதொழில் - முழுநேரதொழில்
- துல்லியமான, சிந்தனையைத் தூண்டும் விளக்கம் - நெறியான சேவை
- எவருக்கும், எச்சூழ்நிலையிலும் நிறுவனங்களின் நிபந்தனைப்படி "தரமான" காப்புறுதி உங்கள் கட்டுப்பாட்டுக்குள் அமைய கொடுக்கும் திறமை
- **"தலைப்பிற்கேற்ப தகைமையுடையவர்"** என்று பல்வேறு பிரமுகர்கள், வாடிக்கையாளர்கள், வாசகர்களின் பாராட்டையும் மதிப்பையும் பெற்ற கௌரவம்.

பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதியென்றபடியால் பாரபட்சமின்றி மனவேதனையற்ற பலனை வென்றிட நாடுங்கள்.



## சக்திவேல்

**Phone: 416-706-3530, 905-763-8912**

Fax : 905-763-2299

E-mail: geroge14@sympatico.ca

மன்னிக்கவும் "வாகன", "தீ" காப்புறுதி செய்வதில்லை.
வாடிக்கையாளர்களுக்கு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

# சீமாட்டி சில்க் ஹவுஸ்

## Ceematy Silk House





- பட்டுச் சேலைகள்
- முகூர்த்தப் புடவைகள்
- பெண்கள், ஆடவர், சிறுவர்களுக்கான நவநாகரீக ஆடைகள்
- துரித பணமாற்று சேவை
- அன்பளிப்புப் பொருட்கள்
- எவர் சில்வர் பாத்திரங்கள்

3300 McNicole Ave. E,
Unit # 4A
Scarborough, ON

**416.291.6600**





digi Media Creations



invis

For All your Mortgage & Refinancing needs

Pirapa Sivalingam

Senior Mortgage Consultant

Direct: 416.999.7482

Tel: 416.745.3867

2929 Lawrence Ave. E., Suite #203, Scarborough, ON

E-mail: pirapas@invis.ca





digi Media Creations

# Dr. Vijayakala Sivathevan

கைராசியான

குடும்பப் பல்வைத்தியர்





700 Markham Road
Unit #1, Scarborough, ON

**Tel: 416.438.5536**
**Cell: 416.892.0987**

digi Media Creations




# Eastown

## Restaurant & Banquet Halls











50 பேர் தொடக்கம் 700 பேர் வரையில் கொள்ளக்கூடிய அலங்கரிக்கப்பட்ட மூன்று மண்டபங்கள் ஒரே இடத்தில் அமைந்துள்ளன.

2648 Eglinton Ave. East
Scarborough, ON

**416.265.3333**
**416.266.3841**


வீடு வாங்க விற்க,
மற்றும் ஆயுட் காப்புறுதி
தேவைகளுக்கும்.
RE/MAX
Re/Max Crossroads Realty Inc Brokerage
1055 McNicoll Ave, Toronto ON
KEN KIRUPA
Sales Representative
416 294 9322
416 830 8191
familyprotection.ca
Lilard Insurance Inc
759 Warden Ave, Toronto ON

பூவரசம்பொழுது 2007 வெற்றிபெற வாழ்த்துகிறோம்

YASO SINNADURAI

BARRISTER & SOLICITOR, NOTARY PUBLIC

THE LAW OFFICES OF YASO SINNADURAI

# பூவரசம் பொழுது 2007



நாட்டுப்பற்றாளர்

**கவிஞர் சு. வில்வரட்ணம் (சு.வி.) அரங்கு**

**பிரதம விருந்தினர்**

**Dr. Coomar Kirupa,**

F.R.C.S (Canada), F.R.C.O.G. (UK),
Consultant Obstetrician and Gynaecologist,
Scarborough General Hospital, Toronto, Canada

## நிகழ்ச்சி நிரல்

கொடியேற்றல்

மங்கல விளக்கேற்றல், அகவணக்கம்

தமிழ்த்தாய் வாழ்த்து

**Kalakkal - Music Group**

பிரதம விருந்தினர் உரை

சமூக, கல்வி பணியாளர்கள் கௌரவிப்பு

**Video Clip**
நடந்து வந்த பாதை
ஒளிவட்டம்



*Kanagaambikai*

**Nahai Maadam**

# யசோ சின்னத்துரை

சட்டத்தரணி

2100 Ellesmere Raod, Unit 202, Scarborouh, ON, M1H 3B7

416-265-3456




# பூவரசம் பொழுது 2007

**Dance** - பூவரசப் புதுரசம்

தலைவர் உரை

கௌரவ விருந்தினர் உரை

**Video Clip**

இது எங்களின் கதை

சிறப்பு விருந்தினர் உரை

மலர் வெளியீட்டுரையும், வெளியீடும்

நகைச்சுவை நாடகம்

இடைவேளை

நாடகம்

நடனம் – பூவரச மதுரசம்

அதிஷ்டலாபச் சீட்டுழுப்பு

நிறைவு



நிகழ்ச்சித் தொகுனர்

P.S. சுதாகரன்

S. Viveka


•Finest Quality 22 k Gold

•Singarpore Jewellery

•Diamonds
•Birth Stones


•Watches
•Jewellery Repairs



# கனகாம்பிகை அடகு மாடம்

3160 Eglinton Ave. E, Unit #3, Scarborouh, ON, M1J 2H3

Tel: 416-269-7198


அன்றும்
இன்றும்
என்றும்..
For professional videography
JEYA VIDEO
production
Jeya
bus: 416 492 7777
cell: 416 436 6666
fax: 416 754 2687
www.jeyavideo.com
e-mail:video@jeyavideo.com
91 havendale road
scarborough on m1s 1e6
JEYA VIDEO
416 492 7777
DVCPRO


உங்கள் அனைத்து
நகைத்
தேவைகளுக்கும்
Best Quality 22k, 24k Gold, Diamonds, Pearl, Custom created Jewellery and all kinds of repairs
AMMAN'S JEWELLERS INC.
Tel: 416.461.6217
Fax: 416.461.2697
1608 Gerrard Street East, Toronto, ON M4L 2A5
digi Media Creations


புங்கை மண்வாசம் கலந்த சேவையுடன்
YOUTH RUBEES
BANQUET HALL
YOUTH RUBEES
Party Services & Banquet Hall
திருமணம், பிறந்த நாள்,
பூப்புனித நீராட்டுவிழா,
மற்றும் சகல வைபவங்களுக்கும்
1200 பேர் வரை அமரக்கூடிய மண்டபம்
அனைத்து திருமணம் சம்பந்தமான
தேவைகளுக்கும் அழையுங்கள்
தொடர்புகளுக்கு
Ruban Theivendram
416-588-8300
உங்கள் கனவுகளை நனவாக்கிட
யுத் ரூபீஸ்

# வீடு வாங்க விற்க

வருமான வரிச்சேவை

TAX

**416.302.7283 (SAVE)**

RE/MAX VISION REALTY INC., REALTOR
TEL: 416-321-2228, FAX: 416-321-0002
0 MARKHAM ROAD, UNIT-1, TORONTO, ON. M1B 5V6


Web: www.MahenOnline.com
email: msingarajah@trebnet.com

எப்போதும் நான் உங்கள் பக்கம்

வுக்கும் செலவுக்கும் இடையிலான நுட்பமான
இடைவெளியே ஒருவரை செல்வந்தராக்குகிறது"

வரவு ⇆ வரி

சேமிப்பு ⇆ வீடு





Mahen Singarajah

Sales Rep.

# UTHAYAS TEXTILES

**AUDIO, VIDEO & GIFTWARE**



பெண்கள், ஆடவர், சிறுவர், சிறுமியர்களுக்கான சகலவிதமான நவ நாகரீக
ஆடைத்தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்

## உதயாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

- அன்பளிப்புப் பொருட்கள்
- எவர்சில்வர் பாத்திரங்கள்
- சுவாமிப் படங்கள்

என அனைத்துப் பொருட்களும் எம்மிடம் உண்டு

புதிய பழைய வீடியோ, சீடி, டிவிடிகளும் உண்டு

5010 Steeles Ave. West, Unit #9,10
Etobicoke, ON  M9V 5C6 (Kipling & Steeles)
**Tel: 416-742-1425, 416-740-7971**
Fax: 416-840-6084

துரித பணமாற்றுச் சேவையும் உண்டு




## உதயாஸ்
## சுப்பர் மார்க்கட்

அனைத்து இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், உடன் மரக்கறி வகைகள்,
பால், பழ வகைகள், ஆட்டிறைச்சி, கோழி, இறைச்சி, மீன்

வட அமெரிக்காவின்
மிகப்பெரிய வர்த்தக அங்காடி

5010 Steeles Ave.West #14
Etobicoke (Steeles & Kipling)
**416-740-7971**


கனடியத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில்
இது ஒரு பிரமாண்டமான தயாரிப்பு
தாய்மண்
நிறுவனம் பெருமையுடன்
வழங்கும்
நா. இளங்கோ
செந்தூரன்
அழகையா
கதிர் மகாத்மன்
என் செல்லமே...
www.thaimanns.com
வெகு விரைவில் உங்கள் அபிமான திரையரங்குகளில்...
Coming Soon
digi Media Creations


For Your Enlightening Events
The Princess Banquet
416 261 3333
3330 Pharmacy Avenue, Scarborough Ont. M1W2K2
www.theprincessbanquet.com | E-Mail:info@theprincessbanquet.com


Movie Creations - Presents
Sakthy's
அதிகாலை 26
Athikalai
Coming Soon!
இசை S.V. வர்மன் - கதை திரைக்கதை வசனம் தயாரிப்பு இயக்கம் V.K. மூர்த்தி



# மேருபுரம் ஸ்ரீ மஹா பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

# MERUPURAM SRI MAHABHATHIRAKALI AMMAN TEMPLE

**Toronto**



இறைபணியில்

பிரம்மஸ்ரீ லிங்கசுரேஸ்வரநாத குருக்கள் (சுரேஸ் ஐயா)

பிரம்மஸ்ரீ லிங்க ரமேஸ் குருக்கள் (ரமேஸ் ஐயா)

**1510 Birchmount Road, Unit 104, Scarborough, ON**

www.torontokali.com, Email: kaliamman@gmail.com

**416.615.0100**

# கிரடிட் பிரச்சினையா? நிதி சம்பந்தமான எல்லா சேவைகளும் ஒரே இடத்தில்




## Our Special Services

- Consumer Proposal - Mainly to avoid bankruptcy
- No more phone call nuisance to your residence or work place
- No Garnishment of wages or legal proceedings FREE consultation for all credit problems
- Release your debts - increase savings and relax
- We are here to solve any sort of finance problems

**பிரச்சினை உங்களது**

**செயல் வடிவம் எங்களது**

கூடுதல் விபரங்களுக்கு அழையுங்கள்


## Line of Credits + Mortgages செய்து தரப்படும்


$ CR CENTRE
credit recovery centre

**CR CENTRE**

1200 Markham Road,
Suite 527, Scarborough
416-439-4500
WWW.CREDITRECOVERYCENTRE.COM

digi Media Creations


SELVAM VIDEO PRODUCTIONS
DIGITAL VIDEO PRODUCTION CAPABILITIES
ALSO AVAILABLE
DVD VIDEO
SONY
www.selvamvideo.com
e-mail: video@selvamvideo.com
Call: SELVAM
(Proffessional videogrpher)
416.499.9779
416.294.9100
Fax: 647.439.8910



# STANLEY AUTO WORK INC.

We Do Complete
**•Mechanical & Body Work**
**•Paint Job**
**•Insurance Claims**
**•Emmission**

**T. Veerasingam (S. Sehar or Rajan)**
**Tel: 905.781.6263**
**416.988.6659**
Fax: 905.670.9121

1765 Shawson Drive, Unit 20
Mississauga, ON

digi Media Creations




# வினுஷன்

RESTAURANT & TAKE OUT


**We do cater for all occasions**

2398 Eglinton Ave. East,
Scaroborough, ON M1K 2P5
**416 752 5760**

# VINUSHUN'S

FRIED CHICKEN

digi Media Creations





# National Driving School



Excellent Rates,
Insurance Discount
FREE Pick up
& Drop off

**N. Bala**
**416.261.7166**
**416.898.4317**
2900 Eglinton Ave. E, Suite 209, Scarbrough, ON, M1J 2E4



SAKAANA

HOME IMPROVEMENT

RANGE HOODS
GARANGE DOOR OPENERS

FREE ESTIMATE

NADES (MASTER)
416.738.3213

digi Media Creations

Crispy

Fried

Chicken

NFC

New York Fried Chicken



e of New Yorkers

3314 Keele Street
North York, ON

416.635.0804

digi Media Creations



# உயர்வான பாதையில்

# திட்டமிடுங்கள்!




சசி செல்வரட்ணம்

Sales Rep.

Direct **416.725.1125**
Office **416.321.6969**

**HOMELIFE/GTA Realty Inc.**

1711 McCowan Rd., Suite 206, Toronto, ON M1S 3Y




Design & Print Graphic Land - 647 219 7576

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும் கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்

(ஐயாமணி - புங்குடுதீவு - 10)

ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் 416.291.8500

628 E Birchmount Road, Scarborough, ON M1K 1P9

ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயப் பிரதம குரு

**416.266.3333**





## A TOP QUALITY FLORIST

*அதி உயர் மலர்க்களஞ்சியம்*

நகரின் மத்தியில் நம்ம பிள்ளையின்
கைவண்ணத்தில் நல்லதோர் பூக்கடை

## ரொப் குவாலிற்றி பூக்கடை

**Call: Pillai**

**Tel: 416.269.5522**

Fax: 416.269.9784, Cell: 416.989.0207
2871 Lawrence Ave. E, Scarborough, ON
(Between McCowan & Brimley)



SUVAIYAKAM
சுவையகம்
Party Hall, Take Out & Catering
(We specialized in Sri Lankan Food)
digi Media Creations
416.321.6507, 647.284.8107
1545 Warden Ave., Unit #C, Scarborough, ON M1H 2S9
ரொறன்ரோ மாநகரில் மூத்த தமிழ் புடவை மாளிகை
Since 1982
Kumars
Silk House
FANCY SAREES WITH BLOUSE
FASHIONS JEWELLERY
KANJEPURAM,
MYSOORE SILK SAREES,
SEQUENCE WORK,
SCALP WORK SAREES
பட்டு என்றதும் மங்கையர் நினைவுக்கு வரவேண்டிய ஒரே ஒருபுடவை மாளிகை...
ஆண்களுக்கான Party Pants, Shirts, Shirts & Tie பட்டு வேட்டிகள், கொட்டன் கலர் வேட்டிகள் மணமகனுக்குத் தேவையான சர்வாணி சூட், தலைப்பாகை வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு. 2007ம் ஆண்டுக்கான எமது புதிய வெளியீடுகள்
.Fusion Goutham 3 Colour Contrast
.Kamini Emese Contrast
.Anupama Scalop Contrast
.Suguna Fancy Shoulder Embroidery
416-465-7131
1400 GERRARD STREET EAST
TORONTO, ONTARIO
WWW.6KUMARS.CA

Lowfare
travels and tours

Lavan. J.Vaithilingam
Travel Consultant

**Tel: 416.261.0555**
fax: 416.261.9948
E-mail: lavan@lowfaretravels.ca

Lowfare Travels and Tours Inc.
2607 Eglinton Ave. East, Second Floor,
Scarborough, ON
**www.lowfaretravels.ca**



# KESTREL BAKERY
## TAKE OUT & CATERING

பாண், பணிஸ், றோல்ஸ் அனைத்தும்
சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

Bread... Fresh... Daily on the premises

வாரத்தில் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

**5010 Steeles Ave. West, Unit 4**
**(Kipling & Steeles) Etobicoke, ON**

**Tel: 416.744.7279**

digi Media Creations


LEXUS

# Erin Park

**SUREN SENTHINATHAN**
Class - A Inter-Provincial Licence Technician
Lexus Certified Hybrid and Pro Technician

**Cell: 416-712-5978**
905-828-2750 Ext. 272, Fax: 905-828-9282
2360 Motorway Blvd., Mississauga, ON
suren@erinparklexus.com
www.erinparklexus.com


digi Media Creations



**Over 10 years of Automotive service and repair experience**

**Factory Trained in**
- **Lexus**
- **Toyota**
- **Mazda**
- **Acura**
- **Kia**

**Service and Repair All Makes and Models**


Viveka Printers
80 Barbados Blvd., ON
416.410.6401
www.viveka.com

VEEDU
REALTY INC.
BROKERAGE

வீடு வாங்க.... விற்க
மற்றும் அது சம்பந்தமான
ஆலோசனைகளை இலவசமாக பெற அழையுங்கள்

I'll help you buy at the right price or sell your property quickly for the best price



SUJATHA SATHIABAL
Sales Representative

416.886.0526

1345 Morningside Ave., #8
Toronto, ON
416-759-6000
416-759-6005
www.veedu.com



digi Media Creations

MAHARAJA FASHIONS

Retail/Wholesale

Specializing in Exclusive indian Fashions

Neeraj Kumar

1465 Gerrard Street East
Toronto, ON

Tel: 416.406.2911



digi Media Creations



Marketing Solution
Tamil Source
TELEMARKETING
CALLOUT SERVICE
CALL CENTRE
DATA ENTRY
GRAPHIC DESIGN
WEB CREATIONS
PRINTING & DISTRIBUTION
PROMOTIONAL PRODUCTS
TAMIL SOURCE MAGAZINE
The Right Marketing Solution for the Right People
Any Time Any Info Call
416-635 0 635
Arumugam Kiruba
416-244-8818
#1 Fourwinds Dr. Suite 207, Toronto, ON M3J 2T1


ஆயுட்காப்புறுதி
அதிகுறைந்த கட்டணத்தில்
Life Insurance at the Lowest Rates!
·Life Insurance
· Mortgage Insurance
· Non Medical Insurance
·Travel Insurance
· RRSP
· RESP
சிறீதரன் துரைராஜா
Insurance Broker
416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-759-5453 x 407
www.life100.ca
LiLand
RBC Insurance
INDUSTRIAL ALLIANCE
இறுக்கமான சூழலில் இலகுவான தீர்வு

Cash Point®
The Buck Starts Here!

# CHEQUE CASHING
## MORTGAGES
## WORLDWIDE MONEY TRANSFER

# 416.284.7000

காசோலை மாற்றல்  Foreign Currency Exchange

G03-3852 Finch Ave.E, Scarborough, ON. M1T 3T9



ONE STOP



# FINANCIAL SERVICES

- RESIDENTIAL MORTGAGES
- COMMERCIAL MORTGAGES
- REAL ESTATE NEEDS
- REFINANCING
- BUSINESS LOANS
- BUY & SELL HOMES & BUSINESSES

# 416.284.0005

202-3852 Finch Ave. E, Scarborough, ON. M1T 3T9

சூட்டினார். எங்கள் ஊர் அனைத்துத் தீவுகளுக்கும் நடுநாயகமாக விளங்கியமையால் ''மிடில்பேர்க்'' என்ற பெயரை இட்டனர்.

டானியல் ஜோன் என்னும் அறிஞர் புங்கம், உடு+தீவு = புங்குடுதீவு என வந்தது எனக் கந்த புராணத்தைச் சான்று காட்டி விளக்கம் அளித்துள்ளதோடு, கந்தபுராணத்தில் சுட்டப்படும் கிரவுஞ்சம் என்னும் தீவு புங்குடுதீவே எனவும் இனங்காட்டியுள்ளார்.

## எங்கள் ஊரின் பரப்பளவும் எல்லைகளும்

ஒன்பது மாகாணங்கொண்ட இலங்கைத் தீவில் வடமாகாணத்தின் தலைநகராய் விளங்குவது யாழ்ப்பாணம். அந்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே ஒரே தொடராய் உள்ள தீவுக்கூட்டங்களில் எங்கள் ஊரும் ஒன்று. நாற்புறமும் கடலால் சூழப்பட்டுள்ள இத்தீவு யாழ்ப் பாணத்தில் இருந்து 23 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. வடக்கே வேலணை, மேற்கே நயினாதீவு, தென்மேற்கே நெடுந்தீவு, தெற்கேயும், கிழக்கேயும் சமுத்திரம் என எல்லைகளைக் கொண்டு ''ப'' வடிவில் அமைந்துள்ள எங்கள் தீவு ஏறத்தாழ 35 கிலோமீற்றர் சுற்றளவையும், 30 சதுரகிலோமீற்றர் பரப்பளவையும் கொண்டது.


முன்னாளில் எங்கள் ஊரில் இருந்து கடல் மார்க்கமாக யாழ்நகர் செல்வதானால் ஒரு நாள் பயணமாய் இருந்தது. கடற்பயணமும் ஒழுங்கான தாய் அமையவில்லை. படகு கவிழ்ந்து பரிதாப மாய் உயிரிழந்தோர் தொகையும் அநேகமானது. தங்கள் ஊர் மக்கள் பயணத்தில் எதிர்கொள்ளும் கஷ்ட நட்டங்களைக் கண்ணுற்று மிகவும் நொந்த காருண்யசீலர்களான இரு சகோதரர்கள் வேலணைக்கும் புங்குடுதீவுக்கும் இடையே தரவழிப் பாதை அமைக்கும் வழிவகைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார்கள். பல வருட முயற்சியின் பலனாக 1953ம் ஆண்டில் 50க்கு மேற்பட்ட மதகுகளைக் கொண்ட மூன்று மைல் நீளமான, இலங்கையிலேயே மிக நீண்ட தாம்போதியை அமைத்துக் கொடுத்தார்கள். அவர்கள் வேறு யாருமல்ல வாணர் சகோதரர்கள். எங்கள் ஊர் உள்ளவரை அந்தச் சகோதரர்களின் பெயர்களும் நிலைத்திருக்கும். இன்று ஒரு மணித்தியாலத்தில் யாழ்நகர் செல்கிறோம் என்றால் அந்த மாமனிதர்களின் அயராத உழைப்பே காரணம் எனலாம். எங்கள் தாயக மக்களின் நன்மை கருதி உழைத்த அந்த அபூர்வ சகோதரர்களுக்கு என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.




சப்த தீவுகளில் ஒன்றான எங்கள் ஊரிலும் பல்லதீவு, களதீவு, கண்ணாத்தீவு, மண்டதீவு, வரதீவு, கேரதீவு என சப்ததீவுகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எங்கள் ஊர் நிர்வாக வசதி கருதி 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு கிராம சபையின் கீழ் இயங்குகிறது. முன்னாளில் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் இயங்கிய எங்கள் ஊர் தற்போது தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் (வேலணை) பிரிவின் கீழ் இயங்குகிறது. புங்குடுதீவு கிழக்கு, மத்தி, மேற்கு, என மூன்று கிராமசேவகர் களையும், மூன்று கிராமசேவை அலுவலர்களையும், 15 கல்விக்கூடங்களையும், ஓர் அரசாங்க மருத்துவ மனையையும், ஓர் அஞ்சலகத்தையும், வல்லன், ஊரதீவு, இறுபிட்டி, குறிகாட்டுவான், தட்டையன் புலம் என 5 உப அஞ்சலகங்களையும், 60க்கு மேற்பட்ட ஆலயங்களையும், 34 நித்திய, நைமித்திய பூசை நடைபெறும் ஆலயங்களையும், 3 கிறிஸ்தவ ஆலயங்களையும், 12 ப.நோ.கூ. சங்கக் கிளைகளையும், ஒரு கமத்தொழில் திணைக்களத் தினையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

## நினைவகலாத மாமனிதர்கள்

நினைவில் நீங்காத மாமனிதர்கள் இருந்த போதிலும் எல்லோராலும் நன்கு அறியப்பட்ட சிலரைக் குறிப்பிட்டே ஆகவேண்டும். ''வாணர் தாம்போதி'' அமைத்த வாணர் சகோதரர்கள், புங்குடுதீவு மகா வித்தியாலய மாணவர்களின் தவித்த விடாய்க்குப் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய




மகளிர் வித்தியாலயத்திலிருந்து குழாய் வழி நீர் கொடுத்துதவிய அமரர் நா.க. மயில்வாகனம், புங்குடுதீவு சிவன் கோவிலுக்கு இராஜகோபுரம் அமைத்துதவிய அமரர் நாகலிங்கம் சண்முகம், புங்குடுதீவின் கல்விப் பணியில் கவனத்தைச் செலுத்தி உழைத்த அமரர் பேராசிரியர் சி.இ. சதாசிவம்பிள்ளை, சித்தாந்தச் செம்மல், வைத்திய பூபதி, ஈசானசிவன், சி. கணபதிப்பிள்ளை, பிரதிஷ்டா பூஷணம், சிவாகமஞானபானு சிவஸ்ரீ.ஐ. கைலாசநாதக்குருக்கள், அருட்திரு பேராயர் டேவிட் ஜெயரட்ணம், பொறியியலாளர் என்.ஏ. வைத்திலிங்கம், சிவத்தொண்டர், சி. சரவணமுத்து சுவாமிகள், க. வில்வரத்தினம் அதிபர், க. செல்லத்துரை அதிபர், ''போர்ப்பறை'' முழங்கி ''புதுயுகம் பிறக்கிறது'' என அழைத்த மு.தளைய சிங்கம், இலக்கிய கலாநிதி க.சிவராமலிங்கம், இருபெரும் வித்துவான்கள் சி.ஆறுமுகம், பொன் அ. கனகசபை, புவியியற்துறைப் பேராசிரியர் அமரர் சோ. செல்வநாயகம், வழக்கறிஞர் அமரர் ப. கதிரவேலு போன்றோரை எமது தீவுமக்கள் என்றுமே மறக்கமுடியாது.

## நீர்வளம் நிலவளம்

எங்கள் ஊரின் பெரும்பாலான பகுதிகளில் நீர்வளமும், நிலவளமும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப் போகமுடியாத தன்மையே காணப்படுகின்றது. கூடுதலான அளவுக்கு உப்புநீரே காணப்படுகின்றது. நன்னீர் மிக மிக அரிதாகவே தென்படுகிறது. அதனால் குடிநீர் பார ஊர்திகள் மூலம் கொண்டு வரப்பட்டு விநியோகம் செய்யப்படுகிறது. வானம் பார்த்த பூமியாய் உள்ள எங்கள் ஊருக்கு மாரி காலமே வரப்பிரசாதமாய் அமைகிறது. அக்காலத்தில் தாழ்நிலங்களில் நெல், வரகு போன்ற பயிர் வகைகளையும், உயர் நிலங்களில் புகையிலை, வெங்காயம், மிளகாய், பயறு, உழுந்து, குரக்கன், சாமை, மரக்கறி போன்றவற்றையும் பயிரிட முடிகிறது. எங்கள் மக்கள் தங்கள் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு தென்னை, பனை கறிமுருங்கை போன்றவை தாராளமாய் உண்டு.

## தென்னை வளம்


தென்னையும், அதிலிருந்து பெறப்படும் அத்தனை பொருட்களும் பயன்படுத்தப்படுகின்றன. தேங்காயின் பயன்பாடு மிக முக்கியமானது. பிட்டு அவிப்பதனால் மாவுடன் தேங்காய்ப் பூவும் கலக்க வேண்டும். தமிழீழம் வாழ் இஸ்லாமிய சகோதரர்களையும், தமிழர்களையும் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் பிட்டும் தேங்காய்ப்பூவும் போல இணைபிரியாதவர்கள் என்பார்கள். கறி சமைப்பதனால் தேங்காய்ப்பால் எடுக்கப்படுகிறது. தாகம் தீர்க்க இளநீர் பயன்படுகிறது. இளநீர் வற்றிய தேங்காயான கொப்பராவிலிருந்து தேங்காய் எண்ணெய் எடுபடுகிறது. பாளை, கூம்பாளை, பன்னாடை தீமூட்ட உதவுகிறது. தென்னோலை கிடுகு பின்ன, வீடு வேய, வேலி அடைக்க, கால் நடைகளுக்குத்



Photography

# QuickSnaps

Your moment is our passion




*S. G. Shankar*

*Direct:* **416 677 1296**

*Tel:* **416 292 3242**

Weddings, Events, Fashion, Product, and all occasions

தீனியாகப் பயன்படுகிறது. தென்னோலையி லிருந்து பெறப்பட்ட ஈர்க்கு வீட்டை, முற்றத்தைப் பெருக்க உதவுகிறது. கிடுகுகள் ஏற்றுமதி செய்யப்படுவதும் உண்டு. மரம் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்குத் தேவையான துலாவாகப் பயன்படுகிறது. உயர் ரக குடிவகைகள் இல்லாத இடங்களில் தென்னங்கள் குடிவகையாக இடம் பிடித்துக்கொள்ளும். அப்பம் சுடுவதற்கான மாவைப் புளிக்க வைக்கவும் கள் பயன்படுகிறது.

## பனை வளம்

பனைவளமும் எங்கள் ஊரில் தாராளமாய் உண்டு. "பூலோக கற்பகத் தரு" எனப்படும் பனை யின் பயன்பாடுகளும் அநேகம். குறிப்பிட்டுச் சொல்



வதானால் முழுப்பனையுமே பயன்படுகிறது. பனை யோலையிலிருந்து பெட்டி, பாய், களப்பாய், கடகம், சுளகு, விசிறி, தொப்பி, நீரிறைக்கும் பட்டை என்பன பெறப்படுகின்றன. அதை விட வீடு வேய, வேலி அடைக்க, கால் நடைகளுக்குத் தீனி கொடுக்க உதவுகிறது. ஓலையிலிருந்து பெறப்பட்ட ஈர்க்கிலிருந்து வெங்காயக் கூடை, திருகாணி போன்றவை செய்யப்படுகின்றன. கருக்குமட்டை யிலிருந்து மட்டை, நார் என்பன பெறப்பட்டு, வேலி அடைக்கும் போது ஓலை கீழே விழாமல் இறுக்கிக் கட்ட உதவுகின்றன.

நுங்கு ஓர் அருமையான தின்பண்டம். எந்த ஒரு வெளிநாட்டிலும் அப்படி ஒரு தின்பண்டம் கிடையாது என்றே சொல்லலாம். பனங்காயும் அருமையான தின்பண்டமே. அதிலிருந்து பெறப் படும் கழி நேரடியாகவும், அதை சூரிய ஒளியில் காயவைத்து பனாட்டாகவும் உணவாக உட்கொள் ளலாம். பனங்கிழங்கு, பூரான் என்பனவும் சாப்பிடக் கூடியவை. கிழங்கை அவித்தும், சுட்டும் சாப்பி டலாம். அதே அவித்த, சுட்ட கிழங்குகளை வெய்யிலில் காயவைத்து புழுக்கொடியலாகவும் சாப்பிடலாம். பச்சைப் பனங்கிழங்கை கிழித்துக் காயவைத்து ஒடியலாக எடுக்கும்போது அதன் பயன்பாடு அநேகம். ஒடியல் மாவிலிருந்து கூழ், பிட்டு தயாரிக்கலாம். பனங்கள், பதநீர் உடல் ஆரோக்கியத்தை கொடுப்பன. மரம் வீடு கட்டவும், துலா செய்யவும் பயன்படுகின்றது. இவ்வாறாகப் பனை, தென்னைகளின் பயன்பாடுகளைப்பெற்று தங்கள் சுயதேவையில் மூன்றில் ஒரு பகுதியை யாவது எங்கள் மக்கள் பூர்த்தி செய்வர்.

## பூவரசு

எங்கள் ஊரில் பூவரசம் மரங்களுக்குப் பஞ்சமில்லை. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் அம்மரங்களை நினைவில் கொண்டோ என்னவோ எங்கள் ஊர்க்கொண்டாட் டத்திற்கு "பூவரசம்பொழுது" எனப் பெயர் சூட்டப் பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது, பாராட்டுக்குரியது. பயிர்ச்செய்கைக் காலங்களில் பூவரசங்குழையும் வருவாய் தருகிறது. எங்கள் ஊரில் இருந்து ஏற்றுமதியாகும் பொருட்களில் பூவரசங்குழையும் ஓர் இடத்தைப் பிடித்துள்ளது.

## மீன்பிடி

நாற்புறமும் கடலால் சூழப்பட்டிருந்தும் மீன்பிடித் தொழிலைப் பெரிதாகச் செய்து வரு மானம் ஈட்டக்கூடிய அளவுக்குத் தொழிலாளர் களும், ஆழ்கடலுக்குச் செல்லக்கூடிய பாரிய இயந்திரபடகுகளும், விலையுயர்ந்த வலைகள், பறிகள் போன்றனவும் எங்கள் ஊரில் இன்மையால் வெளியிடங்களில் இருந்து வந்து, வாடி வீடுகளை



அமைத்து, மாதக்கணக்கில் தங்கியிருந்து தொழில் செய்து தனவந்தர்கள் ஆனோர் அநேகர். அவர்கள் மூலமாகவே மீன், கருவாடு போன்றவை ஏற்றுமதி ஆகின.

### எனது உயிர் மண்

புங்குடுதீவில் பன்னிரண்டு வட்டாரங்கள் இருந்தபோதும் நான் பிறந்த மண் எனக்குப் பெரி தல்லவா! மூன்றாம் வட்டாரமே நான் பிறந்த மண் ஆகும். இந்த வட்டாரத்திற்கு வரலாற்றில் தனி யான ஓர் இடம் உண்டு. அம்மன் வீதியால் தெற்கு



நோக்கிச் சென்று கடற்கரையை அடைந்து, அங்கி ருந்து மேற்குத்திசையில் குறிகாட்டுவான் வரை போய் பிரதான வீதி வழியாக கிழக்கு நோக்கி வந்து அம்மன் வீதியை மீண்டும் அடைந்தால் அதுவே மூன்றாம் வட்டாரம் ஆகும். அத்தனை வட்டாரங்களிலும் பெரியது இது. இங்கு நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெறும் நான்கு பிரசித்தி பெற்ற திருக்கோயில்கள் உள்ளன. அவையாவன கோயில்வயல் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், கிராஞ்சியம்பதி முருகன் ஆலயம், கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோம சுந்தரேஸ்வரப்பெருமான் ஆலயம் (சிவன் கோயில்), குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம் (பேச்சி அம்மன் கோயில்) என்பன.

மாரி அம்மன் கோவில் நிர்வாகம் போற்றப் படக்கூடியதாய் அமைந்திருந்தது. அமரர்களாம் முன்னாள் அதிபர். க. வில்வரத்தினம், ஆசிரியர் நா. சோமசுந்தரம் ஆகியோரின் காலத்திலும் சரி ஆலய பூசைகள் எவ்வித தொய்வுமின்றி நடை பெற்றன. புங்குடுதீவு இந்துவாலிபர் மன்றமும் கோயில் நிர்வாகத்திற்கு உற்றதுணையாய் விளங் கியது. அங்கு திருவிழாக்காலங்களில் ஆன்மீக சொற்பொழிவுகளுக்குப் பஞ்சமேயிருக்காது. சித்தங்கேணி சிவசாமிக் குருக்களின் பூசை முறைகள் இன்றும் நினைவுகூரப்பட்டுக் கொண்டி ருக்கும் அளவுக்கு மிகப்பிரசித்தமானவை.

கந்தசாமி கோயில் திருவிழா என்றால் ஊரே களைகட்டிவிடும். யாழ்ப்பாணத்து அத்தனை நாதஸ்வர, தவில் கலைஞர்கள், இன்னிசை வேந் தர்கள், பரத நாட்டிய வித்தகர்கள் என எல்லோரும் வந்து தமது திறமையைக் காட்டி அசத்தோ அசத்து என்று அசத்திவிட்டுச் செல்வார்கள்.

சிவன் கோயில் தனது வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்தினால் உயர்ந்து நிற்கிறது. "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனச் சும்மாவா சொன்னார்கள். அமரர் நாகலிங்கம் சண்முகம் என்ற புண்ணியவாளன் அக்கோபுரத்தை அமைத்துக் கொடுத்து "உத்தம சோழன்" என என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

குறிகாட்டுவான் பேச்சிஅம்மன் கோவில் திருவிழாக்கள் தனித்துவமானவை. அங்கு நடை பெறும் தீக்குளிப்பு ஊரில் வேறெங்குமே நடைபெறு வதில்லை. அந்நிகழ்ச்சி அடியார்களைப் பக்தி வெள்ளத்தில் மூழ்கடிக்கும். நயினை ஸ்ரீ நாக பூஷணி அம்மன் திருவிழாக்காலங்களில் இக் கோயிலில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

திருக்கோயில்களைப் போன்று இவ்வட் டாரத்தில் கல்விச்சாலைகளும் அதிகம். ஊரில் உள்ள பதினைந்து பாடசாலைகளில் பெருங்காடு அ.மி.த.க வித்தியாலயம், பராசக்தி வித்தியாலயம், குறிகாட்டுவான் அ.மி.த வித்தியாலயம் ஆகியன இங்கு உள்ளன. பெருங்காடு அ.மி.த.க வித்தி யாலயம் ஊருக்கே ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. இதன் முன்னாள் தலைமையாசிரியர் அமரர். பொன்னையா தமது அயராத கல்விப்பணி மூலம் சிலை வடிவாய் பாடசாலை முன்றலில் நின்று கொண்ருக்கின்றார்.

### ஊருக்காய் உழைத்த உத்தமர்கள்

கல்விமான்கள் பலரைக் கண்ட புங்கு டுதீவில் எமது வட்டாரக் கல்விமான்கள் சிலர் எக்காலத்திலும் நினைவு கூரத்தக்கவர்கள். அமரர். சி. இ. சதாசிவம்பிள்ளை (இளையப்பா வாத்தியார்)

அவ்வரிசையில் முன்னணியில் திகழ்கிறார். "ஆதிரையான்" எனும் புனைபெயரில் நலன் பல விளைக்கும் நல்ல பல கட்டுரைகளை, கவிதைகளை எழுதிக்குவித்து தனக்கெனத் தனிமுத்திரை பொறித்துக் கொண்டவர். தமிழ், சைவம் இரண்டையும் தம் இரு கண்களாகப் போற்றியவர். ஊரின் தலைசிறந்த தமிழறிஞர்களாய் திகழ்ந்த வித்துவான்கள் சி. ஆறுமுகம், பொன்.அ.கனகசபை ஆகியோரையும், இன்னும் பல ஆசிரியர்களையும் உருவாக்கியவர். புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோயில் முன்றலில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவில் தமிழக அறிஞர்களாம் சிலம்புச்செல்வர் ம.பொ.சி, கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜகநாதன், பேராசிரியர் ஆ.முத்துச்சிவன், பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் ஆகியோர் முன்னிலையில் "பேராசிரியர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். புங்குடுதீவு கலைப் பெருமன்றத்தால் "செந்தமிழ்க்கவிமணி" எனும் பாராட்டுப் பெற்றவர். காலங்காலமாக திருக்கேதீச்சரநாதரையும், கௌரியம்பாளையும் தொழுது அம்பாள் மீது கொண்ட அளவிலா ஈர்ப்பினால் "கௌரியம்பாள் பிள்ளைத்தமிழ்" எனும் பிரபந்தத்தைப் பாடி அம்பாளுக்குச் சூட்டியவர்.

"ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள்" என்ற புலவர் ஈழத்துச் சிவானந்தனின் நூலில் தனக்கென ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டவர் வித்துவான். பொன்.அ.கனகசபை அவர்கள். சைவ சித்தாந்தச் செம்மலாக, இலக்கிய வித்தகராக, புராண உரைகாரராக அறியப்பட்ட அவர் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம்,




புங்குடுதீவு மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நீண்டகாலம் தமிழ் விரிவுரையாளராய் விளங்கி அறிவுச்சுடர் ஏற்றியவர். அவரது அயராத சேவையைப் பாராட்டி இந்து வாலிபர் மன்றம் மாபெரும் விழா எடுத்துக் கௌரவித்தது.

புங்குடுதீவு மகாவித்தியாலய முன்னாள் அதிபர்களான சு.வில்வரத்தினம், மு.இராமலிங்கம் B.SC, சி.இராசநாயகம் B.SC, புங்குடுதீவின் ஒரே பெண்கள் பாடசாலையான ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய முன்னாள் அதிபர்களான திருமதி. மனோன்மணி தனபாலசிங்கம் B.A, செல்வி. மகேஸ்வரி சுப்பிரமணியம் B.SC, பராசக்தி வித்தியாலய முன்னாள் அதிபர் அ.சுப்பிரமணியம் (தம்பிமுத்து வாத்தியார்) பெருங்காடு. அ.மி.த.க. வித்தியாலய முன்னாள் அதிபர்கள் நா.நடராசா, திருமதி. சிவபாக்கியம் நடராசா, ஸ்ரீகமலாம்பிகை வித்தியாலய முன்னாள் அதிபர் ஜேக்கப் பொன்னையா, மற்றும் ஆசிரியர்கள் வேலுப்பிள்ளை, ஆ.சுப்பிரமணியம், இ.துரையப்பா, க.நல்லதம்பி, பொன்.சிவகாமி, சு.சபாரத்தினம் (பெரியசபா) கு.சபாரத்தினம் (சின்னச்சபா) அ.கனகரத்தினம் (சின்னத்துரை வாத்தியார்) நா.சோமசுந்தரம், சோ.குணசிங்கம், முத்துக்குமாரு, ச.தம்பையா, ஆ.தாமோதரம்பிள்ளை, நா.தர்மலிங்கம், ஐ.சண்முகநாதன், திருமதி.காமாட்சி ஆறுமுகம், செல்வி இராசேஸ்வரி துரையப்பா, திருமதி அன்னலெட்சுமி சேனாதிராஜா என என் நினைவுக்கு எட்டியவர்கள் அனைவரும் மூன்றாம் வட்டாரத்தினரே.

## உழைப்பால் உயர்வடைந்தோர்

இங்கிருந்து வெளியிடங்களுக்குச் சென்று உழைப்பாளிகளாய்த் திகழ்ந்து அந்தந்த இடங்களின் பெயர்களைத் தங்கள் பெயர்களுடன் சுமந்து வந்த அநேகரில் டிக்கோயா நாகலிங்கம், பதுளை சுப்பிரமணியம், தரணியக்கல தம்பு, பாணந்துறை ஐயாத்துரை, சிங்கப்பூர் வேலாயுதர், சிங்கப்பூர் துரையப்பா, சிங்கப்பூர் தில்லையம்பலம் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்.

## குறிப்பிடத்தக்க குறிச்சிகள்

எங்கள் வட்டாரத்தில் பல குறிச்சிகள் இருக்கின்றன. ஆனாலும் அக்குறிச்சிகளுக்கான பெயர்கள் உருவான விதம்பற்றிக் கேட்டு அறிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு முதிர்ந்த ஞானம் கொண்டவர்கள் இன்று எம்மத்தியில் இல்லாமை


நினைவுகளும், நிஜங்களும், கனவுகளும்....
கனடியத் தமிழ் வானொலி
CTR
மண்ணையும் மனங்களையும் நேசிப்போம்
Tel : 416-264-8798
Fax : 416-264-9500
www.ctr24.com

விசனத்துக்குறியது. பண்டைய நாட்களில் அகராதி ஒன்று இல்லாத காலத்தில் எங்கள் மக்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களின் சூழலுக்கேற்பவும், இயற்கை அளித்த கொடைகளுக்கு நன்றி தெரி வித்தும் பெயர்கள் இட்டனர். உதாரணமாக நெல் வயல்கள் சூழ்ந்த இடமாயின் புலவு, புலம் என்றும், வயிறார உண்ட கால்நடைகள் நீர் அருந்திச் செல்லும் இடமாயின் கேணி, குளம் என்றும், நிழல்தரு பெருமரங்கள் உள்ள இடமாயின் ஆலடி, அரசடி என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். அவ்வாறான பெயர்களில் இன்றும் வழக்கில் உள்ளன. கோயில்வயல், கட்டுக்கேணி, கண்டல்க்கட்டி, ஆலம்புலம், கிளாம்புலம், தீவாணிபுலம், அன்னதீவான் வயல், கலடு, பறுகு, கருக்குவாச்சி, அலரியடி, கொல்லதீவு, முனைவுப்புலம், சங்கத்தாகேணி, வீரம்புளியடி, பெத்தப்புகோவிலடி, அளவம்பளவு, காண்டை, புட்டுணி, மூந்தாய், விளாங்கண்டல், கொண்டதறை, புலவு, கிராஞ்சியம்பதி, நடுவுத்துருத்தி, குறிகாட்டுவான் என்பனவற்றை குறிப்பிடலாம்.

இவ்வாறாகப்பல வழிகளிலும் பேரும் புகழும், சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய எங்கள் ஊரின் மக்கள் தொகை இருநூறுக்கும் குறைவாகவே உள்ளது. புலம்பெயர்ந்து வாழும் நாம் "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பதை நினைவில் இருத்தி எமது வருங்கால செல்வங்களுக்காக ஊரின் முழுமையான வரலாற்றை எழுதுவோமாக!



# காற்றோடு கலந்த கந்தகங்களுக்கு



மகிந்தவின் மலிந்த சிந்தனைகள்
மதிப்புயர்ந்து போனது
புத்த துறவிகள் மத்தியில்

மகிந்தவின் மலிந்த சிந்தனை
தன் குடும்பத்தில் அனைவருக்கும்
பதவிப்பிரமாணம், பதவியுயர்வுகள்
மறுப்பேதும் இல்லாது
மகுடம் சூட்டியது

மகிந்தவின் மலிந்த சிந்தனை
மாவீரர் பாதங்களில்
மழுங்கித்தான் போனது
எல்லாளன் உக்கிரத்தால்
உருமாறிப் போனது
எல்லாளன் படையணியோ
துட்ட கைமுனுவை
துவைத்து எடுத்தது
அவர்களது கோட்டைக்குள்
கொட்டாவி விடும் நேரத்தை
சரியாக கணித்து
தவிடு பொடி ஆக்கி
தகவல் கூறியது
எண்ணமது கைவிடு
இல்லையேல்
எண்ணுவதற்குள் நீ இல்லையென்று
இலகுரக வானூர்தியாம்.....
இழிவாக கூறியது
பி. பி. சி தமிழோசை
தாக்கிவிட்டு தப்பிச்சென்றதென்று
தெரியாமல் தான் கேட்கின்றேன்
தெரிந்தால் கூறுங்களேன்?
இலகுரக வானூர்தியால்
கனரக வானூர்திகள்
கருகிய மாயமென்ன?
தங்கள் அடிவயிற்றுக்குள் புகுந்து
அஞ்சாமல் அசராமல் நின்று
காற்றோடு கலந்து
காவியமாகிப்போன கந்தகங்கள்
இருபத்தியொரு கரும்புலிகளுக்கு
இணையாகுமா?
உங்கள் புக்காரா, அவ்ரோ,
சுப்பர்சொனிக், கிபீர்
குபீர் என்று சிரிக்கத்தான் முடிந்தது
வெளிச்சக்குண்டு போட்டு
வானவேடிக்கையால்
வன்னி வான் பரப்பை
வண்ணமயமாக்கியதற்கு

வாகரையில் பின்வாங்கி
சிலாவத்துறையில்
சிலந்தி வலை பின்னி
மற்றுமோர் நகர்வுதனை நாம் நோக்க

தாங்களோ தம்பிமார்
தளபதிகள் சகிதமாய்
நோக்கியா தொலைபேசியில்
நோக்கமே இல்லாமல்
வேங்கைகள் ஓடிவிட்டார்கள் என்று
வாய்நோக பேசியதுதான் மிச்சம்.
தம்பியுடையான்
சண்டைக்கு அஞ்சான்
தமிழர் எம் பழமொழி
தமிழீழம் முழுவதும் தம்பிதான்
தார்மீகம் தெரியாமல் தாங்கள்
தார்வீதி தனைமூடி
தடுக்கித்தான் விழுந்தீர்கள்
ஏ9 இல்லையென்றால்
அநுராதபுரத்திற்கு எப்படி வந்தோம்?
கண்டுபிடி, கண்டுபிடி பார்ப்போம்
உலக அரங்கமதில்
கண்ணாம்மூச்சி சளைக்காமல் ஆடி
கடன் வேண்டத்தான்
உன்நேரம் சரியாகும்

கடன்பட்டார் நெஞ்சம்போல்
கலங்கினான் இராவணனென்று
ஆரியன் சொன்னதை
ஆமோதித்தோம் அன்று
கடனை உடன்பட்டு
வானூர்தி வாங்கி
தரிப்பிடத்தில் நிறுத்தாமல்
தமிழர் தலைமீது
குண்டுதனை பொழியவில்லையெனில்
கலங்கித்தான் போய்விடுவீர்
இது இன்றைய வரலாறு
இலங்கையில் இன்று

இருபத்தைந்து வானூர்திகள் காலியாம்
உலக ஊடகங்களில் முதன்மைச்செய்தி
உட்சாகத்தோடு உசாரானார்கள்
ஆயுதத் தரகர்கள்
இன்னுமொரு ஒப்பந்தம்
உடனே வரும் என்று
தீப்பந்தம் ஏற்றி
நீலிக்கண்ணீர் விட்டு
தெருத்தெருவாய் திரிந்து
விலையேதும் கேட்காமல்

விவாதம் பேசாமல்
வாய்மூடி கைகட்டி
வியாபாரம் முடிப்பீர்
வாங்குவது கடன்தானே
கடன்சுமையால் நசுங்குவது
நாட்டுமக்கள் தலைதானே

வெகுமதி இல்லாத
வெளிநாட்டு வியாபாரம்
வரும்படி கிடைக்கும்
வெளிக்கிட்டு போனால்
தகர்ந்து தவிடு பொடியானது வானூர்திகள்
உள்ளூரு சந்தோசம்
சகோதரர் பசீலுக்கு
இன்னுமொரு ஒப்பந்தம்
தொகையாக கையூட்டு
வாங்க இடையூறு ஏதுமில்லை
எதிர்க்கட்சி வரிசையிலும்
எதிர்ப்புக்கூற எவருமில்லை
எதிர்க்கின்ற சிலருக்கும்
சினம்தான் மிச்சம்



மகிந்தவின் மலிந்த சிந்தனை
சிறுபிள்ளை விளையாட்டில்
கடலோர மணல்வீடாய்
அலையோடு நுரைவந்து
அடித்துச்சென்றது தான் மிச்சம்
எச்சமே இல்லாமல்
அடையாளம் தெரியாமல்
வான்படைத்தளம் தகர்த்த
தமிழீழ தேசத்தின்
தானைத் தலைவனையும்
காற்றோடு கலந்த
கரும்புலிகளையும்
என்னாளும் எங்கள்
இதயத்தில் நிறுத்தி
அவர்தம் பாதம் பணிந்து
முடிக்கின்றேன் இக்கவியை

– தமிழரசன் –

# A-Z SOLUTIONS

TO EVERY HUMAN PROBLEM, THERE IS ONLY ONE EASY SOLUTION

மனிதனின் ஒவ்வொரு பிரச்சினைக்கும் இலகுவான தீர்வே உண்டு
ஒரு குடையின் கீழ் உங்கள் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டுகின்றது.

- **Immigration** (குடிவரவு)
  All Refugee Claims
  Appeals
  Sponsorship
  PDRCC

- **Wedding Banquet** (திருமண மண்டபம்)
  Wedding
  Receptions
  Birhtdays and Any others Events

- **Accident Benefits** (விபத்து உதவிநிதி)
  Claims
  Physiotherapy Arrangements

- **Real Estate** (கட்டிடச் சொத்துக்கள்)
  Buying or Selling
  Mortgage Arrangement
  Free Consultation
  Free Market Evaluation


- **Income Support** (வருமான உதவிகள்)
  Old Age Security
  Guaranteed Income Supplement
  Harassment and Discrimination
  ODSP, CPP and EI Appeal

- **Bankruptcy** (வங்குறோத்து)
  Bankruptcies
  Proposals
  Debt. Counseling

- **Income Tax** (வருமானவரி)
  Personal Income Tax
  Business Income Tax
  GST, PST, Payroll

- **Insurance** (காப்புறுதி)
  Life Insurance
  Wills and Estate
  RESP
  Mortgage Protection

- **Law** (சட்ட உதவிகள்)
  Family Law
  Real Estate
  Immigration Law
  Criminal Law
  Business Law
  Civil Litigation
  Small Claims Court



## Pirapu Ponnampalam

## 416-431-0707

885 Progress Ave. Scarborough, ON. Suite 216, (Markham & Hwt 401)

# புங்குடுதீவு - ஒரு புவியியல் நோக்கு

அமரர். கு. இராசரத்தினம் B.A. (Cey)

யாழ்ப்பாணக் குடாநாடும் அதனைச் சார்ந்த தீவுகளும் இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள நில உறுப்புக்களாகும். பௌதிக பண்பாட்டு அடிப்படைகளில் குடாநாட்டுக்கும் தீவுகளுக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளன. குடாநாட்டின் மேற்குப் புறமாக ஆழம் மிகவும் குறைந்த சிறு சிறு கடற்பகுதிகளால் தீவுகள் குடாநாட்டினின்றும் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தீவுகளில் புங்குடுதீவும் ஒன்றாகும்.

புவிக்கோளத்தில் புங்குடுதீவின் நிலையம் வட அகலக்கோடு 9பா. 34நி. 0செ..9பா. 37 நி. 45 செ. என்பதற்றுக்கு இடையிலும் கிழக்கு நெடுங் கோடு 79 பா.47நி.25செ., 79பா. 51நி. 45செ. என்பவற்றுக்கு இடையிலும் அமைந்துள்ளது. இந்தியாவையும் இலங்கையையும் பிரித்துள்ள பாக்கு நீரிணையின் இலங்கையைச் சார்ந்த கரைப் பகுதியில் புங்குடுதீவு அமைந்துள்ளது. இலங்கையும் இந்தியாவும் அமைந்துள்ள ஒரே கண்ட மேடையில் 30 அடி ஆழத்திற்குக் குறைவான கடலடித்தள மேடையொன்றில் குடாநாடும் நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய தீவுகளும் இடம் பெற்றுள்ளன. இவ்வாழம் குடாநாட்டுக் கரையை நோக்கிச் செல்லும்படியே குறைந்து செல்வதைக் காணலாம். இவற்றுக்கு மாறாக நெடுந்தீவு 30 அடி-60 அடி ஆழமுள்ள கடற்பகுதியாற் பிரிக்கப்பட்டிருப்பினும் ஒரே மேடையிலேயே அமைந்துள்ளது.

புங்குடுதீவின் மேற்குக் கரையிலிருந்து நயினாதீவு மேற்காக 1.2 மைல் தூரத்திலும் தென் மேற்காக கரையிலிருந்து அதே திசையில் நெடுந்தீவு 6 மைல் தூரத்திலும் அதே திசையில் கச்சதீவு 22.3 மைல் தூரத்திலும் லைடன் தீவிலுள்ள வேலணைத்துறை தீவின் வடகிழக்கு திசையிலிருந்து 2.4 மைல் தூரத்திலும் அமைந்திருக்க அவற்றின் மத்தியில் புங்குடுதீவு அமைந்துள்ளது.

புங்குடுதீவு வடக்காக பல்லதீவு, கேரதீவு, வரதீவு, கண்ணாத்தீவு ஆகிய கடனீரோடைகளாற் பிரிக்கப்பட்ட சிறுச்சிறு தரைப்பகுதிகளையும் தென் மேற்கில் குறிகாட்டுவான், நடுவுத்துருத்தி என அமைந்துள்ள சிறு கடல்வழிகளாற் பிரிக்கப்பட்ட நிலப்பகுதிகளையும் ஒருங்கே கொண்டு புங்குடுதீவு என்னும் முழுப்பெயருடன் விளங்குகின்றது. இக்கடல் வழிகள் வீதிகளால் இணைக்கப்பட்டிருப்பதனால் ஒரு முழுத்தீவினும் சிறு சிறுதீவுகள் அமைந்துள்ள நிலைமை வேறுபடுத்திக் காட்டப்படாத முழுமைநிலை ஏற்பட்டிருக்கிறது. வடபால் அமைந்துள்ள கேரதீவு, ஊரைதீவு ஆகிய நிலப்பகுதிகளைத் துண்டித்து கள்ளியாறு, சோழகன் ஓடை, மின்னியன் வாய்க்கால் போன்ற கடல் வழிகளால் உட்புகும் கடல் நீரானது குறித்த தீவுகளுக்குத் தெற்காக ஆயின் பிரதான நிலப்பரப்பின் வடக்காக கடல்நீரேரி ஒன்று அமையக் காரணமாக விருக்கின்றது. இவ்வமைப் பினைக் கொண்டு நோக்குகையில் தீவின் மத்திய பகுதி தாழ்வானதும் கரைப்பகுதிகள் உயரத்திற் கூடியதுமான தரையமைப்பினைப் புங்குடுதீவு கொண்டமைந்திருப்பதனைக் காணலாம்.


புங்குடுதீவின் நிலப்பரப்பு அண்ணளவாக 8000 ஏக்கராகும். இக்கணிப்பீடு தீவின் உட்பகுதியிலமைந்துள்ள கள்ளியாற்றூற் கடலுடனிணைக்கப்பட்ட கடனீரேரியின் பரப்பளவையும் உள்ளடக்கியதாகும். கடனீரேரி மட்டும் ஏறக்குறைய 800 ஏக்கர் பரப்பளவினைக் கொண்டமைந்துள்ளது. இப்பகுதியை நீக்கின் தீவின் உண்மையான தரைப் பரப்பு ஏறக்குறைய 7200 ஏக்கர் வரையிலான



தாகும். இதனுள் வடபுறமாக அமைந்துள்ள ஏழு சிறு மணற்றீவுகள் 240 ஏக்கர் பரப்பளவையும், ஊரைதீவு 480 ஏக்கர் பரப்பளவையும், கேரதீவு 320 ஏக்கர் பரப்பளவையும், கேரதீவின் வடபாலமைந்துள்ள சதுப்பு நிலம் ஏறக்குறைய 300 ஏக்கர் வரையினான பரப்பளவையும், நடுவுத்துருத்தி 320 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகவும், குறிகாட்டுவான் 160 ஏக்கரளவான பரப்பளவைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. இக்கணிப்பீடுகள் அண்ணளவானவையேயன்றி சரியான அளவீடுகள் அல்ல. தீவின் கரையோரச் சுற்றளவு ஏறக்குறைய 18 ½ மைல் வரையிலானதாகும்.

புங்குடுதீவின் வடபகுதியிலமைந்துள்ள நிலப்பிரதேசங்கள் மிகவும் பிற்காலத்தனவாகும். அவை கடல் நீரோட்டத்தினாற் கொண்டுவந்து ஒதுக்கப்பட்ட மணற் படிவுகளால் உருவாகியதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. இம்மணலுடன்

கடல் வாழ் உயிரினங்களின் சுவடுகளும் கடற் சாதாளைகள் போன்றவற்றின் பகுதிகளும் சேர்ந்து இறுகுவதனால் இத்தீவுகள் உருவாகி இவற்றில் தோன்றிய கண்ணா போன்ற கடற்கரைத் தாவரங்களின் வளர்ச்சியினால் இவை மேலும் இறுக்கமான தரையமைப்பினைப் பெற்றிருக்க வேண்டும்.



தீவின் மத்திய பகுதிகளில் கடலுயிர்ச் சுவடுகளாலுருவாகிய பாறைகள் காணப்படுகின்றன. இப்பாறைகள் பெரும்பாலும் அயனக் கடல்களில் 60 அடிக்குக் குறைவான ஆழத்தில் வளரும் பல்வேறு வகைப்பட்ட முருகைப் பல்லடியங்களினால் உருவாக்கப்பட்டவையேயாகும். இவற்றின் தொடர்பான வளர்ச்சியைத் தீவின் கடற்கரைப் புறங்களில் அமைந்துள்ள பாறைத் தொடர்களின் வெளிநோக்கிய பகுதிகளில் இன்றும் காணலாம். இவ்வுயிர்களின் எச்சங்களால் வளர்ந்து வரும் பாறைகள் கடல் மட்டத்துக்கு மேல் ஒரு பொழுதும் வளருவதில்லை. ஆனால் பொதுவாக தீவுப்பகுதிகளில் கடல மட்டத்துக்கு மேல் ஏறக் குறைய 10 அடி உயரம் வரையிற்கூட இவ்வகை உயிரினங்களால் ஏற்பட்ட பாறைகள் காணப்படுகின்றன. இவ்வமைப்பு மயோசீன் கடல் பின் வாங்கியதாலோ அன்றித் தரையின் மேலுயர்ச்சி காரணமானதனாலோ ஏற்பட்டிருக்கவேண்டும். இம் முருகைப்பாறைகளில் சுண்ணம் பெருமளவிற் காணப்படுகிறது. இவ்வகைப் பாறைகளைத் தவிர தீவின் தென்பகுதியிலும் வேறு சில பகுதிகளிலும் நீரை ஊடுருவவிடக்கூடிய மூட்டுக்களையும் நுண்டுளைகளையும் கொண்ட மயோசீன் சுண்ணக்கல் அடையல்கள் காணப்படுகின்றன. இப்பாறைகள் ஒபிக்குலினா மலாபிறிக்காவையும் அதனோடு தொடர்புடைய உயிர்ச்சுவடுகளையும் கொண்டமைந்தவையாகும். இப்பாறைவகை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் பல நூற்றுக்கணக்கான அடிகள் படிவுற்றிருப்பினும் இத்தீவில் சில அடிகள் மட்டுமே அமைந்து காணப்படுகின்றது. இவ்வேறுபாடு மயோசீன் காலத்தில் கடலின் தாழ்வுகள் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடும். இவ்வகைப் பாறைகளுக்குக் கீழாக யூறாசிக் காலத்தைச் சேர்ந்த மணற்கல் வகைகளும் காணப்படுவதிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த அடையல்களின் விளைவும் முருகைப் பல்லடியங்களின் விரைவான வளர்ச்சியின் விளைவும் கடலுயிர்ச் சுவடுகள் போன்றவை பெருமளவிற் கரைகளில் ஒதுக்கப்பட்டமையின் பெருக்கத்துக்குக் காரணமாக அமைந்துள்ளன என்பது தெளிவாகும்.

எவ்வகையாகக் கருதினும் சிலகோடி வருடங்களின் முன் இத்தீவு கடற்கீழிருந்து உதயமான தென்பதற்குச் சான்றுகள் பலவுள்ளன.

புங்குடுதீவின் மேற்பரப்பில் காணப்படும் மண்வகைகள் பலதரப்பட்டன. பொதுவான மண் வகையினை நோக்கில் நரைநிறமண் பகுதியில் இப்பிரதேசம் அமைந்தபொழுதிலும் தீவில் இடத்துக்கிடம் வேறுபட்ட அமைப்பினையுடைய பாறை வகைகள் காணப்படுவதும் கடலின் செல்வாக்குக் கூடுதலான ஆதிக்கம் செலுத்துவதும் மண்ணின் வேறுபட்ட அமைவுகளுக்குக் காரணமாக இருந்துள்ளது. களிமண், நரைநிறமண், செம்மண், மணல்மண் போன்ற பலவகை மண்ணினங்கள் இங்கு காணப்படுகின்றன. சுண்ணக் கற்பாறைகளோ அல்லது பெரிக் ஒட்சைட்டுக்களின் படிவு காரணமாகவோ சில இடங்களில் மண் செந்நிறத் தன்மையைக் கொண்டுள்ளது. கடல்நீர் ஏரியைச் சார்ந்த இடங்களில் உவர் மண் காணப்படுகிறது. கடற்கரைகளில் மணல் மண்ணும் உயிர்ச்சுவட்டு மண்ணும் காணப்படுகின்றன. நீர் தேங்கி நிற்கும் இடங்களில் வெண்களியும் கருங்களியும் காணப்படுகின்றன. இவற்றின் தோற்றத்தை விளக்க விரிவான ஆய்வுகள் நிகழ்த்தப்பட வேண்டியது அவசியமாகும்.

கடல்நீர் உட்புகுவதனால் ஏற்படும் ஈரக்கசிவும் மழையினால் ஏற்படும் ஈரத்தன்மையுமே தரைக்கு ஈரத்தன்மையை ஏற்படுத்தும் சாதனங்களாக உள்ளன. மழைமூலம் பெறப்படும் நீரின் பெரும்பகுதி மத்தியிலமைந்துள்ள கடனீரேரிக்கு





வடிக்கப்பட்டு கடலுக்குச் சென்றுவிடுகின்றது. மிகச் சிறிய அளவே தரைக்கீழ் நீராக உட் செல்லுகிறது. இந்நீர்கூட கடற்கரைவழியே மணல் மூலமாக வடிக்கப்பட்டுக் கடலை அடைந்து விடுகிறது. மழை காலங்களில் பெருமளவு நீர் தரையிலிருந்து கடலுக்கு வடிந்து செல்வதனைத் தீவின் தெற்குக் கரையில் நன்கு அவதானிக்க முடியும். சுண்ணக்கற் பாறைகள் அமைந்துள்ள பகுதிகளில் ஓரளவு நீர் தேங்கி நிற்கின்றது. தீவின் வடக்குப் பகுதியில் மழைநீர் தரையில் ஊறிச் சென்று உவர் நீர்மட்டத் துக்குமேற் தங்கி நிற்கும் நிலையைப் பயன்படுத்தி அதிக ஆழமில்லாத கிணறுகள் மூலம் நன்னீர் பெறும் முயற்சிகள் நடைபெறுகின்றன. இருப்பிட்டி, பெருங்காடு, கண்ணகை அம்மன் கோவிலடி போன்ற இடங்களில் நிலக் கீழ் நீர் ஓரளவு சேமிக்கப்படுகிறது. நிலக்கீழ்ப் பாறைகளில் நன்னீரைச் சேமிப்பதற்காக நமது முன்னோர் மேற்கொண்ட வழிகள் இப்பொழுது புறக்கணிக்கப்பட்டமையாலும் மழைப் பருவம் கடந்த பல ஆண்டுகளாக வறட்சி நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்ததினாலும் தரைப்பகுதியிற் சேமிக்கப்படும் நன்னீரின் அளவு குறைவடைந்து விட்டது. நாட்டில் நீர்த்தேக்கங்களின் தூர்வினை நீக்கவும், மழை நீரைத் தேக்கவும் வகுக்கப்பட்டுவரும் தற்போதைய திட்டங்கள் நிலக்கீழ் நீரின் சேமிப்புக்குப் பெரிதும் உதவக்கூடியனவாகும். அன்றியும் ஒரு வரட்சி வட்டம் முடிவுற்று சற்று மழைகூடிய பருவம் இலங்கையில் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாக கூறும் ஆய்வுகளின் முடிவுகளும் எதிர்வரும் காலங்களில் தரைக்கீழ் நீரின் உயர்வுக்கு வழிகோலக்கூடும். துரையின் மேல் நீரைச் சேகரித்து உட்செல்ல விடும் வகையில் பல குளங்கள் புங்குடுதீவில் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இணுவிட்டியா குளம், பெரியகிராய், சின்னக்கிராய், பெரியநாவற் குளம், சின்னநாவற்குளம், நக்கந்துக்குளம், மாரியம்மன்கோவிற்குளம், மண்டைதீவுக்குளம், நுணுக்கற்குளம், அடைகாத்தகுளம், முத்தட்டுக் குளம், மஞ்சள் கரைக்சான்குளம், நாச்சமார் கோவிலடிக்குளம். அரியநாயகன்புலம் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.


இலங்கையின் அதிவறள் பிரதேசத்திலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப் பகுதியும் தீவுகளும் அடங்கியுள்ளன. இப்பகுதியின் வருடச் சராசரி வெப்பநிலை $80^{\circ}$ப. மேற்பட்டதாகும். மழைவீழ்ச்சி வேறுபாடு வருடத்தில் 25அங். 50 அங். இடைப்பட்டதாகும். இம்மழையுங்கூட பருவக்காற்று இடைக்காலங்களில் மேற்காவுகையின் மூலமும் வடகீழ்ப் பருவக்காற்றின் மூலமும் சூறாவளித் தன்மைகளாலும் கிடைப்பதேயாகும். இதனால் வருடத்தின் பல மாதங்கள் மழையற்ற வறண்ட காலநிலையே நிலவுகிறது. தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலத்திலும் ஞாயிற்றின் கடகக்கோட்டு உச்சம் நிகழப்போகும் நிகழ்ந்து முடிந்த காலங்களிலும் வெப்பத்தின் அளவு மிகவும் கூடுதலாக, சில காலங்களில் $95^{\circ}$ ப. வரையிற் கூட உயர்வதனால் வறட்சி மிகவுமதிகமாக இடம்பெறுகின்றது. இவ்வறட்சித் தன்மையைத் தீவின் தாவரங்களில் நன்கு அவதானிக்கலாம்.

தீவின் முழுப்பகுதியிலும் வறள் நிலவளரிகளான காரை, வீரை, சூரை, விகாய், கள்ளி, நாகதாளி, கற்றாளை, ஈந்து, ஆவரை, கிராஞ்சி,



புல்லாந்தி, நொச்சி, கிளா போன்ற தாவரங்களே காணப்படுகின்றன. தீவின் இயற்கைத் தாவரமாகப் பனை தீவின் பல பகுதிகளிலும் இடம்பெற்றுள்ளது. இவை தவிரச் சற்று வளர்ந்த மரங்களும் இடையிடை காணப்படுகிறது. பூவரசு, ஆல், இத்தி, அரசு, வேம்பு, மருது போன்ற மரங்கள் இவற்றுட் சிலவாகும். மத்தியிலமைந்துள்ள வெளியான பகுதிகளில் அறுகு, கோரை, மிசிலை, தேன்புல், குதிரைவாற்புல் கட்டிப்புல் போன்ற புல்லினங்கள் வளருகின்றன. இவை செழுமை குன்றி சில அங்குல உயரம் வரையிலேயே வளர்வதனைக் காணலாம். நீரின் அருமையினால் இவை சில காலங்களில் பெரிதும் காய்ந்து விடுகின்றன. கடற்கரை நிலங்களில் கண்ணா, முள்ளி, அடம்பு, கொட்டனை போன்ற செடிகள் காணப்படுகின்றன.

புங்குடுதீவின் நீரியல் அமைப்பு மக்கட் பரம்பலை நிர்ணயிப்பதிற் பெரும்பங்கினை வகித்



துள்ளது. நன்னீர் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ள பகுதிகளில் மக்களடர்த்தி கூடுதலாகவும் ஏனைய பகுதிகளில் ஐதாகவும் அமைந்து காணப் படுகிறது. கிழக்கு, தெற்கு, மேற்குக் கரையோரங் களில் இருந்து உள்நோக்கிச் செல்லும் பகுதி களில் மக்கள் முற்காலத்திலிருந்தே செறிவாகக் குடியேறியுள்ளனர், விவசாயக் குடியிருப்புக்கள், வீதிக்குடியிருப்புக்கள், மீன்பிடிக் குடியிருப்புக்கள் போன்ற பலவகைக் குடியிருப்புக்கள் இடம் பெற்றுள்ளன. மடத்துவெளி, இறுப்பிட்டி, மேற்குப் பெருங்காடு போன்ற பகுதிகளில் வயல் நிலங்கள் அமைந்துள்ளன. இவ்வயல் நிலங்களில் மழையை எதிர்பார்த்துக் காலபோகக் கமச்செய்கை இடம் பெற்றுள்ளது. விவசாய முயற்சிகள் மழையை எதிர்பார்த்து நிகழ்வதனால் பல வருடங்களில் பயிரழிவு ஏற்படுவது சகசமாக உள்ளது. தீவின் மொத்தக் குடித்தொகை பதிவு செய்யப்பட்டுள்ள உணவுப் பங்கீட்டுப் புத்தகக் கணிப்பின்படி ஆகஸ்ட் 74 கால அளவில் 15979 ஆகவுள்ளது, சில மாதங்கள் மட்டும் வயதுடைய குழந்தைகளின் தொகை இதில் இடம்பெறவில்லை. இதனைக் கொண்டு நோக்குகையில் அண்ணளவாகத் தீவின் குடித்தொகையை 16000 என மதிப்பிடக்கூடிய தாகவுள்ளது.

கடந்த 20 ஆண்டு காலப்பகுதியில் தீவில மைந்திருந்த குடியிருப்புக்களில் அதிகமான அளவின நிரந்தரக் கட்டிடங்களாக மாற்றப் பட்டிருக்கின்றன. யாழ்ப்பாணக்குடாநாட்டின் ஏனைய கிராமங்களிற் காணப்படுவது போல் புங்கு டுதீவில் அதிக குடிசைகளைக் காண முடியாது. இவைகள் சுகாதார வசதியுள்ள வீடுகளாக மாற்றப்பட்டுவிட்டன. தீவின் அபிவிருத்தியில் இந் நிலை குறிப்பிடக்கூடியதோர் மாற்றமாகும்.

காலநிலையின் தன்மையும் நிலக்கீழ்நீரின் அருமையும் நாட்டில் விவசாய விருத்திக்கு இட மளிப்பதாகவில்லை. இருந்தும் நீர்வசதியுள்ள பகுதிகளில் தோட்ட நிலங்கள் இடம்பெற்றுள்ளன. இன்றைய அரசின் உப உணவுப் பொருட்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடு காரணமாக பல தோட்டங்களில் மிளகாய்ச் செய்கை வெற்றியளித் துள்ளது. தென்னை, வாழை போன்ற பயிரினங்கள் மக்கள் குடியிருக்கும் வீட்டுத்தோட்டங்களில் வளர்க்கப்படுகின்றன.

தவிர புகையிலை, மரவள்ளி போன்ற பயிரினங்களும் கத்தரி, வெண்டி தக்காளி போன்ற காய்கறி உற்பத்தியும் சிறிது அபிவிருத்தி யடைந் துள்ளது. ஆனாலும் இப்பயிர்களின் உற்பத்தி தீவின் உள்ளூர்த்தேவைகளைக் கூடப்பூர்த்தி செய்யுமளவுக்கு இல்லையென்றே குறிப்பிடலாம்.

மத்தியிலமைந்துள்ள கடல் நீரேரியை நன்னீரேரியாக்குவதனால் நாட்டில் ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தலாமெனப் பலர் கருது கின்றனர். இத்திட்டம் வெற்றியளிக்குமா வென்பது ஆராயப் படவேண்டிய தொன்றாகும். ஒரு பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் கருத்து முற்போக்கான தாகக் காணப்பட்டாலும் இப்புரட்சி நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைத்துவிடும் என்று மதிப்பிடத்தக்க வகையில் உற்பத்தியை மேற் கொள்ளக்கூடிய விளைநிலங்களின் பரப்பளவு இங்கு குறைவாகவே உள்ளது,

மாறாக மீன்பிடித்துறையில் நிலக்கடல் மீதான புரட்சியை ஏற்படுத்தினால் அதனாற் பெறும் பொருளாதார அபிவிருத்தி தீவிரமானதாக அமையும். இவ்விருத்தி அதன் அதிகரிப்பு வேகத் தை நோக்கும்போது உண்மையில் புரட்சி என்று செல்லக்கூடிய தொன்றாகவும் அமையும், விதைக் காமலே விளைவினைப்பெறும் விரிந்த நிலக்கடல் புங்குடுதீவினைச் சூழ அமைந்துள்ளது. பல்வேறு வகை மீனினங்கள் இக்கடலில் வாழுகின்றன. கரையோரங்களை அடுத்து விளை, மதனன், ஊளி, சீலா, திரளி, ஒட்டி, ஓரா போன்ற பல்வேறு இன மீன்களும், சற்று அப்பால் சுறா, திருக்கை, பாரை, கட்டா, சூடை, வாழை, போன்ற மீனினங்களும் கரைசார் பகுதிகளில் மட்டி, நண்டு, சங்கு, கணவாய், இறால் போன்ற இனங்களும் பெருமளவிற் பிடிக்கக் கூடியனவாக இருந்தும்

பின்தங்கிய பிடிமுறைகளால் நாட்டின் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிற் கூடப் பிடிக்கப்படாமை அனுதாபத்துக்குரியதே. இத்துறையில் ஏற்படும் நிலக்கடல்மீதான புரட்சி நாட்டில் நல்ல பலனை ஏற்படுத்தும். அறிவுள்ள இளைஞர்கள் சமூகக்கருத்துக்களை ஒதுக்கி வைத்து இத்துறைகளிற் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

போக்குவரத்துக்கான நன்முறையிலமைந்த வீதிகள் தீவில் வலைப்பின்னலாக இடம்பெற்றுள் ளன. தீவின் வடகிழக்கிலிருந்து வேலணைத்துறை ஊடாக யாழ்ப்பாண நகருக்குச் செல்லும் வீதியின் ஆரம்பம் புங்குடுதீவு மக்களுக்கு ஒரு புதுயுகத்தை தோற்றுவித்ததை யாவரும் அறிவர். இதனால் இலங்கையின் ஏனைய பகுதிகள் புங்குடுதீவுக்கு மிகச் சமீபமாக்கப்பட்டன. இவ்வூர் மக்கள் இலங் கையின் பலபகுதிகளிலும் தத்தமது பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட இதனால் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. நவீன போக்குவரத்து சாதனங்களின் நன்மைகள் பெருமளவில் அனுபவிக்கப்படுகின் றன. இவைதவிர நெடுந்தீவு, நயினாதீவு, ஆகிய இடங்களுக்குச் செல்லக்கூடியதான மோட்டார் வள்ளச் சேவைகளும் குறிகாட்டுவான், கழுதைப் பிட்டி ஆகிய கடல்துறைகளிலிருந்து நடைபெற்று வருகின்றன.


இவ்வமைப்புக்கள் புங்குடுதீவு மக்களிற் பெரும்பாலானோரை இலங்கையின் ஏனைய நகர் களில் வர்த்தகத்தை மேற்கொள்ள ஊக்கு வித்துள்ளது. அதிகமான குடும்பங்களிலுள்ள ஆடவர்கள் வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு இலங்கையில் பல்வேறு நகரங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வர்த்தகம், விவசாயம், தரகு, சிறுகைத்தொழில், நிர்வாகம் போன்றவற்றில் ஈடுபட்டு பெரும் பொருளீட்டுகின்றனர்.

சமூக, சமய பண்பாட்டு விடயங்களில் தமிழ் மக்களுக்குரிய சிறப்பான அம்சங்கள் இங்குள்ளவர்களிடம் பெரும்பாலும் அமைந் துள்ளன. விருந்தோம்புதல் ஒவ்வொரு குடும்பத் திலும் உயர்ந்த பண்பாகக் காணப்படுகிறது. சமய



விழாக்களிலும், திருமண, மரண விழாக்களிலும் அதிகமான பணம் மக்களாற் செலவிடப்படுகிறது. வைதீகக் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கும் மனப் போக்கு மாற்றப்பட வேண்டியதொன்றாகும். வர்த்தகத்தில் ஈடுபட்டு அதிக பொருளீட்டுவதால் ஆலயத் திருப்பணிகளில், கடவுட் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் அதிகமாகச் செலவிடும் மனப் போக்கு அமைவதுண்டு. இது பகுத்தறிவுச் சிந்த னையோடு களைந்தெறியப்பட்டால் நாட்டின் எதிர் காலம் மேலும் வளர்ச்சியடைய வாய்ப்புக்கள் உள.

கல்வியைப் பொறுத்தவரையில் மிக நீண்ட காலமாகப் புங்குடுதீவு பின்தங்கியே இருந்து வந்துள்ளது. இலவசக்கல்வித்திட்டம் ஆரம்ப மாவதற்கு முன்பாக எந்தவொரு ஆங்கிலப் பாடசா லையாவது இங்கு உருவாகவில்லை. சில வசதி படைத்த குடும்பங்களிலுள்ளவர்கள் குடாநாட்டுப்



பாடசாலைகளிற் கல்வி கற்று முன்னிலைக்கு வந்துள்ளனர். இவர்களும் தமது தனித்துவத் தையும், முதன்மையையும் பாதுகாத்துக் கொள் வதற்காக ஆங்கிலக் கல்லூரியொன்றமைவதை விரும்பினார்கள் என்று அவர்களது செயல்களை விமர்சிப்போர் கருதக்கூடிய ஏதுக்கள் எதுவு மில்லை.

தற்போது தீவின் மத்தியிலமைந்து காணப் படும் மகாவித்தியாலயமே இலவசக் கல்வித் திட்டத்தின் பயனாகத் தோன்றிய தீவின் பிரதான உயர்கல்விச்சாலையாக வளர்ந்து வருகின்றது. இக்கல்லூரியில் (1975) ஏறக்குறைய 750 மாணவர்கள் கலை, விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய துறைகளில் க.பொ.த.(சா/த) வகுப்புவரை கற்றுவருகின்றார்கள். கலைத்துறையில் க.பொ.த. (உ/த) வகுப்பும் இக்கல்லூரியில் அமைந்துள்ளது. இதனைத் தவிர ஐந்து கனிட்ட மகா வித்தியாலயங்களும் 9 ஆரம்ப பாடசாலைகளும் தீவின் பல பகுதிகளிலும் அமைந்துள்ளன. இக்கல்விச்சாலைகளில் இவ்வாண்டின் முதல் பகுதியில் 1900 ஆண்களும் 1633 பெண்களுமாக



மொத்தம் 3533 மாணவர் கல்வி பயின்று வருகின்றனர். தீவின் மொத்தக் குடித் தொகையுடன் ஒப்பிட்டால் இது 22% அளவிலான தாகும்.

நாட்டின் கல்வி வளர்ச்சியில் சிரத்தை காட்டவேண்டுமென்று புதிய ஆர்வம் மக்கள் பலரிடம் ஏற்பட்டுள்ளது. ஆலயத்திருப்பணி களைவிட கல்விச்சாலைகளின் திருப்பணியே உயர்ந்தது என்னும் கருத்து மக்களிடையே உயர்ந்து வருகின்றது. இந்நோக்கத்தால் பல பாடசாலைக் கட்டிடங்கள் புதுமை பெற்றுள்ளன. மகாவித்தியலயத்திற்கு ஒரு வெள்ளிவிழா மண்ட பம் இருமாடிகளைக் கொண்டதாக அமைக்கும் முயற்சிகள் மக்களினாதரவால் நடைபெற்று வருகின்றது.

தீவின் மத்தியில் பிரதான தபாலகம் ஒன் றும் வல்லன், தட்டையன்புலம், குறிகாட்டுவான், இறுப்பிட்டி, ஊரைதீவு ஆகிய இடங்களில் உப தபால் நிலையங்களும் அமைந்துள்ளன. நாட்டின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி "மணிஓடர்" மூலம் பெறலாம் இவைகள் பெரிதும் வளர்ச்சி யடைந்ததுடன் சிறந்த சேவையையும் ஆற்றி வருகின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளுடனான தொலைபேசி இணைப்புக்கள் இவைகள் சில வற்றில் அமைந்துள்ளன.

இத்தீவு 12 வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு அவ்வட்டாரங்களிலிருந்து மக்களாற் தெரிவு செய் யப்பட்ட 12 உறுப்பினர்களைக் கொண்ட கிராம சபை ஒன்றினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கிராம நிர்வாகம் இம்மன்றத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது.

மக்களின் சுகாதார வசதிகளை முன்னிட்டு வைத்தியசாலை நோயாளருக்குரிய படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. ஆபத்தான நோயாளரை யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல "அம்பலன்ஸ்" வசதிகள் ஏற்படுத் தப்பட்டுள்ளன. பிரதம வைத்தியர், உதவி வைத்திய அதிகாரி ஆகியோர் தங்குவதற்கான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

லக்சபான மின் விநியோகத்திட்டத்தின் கீழ் புங்குடுதீவுக்கு மின் சேவை விஸ்தரிக்கப்பட்டுள் ளது. இதனால் மக்கள் நகர்ப்புற வசதிகளைப் படிப்படியே பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன.

குழாய் நீர் மூலம் குடிநீர் வசதியற்ற பகுதிகளுக்கு நீர் விநியோகம் செய்யும் திட்ட மொன்றும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் குடிநீர் பெறுவதில் இதுவரை காலமு மிருந்துவந்த துன்பியல் நாடகம் விரைவில் முடிவடையும் கட்டம் அண்மித்து வருகின்றது.

புங்குடுதீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசமும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்ப னைக்கிளைகளும் நாட்டின் பொருள் விநியோகத் தில் முதலிடம் வகித்துள்ளன. மக்கள் சேவை யைக் கருத்திற் கொண்டு இத்தாபனங்கள் மேலும் சிறந்த பணிபுரியவேண்டுமென நாட்டுமக்கள் எதிர் பார்கின்றனர். விவசாயக் கடன், குறைந்த வட்டிக் குப் பணம் கொடுத்தல், பணச்சேமிப்புப் போன்ற வற்றை மேற்கொள்ளும் கிராமிய வங்கியொன்றும் தீவில் அமைந்துள்ளது.

இவைகளைத் தவிரப் பல சமூகநலத் தாபனங்களும், இயக்கங்களும் புங்குடுதீவின் நலனில் அக்கறைகொண்டு உழைத்து வரு கின்றன. பிரதான சமயங்களாக இந்து சமயமும், கிறிஸ்தவ சமயமும் கத்தோலிக்கமல்லாத கிறிஸ்தவ சமயமும் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றை வளர்ப்பதற்கான தேவாலயங்கள் பல இருந்த பொழுதிலும் பெருமைப்படத்தக்க வகை யில் சமூக, சமய சமாதானமும், சமத்துவமும் நிலவுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

விரைவாகப் பெருகிவரும் குடிப் பெருக்கத் தைக் கட்டுப்படுத்துவதற்கான ஆலோ சனைகள் இளம் சந்ததியினருக்கு அளிக்கப்படுவதின் மூலமும் வேலையற்ற வாலிபர்கள், யுவதிகள், ஆகியோருக்கு சிக்கன் நிலங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலமும், நாட்டில் மூலதன முள்ளோர் மின்வலுவைப் பயன்படுத்திச் செய்யக் கூடிய சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் மூலமும் விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளின் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதின் மூலமும். சிறந்த வசதிகள் கொண்ட கல்வி நிலையங்களை உருவாக்குவதின் மூலமும், நாட்டின் எதிர்காலத்தைப் பிரகாசமானதாகச் செய் வதற்கான வழிவகைகளில் நாட்டின் நலன் கருது வோர் ஈடுபடுவார்களாயின் வளமான புங்குடுதீ வினை வருங்காலத்திற் காண வாய்ப்புக்கள் உள்ளன.

நன்றி : புங்குடுதீவு மகா வித்தியாலய வெள்ளிவிழா மலர்


# "தமிழின் குரல்" இவரைப்பற்றி இவர்கள்

- துரை இரவீந்திரன் -

எங்களின் தளை நீக்க போராட்ட வரலாற்றில் முதலாம் ஈழப்போர், இந்திய அமைதிப் படையின் யுத்தகாலம், இரண்டாம், மூன்றாம் ஈழப்போர் என ஒவ்வோர் காலத்தின் நிகழ்வுகள், அனுபவங்கள் சார்ந்ததான ஒரு போராட்ட வரலாற்றின் போக்கு, அதன் விளைவுகள், உப விளைவுகள் எனப்பலவற்றையும் தனது முப்பத்தைந்து வருடகால எழுத்துலக அறுவடையாக பதிவு செய்து தன் கடமையை முடித்து சென்றுவிட்ட "தமிழின் குரல்" அமரர் சு. வில்வரெத்தினம் அவர்கள் பற்றி எழுத்தாளர்கள், கவிஞர்கள் கூறியவற்றை மீட்டுப்பார்ப்போம்.

எங்கள் மண்ணின் எழுத்தாளர் திரு. என்.கே. மகாலிங்கம் அவர்கள் கவிஞரைப் பற்றி இளமை முதல் நன்கு அறிந்தவர். இளமைக்கால நண்பர். இவர் இவ்வாறு கூறுகின்றார். "நிலாக்கால இரவுகளில் அவர் பாடும் பாட்டுக்களைக்கேட்டுக் கொண்டே இருக்கலாம். மு.த. திருமதி தளையசிங்கம், மு.பொ, நான், சுந்தரலிங்கம், வில்வ ரெத்தினம், போன்றோர் மு.தவின் வீட்டின் முன்னுள்ள வயல்வெளியிலிருந்து இவரின் இசையில் மயங்கியிருந்தோம். அது இன்னும் நீங்காத நினைவாக உள்ளது. அவர் விரும்பிப் பாடும் "மலர்கள் நனைந்தன பனியாலே" என்ற பாடல் எங்களை எங்கெங்கோ கொண்டு செல்லும். இவரே இசையமைத்துப்பாடிய மகாகவியின் "சிறு நண்டு மணல்மீது படம் ஒன்று கீறும்" பாடல் நீல வாணனின் " ஒட்டுவண்டியை ஓட்டு" பாடல் பொன்னம்பலத்தின் "மார்கழிக்குமரி கார்முகச் செல்வி" போன்ற பாடல் அற்புதமான அர்த்தத்தின் ஆழத்திற்கு எங்களை இட்டுச்செல்லும் அவர் மரணமான செய்தி அறிந்தபின் அவருடைய கவிதைகள் அனைத்தையும் திரும்பவும் வாசித்தேன். அவருடைய அன்பு, பாசம், குரல் , அரவணைப்பு இவற்றில் கிடைக்கவில்லை. பழைய நினைவுகள் பசுமையாக மீண்டும் மீண்டும் வந்தன. துயரம், கவிதைகளுக்கு மேலாக, அவருடைய இனிமையான குரல் போல இளம் குளிராக என்னை வருடிக் கொண்டிருந்தது."

பெண்குரல் அவிழ்க்கும் இணையஇதழ் "ஊறு"ல் றஞ்சி ரவி அவர்கள் இவரைப்பற்றி மரணங்கள் முந்திக்கொண்டுவிடும் சந்தர்ப்பங்கள் தாக்கங்களையும் தந்துவிட்டுப்போகின்றன. தமிழ் மக்களின் போராட்ட வாழ்பனுபவங்களை கவிதைகளில் பதிவுசெய்த கவிஞர்களில் சு.வியும் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார். இனிய சுபாவம்,



குரலின் கனம், உடலின் வளர்த்தி, பழகியவர்களின் முன் ஓடிவரும் இந்தத்தோற்றம், பாடல்களைப்பாடும் வல்லமை அவரை உயிர்ப்பித்தபடி எம்முன் கொண்டுவரும்.

அவரது கவிதைகள் போதிய அளவு ஈழத்துப்போராட்டச் சூழல் வாழ்பனுபவங்களை பதிந்திருக்கின்றது என்பதால் மரணம் அவரது நினைவைப் பறித்துவிட முடியாது. முதுமை அனுபவ முதிர்வுகளைத் தந்துவிடுவதால் அதை அவர் எட்டிப்பிடிக்கும் காலத்தில் நிகழ்ந்த மரணம் ஈழத்து கவிதை உலகிற்கு மட்டுமல்ல அவரது குழந்தைகள், மனைவி என உறவுகளுக்கும் வாழ்வைவிட்டு வேரறுத்து இழந்த துயரம் தான் அகமெரியும் சந்தம் - சு.வில்வரெத்தினம் கவிதைகள் என்ற தலைப்பில் எழுத்தாளர் ஜெயமோகன் எழுதிய கட்டுரைபற்றி பலருக்கு உடன்பாடு இல்லாத போதும் சு.வில்வரெத்தினம் அவர்கள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். என்னால் சுருக்கத்தரப்படுகிறது.

கவிதையின் நுண்தளங்களைப் பற்றிய பிரஞ்ஞைகொண்ட தமிழ்நாட்டு வாசகர்கள், குறிப்

பாக நவீனத்திய அழகியல் நோக்கை மையமாக கொண்டவர்கள், ஒட்டுமொத்த ஈழக்கவிதை களையே ஒற்றைப்படையான உணர்ச்சி வெளிப் பாடுகள் என்று எண்ணினார்கள். இன்றும் எண்ணு கின்றார்கள். அலையடங்கிய பின் எல்லா ஈழக்கவி ஞர்கள் மேலும் மறுவாசிப்பு உருவானபோது தான் சு.வில்வரெத்தினம் கவனத்துக்குரியவரானார். இன்று தமிழ்நாட்டின் முதன்மையான கவிதை வாசகர்களில் பலர் ஒட்டுமொத்த ஈழக்கவிஞர் களிலேயே அவரே தலை சிறந்தவர் என்ற எண்ணம் கொண்டிருப்பதை கவிதை விவாதங் களில் கேட்டிருக்கின்றேன். என்கணிப்பில் வெற்றி கரமான கவிதைகள் ஒப்புநோக்க குறை என்பதால் சு.வில்வரெத்தினம் சற்று பின்னகர்கிறார். ஆனால் ஈழக்கவிதையின் உச்சகட்ட வரிகள் சு.வில்வரெத் தினம் வழியாக நிகழ்ந்தன.

சு. வில்வரெத்தினம் கவிதைகளின் சிறப் பியல்புகள் ஏற்கனவே சொன்னபடி ஈழக்கவிதை களின் பொதுவான சிறப்பியல்புகள்தான். அவை பெரும்பாலும் யாப்பை மீறி தனக்கென சந்த ஒழுங் கை மேற்கொண்டவை. செய்யுள் மொழியிலிருந்து பெரிதும் விலகாது இயல்பவை. நேரடியாக வாச கனிடம் பேசுபவை. உணர்ச்சிகளை தீவிரமாக வெளிப்படுத்துபவை. அத்துடன் நேரடியாக காட் சிகளை சித்தரித்துக்காட்டும் ஒரு நாடகத்தன்மை யையும் பல கவிதைகளில் சு.வில்வரெத்தினம் கையாண்டிருக்கின்றார்.

நாதப்பறை முழங்க
நடனித்து கழல்கள் குரைசலிட
பாதத் திறம்பாடி எழுகின்ற பார்வதி

போன்ற வரிகளில் மொழியும், இசையும் முக்கிய பெரும் பத்திமரபின் அழகிய தமிழாடலை காண் கின்றோம். சு.வில்வரெத்தினம் கவிதைகளை வாசிக்க வைப்பது நாவுக்கும், காதுக்கும் இனிமை யாக மாறும். இந்த சொல்லழகு தான் இந்த வகையில் பாரதிக்குப்பின் எழுதிய நவீனத் தமிழ்க் கவிஞர்களில் சு.வில்வரெத்தினத் திற்கு இணை யாக எவரும் இல்லையென்றே சொல்லத் துணி வேன்.

புரிந்துகொள்ள முடியாத மனத்தொய்வு ஒன்றை அதன் வரிகள் தொடர்ந்து எழுப்புகின்றன. சொல்ல சொல்ல மந்திரம் போல் அதன் சொற்கள் நம்முள் ஒலிக்கின்றன. சிந்திக்க சென்றோமெனில் ஒவ்வொரு முறையும் நாமறியா இடங்களுக்குக் கொண்டும் செல்கின்றன. அன்னையும் மண்ணும் ஒன்றாகும் குழந்தையை மிக்க கணமொன்றைத் தொட்டு சு. வில்வரெத்தினம் அதை நிகழ்த்தியிருக் கின்றார்.

“காலச்சுவடு” இணையத்தளத்தில் திரு.ரவிக்குமார் அவர்கள் இவரைப்பற்றி “எல்லா வயதுமே இறக்கின்ற வயதுதான் என்றாகிவிட்ட ஈழத்தில் ஐம்பத்தாறு வயதில் ஒருவர் இறந்ததில் வியப்பேதும் இருக்க முடியாதுதான் ஆனால் வில்வரெத்தினத்தின் மரணத்தை அப்படி ஒதுக்கி விட முடியாது. ஒரு இழப்பின் மதிப்பு அதனால் ஏற்படும் வெற்றிடத்தில் தீர்மானிக்கப்படுகின்றது. வில்வரெத்தினம் ஏற்படுத்திச் சென்றுள்ள வெற்றி டம் ஈழத்தைக்காட்டிலும் பெரியது.

ராஜீவ் காந்தியின் மரணத்திற்குப்பிறகு ஈழப்பிரச்சினை குறித்துத் தமிழ்நாட்டில் ஏற்பட்ட மௌனத்தைச் சற்றே நிகழ்த்திய பெருமை வில்வ ரெத்தினத்தின் கவிதைகளையே சாரும்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூற் றியைந்தில் வெளியான “காற்று வெளிக்கிராமம்” என்ற சிறுநூல் வில்வரெத்தினத்தின் நீள் கவிதை யை தாங்கி வந்தது. ஈழப்போராட்டத்தின் துயரத் தை அந்த நூலின் அளவுக்கு எடுத்துச்சொன்ன நூல் வேறெதுவும் இருக்க முடியாது.

வில்வரெத்தினத்தின் மரணச்செய்தி கேட்டு ஒரு வாரத்துக்குள்ளாகவே அன்ரன் பாலசிங்கம் மறைந்த செய்தி வந்துவிட்டது. ஈழத்தமிழர்கள் நடத்தும் வலையகங்களில் ஒரு மரணத்தை இன் னொரு மரணம் சிறிதாக்கிக்கொண்டே இருக்கின் றது. ஒரு துயரத்தின் மேல் படிகின்றது இன்னொரு துயரம். பாலசிங்கத்திற்கு “தேசத்தின் குரல்” என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவிக்கின்றார் பிரபாகரன். ஒரு கவிஞனை பூலோக எல்லைக்குள் வரையறுக்க முடியாது. பிரபாகரனை பின்பற்றி வில்வரெத்தினத்தை “தமிழின் குரல்” என்று அழைக்கலாமென தோன்றுகின்றது. தமிழ் உள்ளளவும் ஒலிக்கும் அந்த கவிதைக்குரல்.

“நெய்தல்” இணையத்தில் “எம்மக்களின் இன்னல்களை இலக்கியமாக்கித்தந்த கவிஞர் சு.வில்வரெத்தினம் மரணித்துவிட்டார்” என்ற தலைப்பில் நோர்வேயிலிருந்து யூலியாஸ் அன்ரனி அவர்கள் இவரைப்பற்றி “கவிஞரை முதன் முதலில் நேரடியாக சந்திக்கும் போதே அவருடன் நீண்டகாலம் பழகியபிரமை ஏற்பட்டது. அதற்கு முக்கிய காரணம் என்னவெனில் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொன்னிற்றாறில் நோர்வே பேர்கன் தமிழர் சங்கத்தால் நடாத்தப்பட்ட கலாச்சார விழாவிலே கவிஞரின் “காற்று வெளிக் கிராமம்” கவிதைத்தொகுப்பினை கவிஞர் தமயந்தி அவர்கள் கவிச்சித்திரமாக்கி சிறந்த இசையமைப் புடன் மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது. அதற்கும் அப்பால் கவிஞர் பேர்கன் நகருக்கு வந்திருந்த வேளை நோர்வே தேன் தமிழோசையில் பத்தாவது ஆண்டுவிழா கொண் டாடப்பட்டது. அந்நிகழ்விலும் மீண்டும் “காற்று வெளிக்கிராமம்” அரங்கேறியது. அந்நிகழ்வை தமையந்தியுடன் இணைந்து கவிஞரும் நெறிப் படுத்தினார். நாங்கள் ஒத்திகை செய்யும் போது

கவிஞர் தனது கவிதைகளைக் குரலுயர்த்தி கதறிக்கதறி உரைத்தமை இன்னும் என் நெஞ்சை வருடியபடியே உள்ளது. தேன் தமிழோசையின் நிகழ்விலே "காற்று வெளிக்கிராமம்" கவிதைகள் எவ்வாறு உருப்பெற்றது என்பதனையும், எமது மக்கள் அக்காலப்பகுதியில் பட்ட துயரங்களையும் நெஞ்சுருக உரைத்தார்.

எமதன்புக்கவிஞருக்கு தேன்தமிழின் இதய அஞ்சலி உரித்தாகட்டும்.

கடந்தமாதம் வெளிவந்த "உலகத் தமிழர்" பத்திரிகையில் "எடுத்துச்சொல்லுங்கள் எங்கள் உபதேசமிது" என்ற தலைப்பில் ஈழத்து அரசியல் அறிஞர் க.வே.பாலகுமாரன் அவர்கள் எழுதிய கட்டுரையின் இறுதியில் "இனி நடக்கப் போவது என்னவென்பதை அறிய வரலாறே காத்து நிற்கின்றது.

காலம் காலமாய் இரத்த கறைபடிந்த
துருப்பிடித்த இதயத்தைத்
துருவி ஆராயுங்கள்
மஞ்சள் அங்கிகளுக்குள்ளும்
புலப்படாது புதைக்கப்பட்டுவிட்ட
புத்தரின் அன்பு துலங்கும்வரை
செதுக்குங்கள் உங்கள் இதயத்தை செதுக்குங்கள்"

என சு.வி வரிகள் சொன்னதைத்தவிர வேறு என்ன சொல்ல இயலும்.

இவ்வாறு கட்டுரையை முடிக்கின்றார். கவிஞர்கள், எழுத்தாளர்கள் திரு சு.வி பற்றி எழுதியவற்றை கட்டுரைக்காக சுருக்க மேலே சொல்லியுள்ளேன். ஏதாவது பொருட்பிழை இருப்பின் என் தவறாகவே இருக்கும்.

எங்கள் மண்ணின் கவிஞன் இலக்கிய உலகில் அழிக்க முடியாத தடத்தை பதிந்து சென்றுள்ளார் என்பதை சொல்லவும், அதன் கனபரிமாணத்தை புரியவைக்கவும் இக்கட்டுரை உதவும் என நம்புகின்றேன். திரு சு. வி பிறப்பைப் பற்றி தெரிந்த அளவுக்கு அவரது படைப்பைப்பற்றி என் ஊரவர்களுக்கு தெரிந்திருக்க வாய்பில்லை என்றே எண்ணுகின்றேன். இவரின் கவிதைத் தொகுப்பான "உயிர்த்தெழும் காலத்திற்காக" என்கின்ற கவிதைப்புத்தகம் பத்துப்பேரிடமாவது இருக்குமா? என்பது எனக்கு சந்தேகமே. "வாழும் மனிதரை வாழ்த்த மறந்த மானிடரே" என்ற பாடலுக்கு ஏற்ப நாம் நடந்து கொள்கின்றோம். இது தொடராது தவிர்ப்போம். எமது ஊரின் மைந்தர்களை அவர்களின் திறமைக்கேற்ப கௌரவப்படுத்தும் பொழுது எம் மண் பெருமை கொள்கின்றது என்பதை மறவாது இருப்போம்.

ஈழத்தின் நான்காம் தலைமுறை சார்ந்த கவிஞர் சு.வில்வரெத்தினம் அவர்களை எமது அடுத்த தலைமுறைக்கு அறிமுகப்படுத்தி வைக்க வேண்டிய கடப்பாடு கனேடிய மண்ணிலே புங்குடுதீவு பழைய மாணவர் சங்கத்திற்கு உரியது. அதனை இனிவரும் காலங்களில் செய்யும் என நம்புவோம். தொடரட்டும் சங்கப்பணி!

"சிலுவை ஏற்றுவோர்க்கும்
சிலுவை சுமப்பவர்க்கும்
இடையிலுள்ள முரண்பாடு
இன்று நேற்று எழுந்ததன்று
மோதி மோதி முரண்பட்டுப்புதிது
குதிர்வது உண்மையே

கவிஞர் சு.வி
உயிர்த்தெழும்' காலத்திற்காக (பக்கம் 74)




பூவரசம்பொழுது 2006 வெற்றி பெற வாழ்த்துக்கள்

# E.Z. DRIVING SCHOOL

***Professional Driving Instructor and Teacher***
***Licensed by Ministry of Tranportation***

* யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று கருதிச் செயற்படுவோம்.
* அனைவரும் ஈட்டத்தக்க செல்வம் அறிவுச் செல்வம்
* அறிவுடையார் எல்லாம் உடையார்
* கலையும் கல்வியும் தொழில் நுணுக்கங்களும் கருத்தில் பதிவது வளத்திற்கு அறிகுறி!
* அறிவின் அழகே அழகு!
* அறிஞரைக் கண்டு அரசரும் பணிவர்
* சபாவின் மாணவர்களைக் கண்டு Examiner's மகிழ்வர்!
* ஊக்கமது கைவிடேல்
* பருவத்தே பயிர் செய்!
* என்கடன் பணி செய்து கிடப்பதே



>> O.S.L. Approved Course for Special Rate
>> Insurance Saving up to 41%

***S.Sabaratnam (Saba)***

**Tel : 905.294.2285 - Cell : 416.931.3444**

**3630 Lawrence Ave. East # 23, Scarborough, ON, M1G 1P6**

# குளத்துவான்

- சு. குணரெத்தினம் C.O -

புங்குடுதீவின் தெற்கே, அருள்மிகு கண்ணகையம்மன் ஆலயத்திற்கு மேற்குப்புறமாக ஆரம்பித்து, அதாவது மணற்காடு இந்து மயானப்பகுதியில் தொடங்கி, ஒற்றைப்பனையடி என்று சொல்லப்படுகின்ற இரண்டாம் வட்டாரம், கன்னிமார் கோவில் முடிவடையும் கடற்கரைப் பகுதியை "குளத்துவான்" என பெயரிட்டு மக்கள் அழைத்து வந்தனர். இந்தக்குளத்துவான் பல சரித்திர நிகழ்வுகளை உள்ளடக்கியுள்ளது. எமது மூதாதையர்கள் மட்டுமல்ல, தற்கால வயதினரும் இவ்விடத்தின் அருமையை அறிந்து கொள்வர். "குளத்துவான்" எனப்பெயர் வரக்காரணம் எதுவென நோக்குவோம். இயற்கை நியதிப்படியும், பருவகால மாற்றப்படியும், கடலிலுள்ள நீர் வற்றிப் பின்நோக்கிச் செல்வதும், பின்னர் பெருக்கெடுத்து கடல்நீர் கரையைத்தொட்டு அலைமோதுவதும் நடை 'முறையில் நாம் கண்டவைகளாகும். இந்த வகையில் புங்குடுதீவின் தென்கடல் பல சிறப்புக்களைக்கொண்டது. சோழகக்காற்று வீசுவதும் தென்திசையில் இருந்துதான் என்பதும் யாவரும் அறிந்ததே. கடல் வற்றும்போது சல்லிமேடுவரை நிலம்தெரிய நீர் வழிந்தோடிவிடும். அப்போது தென்கடல் அந்த மணியகாரன் குளத்துவானை அண்டிய கடற்கரைப்பகுதியில் வாழ்ந்து தென்னை, பனை மரங்களை அந்த மணற்பகுதியில் வளர்த்ததால் மணியகாரன் தோட்டம் என பெயர்வரக்காரணமாயிற்று. இதே மணியகாரன் தோட்டப்பகுதியில் நன்னீர் ஊற்றுக்களும் காணப்பட்டன. ஆனால் எந்த நேரத்திலும் இந்தக்குளத்துவான் என்ற இடத்தில் நீர் நிறைந்து காணப்படும். அப்பொது அந்த இடத்தைப்பார்க்கும்போது நீர் நிறைந்து காணப்படும் குளத்தைப்போன்றே காட்சியளிக்கும். அத்தோடு வான் பாய்தல் என்று சொல்வதுபோல் வற்றியநீர் கடல் பெருக்கு எடுக்கும்போது இந்த வான் வழியாக பெருகி உள்ளேவரும். குளம்போன்ற காட்சியாக இருந்தாலும், வான் பாயும் நீர் இதனூடே வருவதாலும், நமது மூதாதையர்கள் இவ்விடத்திற்கு " குளத்துவான்" என பெயர் இட்டனர்.






போக்குவரத்து வசதிகளற்ற பழம்குடிமக்கள், தாய் நிலத்தில் பயிர் வகைகளைச்செய்தும், கடல் வளத்தைப்பயன்படுத்தியும் தமது வாழ்க்கையை நடாத்தி வந்தனர். இன்று எல்லோராலும் பேசப்படுகின்ற அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த எல்லாள மன்னன் காலத்தில், மருந்து மூலிகைகள் நிறைந்த பழம் பெரும் பதியாக புங்குடுதீவு இருந்தது என சரித்திர நூல்கள் வழியாக படித்திருக்கின்றோம். இந்தக் குளத்துவான் கரையோரப்பகுதிகளில் பல மூலிகைச்செடிகள் காணப்பட்டதாக பல சான்றுகள் உண்டு.

எமது பழைய கை வைத்தியர்கள் என்று சொல்லப்படும் மூலிகை வைத்தியர்களும் இப் பகுதியில் வாழ்ந்துள்ளனர். பரியாரி சுப்பிரமணியத்தார், சின்னத்தம்பி பரியாரியார், தம்பையா பரியாரியார், குணம் பரியாரியார் எனப்பல கைதேர்ந்த வைத்தியர்கள் இப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். வைத்தியசாலை வசதிகளற்ற காலங்களில் மூலிகை வைத்தியத்தையே மக்கள் பெரிதும் நம்பியிருந்தார்கள். வயிற்றுப்பொருமல், மலச்சிக்கல் போன்றவைகளில் இருந்து சுகம் அடைவதற்கு "நிலவாவல்" என்னும் செடியின் இலையைக்காயவைத்து, வறுத்து, இடித்து மாவாக்கி உணவுடன் சேர்த்து உண்பார்கள். பின்னர் சில நாட்களில் உடல்நிலை சுகமாகி வந்துவிடும். இதே நிலவாவல் செடி இரண்டாம் வட்டாரம் ஒற்றைப் பனையடிக் கடற்கரைப்பனங் காணிகளிலே படர்ந்து வளர்ந்து கிடக்கும். இதனை எமது காலத்தில் கண்டும், உபயோகித்தும் இருக்கின்றோம்.



பழங்காலத்தில் குளத்துவானில் பெரும் பாய்மரக்கப்பல்கள், தோணிகள் வந்துசேரும் துறைமுகமாக அமைந்து இருந்தது. இதே போன்று நடுவுத்துருத்தி, குறிகாட்டுவான், புளியடித்துறை, கழுதைப்பிட்டி ஆகியனவும் படகுத்துறைகளாக விளங்கி இருக்கின்றது. இத்துறைகளின் ஊடாக காளை மாடுகள், பசுமாடுகள் கூட தமிழ்நாடு, நெடுந்தீவு போன்ற பகுதிகளில் இருந்து கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இன்று பலராலும் பேசப் படுகின்ற இந்தியாவின் சேது சமுத்திரப்பகுதியான சேதுக்கரையிலிருந்து உணவுப்பண்டங்களையும், கால் நடைகளையும் ஏற்றிவந்து கச்சதீவின் ஊடாக, நெடுந்தீவு வந்து, குளத்துவான் கரைக்கு பொருட்கள் வந்து இறங்குவதும், பின்னர் குளத்து வானிலிருந்து யாழ்ப்பாணப்பகுதியான அலுப்பாந்தி யடைந்து, பின்பு பூநகரித்துறைக்குச் செல்வதும், மீண்டும் இதேவழியாக வணிகத் தொழிலில் ஈடுபடுபவர்கள் திரும்பிச்செல்வதற்கும் இப்பாதை பாதுகாப்பு நிறைந்ததாக காணப்பட்டது. இதற்கு சான்றாக மணற்காட்டின் பகுதியில் மணியகாரன் தோட்டம் என்னும் பகுதியிருப்பது தெரிந்த விடயமாகும். முக்காலத்தில் பாய் மரக்கப்பல்கள் கரைவந்து சேரும்போது ஆயக்காசு, அதாவது சுங்கவரி அறவிடப்படுவது வழக்கமாகும். அதே ஆயக்காரனை மக்கள் கொஞ்சம் பெருமையாக மணியகாரன் என அழைத்தனர். அந்த மணிய காரன் குளத்துவானை அண்டிய கடற்கரைப் பகுதியில் வாழ்ந்து தென்னை, பனை மரங்களை அந்த மணற்பகுதியில் வளர்த்ததால் மணியகாரன் தோட்டம் என பெயர் வரக்காரணமாயிற்று. இதே மணியகாரன் தோட்டப்பகுதியில் நன்னீர் ஊற்றுக் களும் காணப்பட்டன.

ஆதலினால் மிக அண்மைக்காலங்களி லும், இந்தப்பகுதி மக்கள் மிளகாய், புகையிலை மற்றும் மரக்கறி வகைகளையும் செய்து பெரும் இலாபத்தை தேடியுள்ளனர். இந்தப்பகுதியில் மிளகாய்தோட்டம் செய்த விவசாயிகள் பெரும் வசதியான கல்வீடுகளையும், இந்த வருமானத்தில் கட்டியுள்ளனர். காலத்தின் தேவைகருதியும், சுற்றுச்சூழலின் சுகாதார வசதிகருதியும், எமது ஊரின் அறிவுசார்ந்த பெரியோர்கள் புங்குடுதீவு வைத்தியசாலையை இதே குளத்துவான் பகுதி யில் அமைத்துள்ளனர். தேவைப்படும்போது நோயாளர்களை யாழ்ப்பாண பகுதியான அலுப்பாந்திக்கு கொண்டு செல்லும் வாய்ப்பும் இருந்தது. ஒல்லாந்தர் காலத்தில் இதே குளத்து வான் பகுதியூடாக ஒல்லாந்து நாட்டுப்படையினர் இங்கே வந்ததாகவும் வரலாறு உண்டு. எமது பகுதியில் வடகீழ் பருவப்பெயர்ச்சிக்காற்றிலேயே மழை பெய்கின்றது. இக்காலமாக மாரிகாலத்தில் குளத்துவான் பகுதி பெருக்கெடுத்து கரைப் பகுதியிலேயே நீர் நிறைந்து காணப்படும். இது மரக்கலங்கள் இலகுவாக கரைசேர பெரும் வசதியாக இருக்கும். இக்காலத்தில் மயிலிட்டி, மாதகல், வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பகுதி கரையோர மீனவர்கள் இந்த குளத்துவான் பகுதியில், தற்காலிக கொட்டகைகள் அமைத்து, ஆழ்கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவர். அக் காலம் இப்பகுதி மக்களுக்கு பெரும் களியாட்ட மாகவே இருக்கும். இதே போன்று நடுவுத்துருத் தியை அண்டிய பகுதியான தொட்டத்துமுனைப்



பகுதியிலும், குறிகாட்டுவான் துறைமுகப் பகுதிகளிலும் மீன்படித்தொழிலில் ஈடுபடுவோர் வந்த தொழில் செய்வார்கள். இந்தியாவிலிருந்து கள்ளக்கடத்தல் தொழிலில் ஈடுபடுபவர்களும், மெல்லிய விசைப்படகுகளில் பொருட்களை ஏற்றிவந்து இந்தப்பகுதிகளிலேயே இறக்கு வார்கள். அதேபோன்று கடைசிக்காலங்களில் போராளிகளின் படகுகளும் பல தேவைகளுக்காக இந்தக்குளத்துவான் பகுதியை பயன்படுத்தியதை அறிவோம். இங்கு இன்னும் ஒரு விடயத்தையும் சிந்திக்க வேண்டும். இந்துசமயத்தவர்கள் தங்கள் மயானத்தை இப்பகுதியில் வைத்ததும் காரணத் தோடுதான் என சொல்ல வேண்டும். தங்களின் இறுதிக்கிரிகைகளைச் செய்வதற்கும், கடைசியில் கடல் நீரில் முழுகிக் கடன் தீர்க்கவும் இது வசதியான இடமாகும். அத்தோடு குளத்துவானின் தென்பகுதி கற்களால் குவிக்கப்பட்ட சல்லி எனக் குறிப்பிடும் இடமும் உண்டு. அங்கு ஒரு சிறு நிலப் பகுதி உண்டு. அந்த இடத்திலும் உவர்நிலத்




தாவரமான கொட்டனை போன்ற செடிகளும் வளர்ந்துள்ளது. பிற்பட்ட காலத்தில் இப்பகுதி மக்களின் தூரநோக்குப்பார்வையில் வைரவா கோவில் அமைத்திருக்கின்றார்கள். ஆடி அமா வாசைக்காலங்களில் மக்கள் குளத்துவான் கடலில் நீராடி இந்த ஆலயம் சென்று பிதிர்கடன் களை செய்து வருகின்றார்கள். சிலகாலம் சிவராத் திரி காலங்களில் பெருங்காடு சிவன் ஆலயத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் அருள்மிகு மீனாட்சி சோமசுந்தரரேஸ்வரப்பெருமாள் தீர்த்தமாட வரு வதும் இதே குளத்துவான் பகுதிக்குத்தான் என்ப தும் தெரிந்த விடயமாகும். அத்தோடு இக்கரையில் சமாதிக்கோவிலொன்றும், புனித அந்தோனியார் திருத்தலமும் அமைந்திருக்கின்றது. இந்த குளத்து வான் துறைக்கு கிழக்கே வீரமலை என்னும் இடத்தில் கலங்கரை விளக்கமொன்று அதாவது வெளிச்சவீடு கட்டப்பட்டு மரக்கலங்கள் கரைசேர வழி சமைக்கப்பட்டுள்ளது.

## நடுவுத்துருத்தி

இந்த இடம் புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத் தில் அழகான, செழிப்புமிக்க இடமாகும். ஊரை தீவு, வரதீவு, கேரதீவு போன்றதொரு இடமாகும். இதன் தெற்குப்புறம், முற்றுமுழுதாக கடல் எல்லை யாகவும், கிழக்குப்புறம் ஓடைக்கடலை எல்லை யாகவும், வடக்கும், மேற்கும் உவர்நிலமும், கடலும், கடல்சார்ந்த இடமாகவும் உள்ளது. மொத் தமாகப்பார்க்கப்போனால் கடல் சூழ்ந்த தீவாக காட்சியளிக்கின்றது. கடல் அல்லது ஆறுகளால் சூழப்பட்ட இடத்தை துருத்தி என்று அழைப்பர். நடுப்பகுதி மேடாக இருப்பதனால் நடுவுத்துருத்தி என பெயர் வந்ததெனலாம். இங்கு எந்த பெருமழை காலங்களிலும் வெள்ளம் தங்கி நிற்காது, வடிந்து கடலை அடைந்துவிடும். ஆதலால் மேட்டு நிலப்பயிரான வெங்காயம், மிளகாய் மற்றும் மரக்கறி வகைகளை மக்கள் உற்பத்தி செய்தனர். வெங்காயச்செய்கையில் பெரும் லாபம் தேடிய எமதிடத்தில் நடுவுத்துருத் தியும் ஒன்று. இதன் தென்கடல்ப்பகுதியும் முன்னைய காலத்தில் மரக்கலங்கள் வந்து சேரும் துறையாக வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. இந்த இடத்திற்கு தென்னைகளும், பனைகளும் வளர்ந்து அழகூட்டி நிற்கின் றது. இங்குள்ள ஓடைக் கடலிக்கு கிழக்குக் கரையில் பெரும் ஆலமர விருட்சத்தின் கீழ் இருக்கும் பெத்தப்பர் கோவிலுக்கும், நடுவுத்திருத்தியில் அமைந்திருக் கும் வைரவர் கோவிலுக்கும் அருகாமையில் அமைந்திருக்கும் குறிகாட்டுவான் அருள்மிகு மனோன்மணி அம்மன் கோவிலுக்கும் சென்று பூசைகள் பல செய்து பொங்கலும் பொங்கி வழிபடுவர். இவ்விடத்தை அண்டிய பகுதிகள் சிறு பற்றைகளும், பரந்த புற்றரைகளும் நிறைந்த இட மாகும். இங்கு வாழ்ந்த முன்னோர்கள் கால்நடை வளர்ப்பதிலும் முன்னுதாரணமாக திகழ்ந்தனர். ஓடைக்கடலில் உப்பு விளைந்ததையும் மக்க ளுக்கு நினைவூட்ட வேண்டும்.

## குறிகாட்டுவான்

நடுவுத்துருத்தியை அண்டிய உவர் நிலங் களால் தொடர்புபட்ட மேடான பகுதியாக குறிகாட்டுவான் விளங்குகின்றது. இங்கும் பனைகளும், தென்னைகளும் வளர்ந்து பசுமை நிறைந்த ஊராக பெருமை காட்டுகின்றது. குறி என்பது அடையாளம் அல்லது இலக்கு என்பர். இவ்விடத்தின் மேற்குப்புறமாக நின்று பார்த்தால் எமது பசுமைமிக்க ஏழு தீவுகளும், அவைகள் அமைந்திருக்கும் இலக்குக்களும் வடிவாகத் தெரியும். நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, வேலணைத்தீவு ஆகிய வற்றைக்காணலாம். இதனால் இந்த இடத்திற்கு குறிகாட்டுவான் என பெயரிடப்பட்டது. இந்த



இடத்தின் மிக அண்மையில் உள்ள நயினாதீவில் இருந்து அருள் சுரக்கும் அன்னை நாகபூசனி அம்பிகையின் ஆராய்ச்சி மணி அடிக்கும் ஓசை ஏழாற்றுப்பிரிவில் விழுந்து, தவழ்ந்து வந்து குறிகாட்டுவானில் ஒலிக்கும். இத்தோடு குறிகாட்டு வான் அருள்மிகு மனோன்மணி அம்பாளின் திருவருளும் கூடி இந்த இடத்து மக்களுக்கு அருள் மழை சொரியும். இவ்விடத்தின் துறைமுகம் வழியாகவே நெடுந்தீவு, நயினாதீவு, கச்சதீவு,

போன்ற இடங்களுக்கு மக்கள் செல்வர். இங்குள்ள மக்களும் வெங்காயம், மரக்கறி மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். குறிகாட்டுவான் அன்னதானசபை இலட்சக்கணக்கான மக்களுக்கு உணவு கொடுத்து ஆறுதல் அளித்து வருகின்றது. பிற்பட்ட காலத்தில் நடுவுத்துருத்தி, குறிகாட்டுவான் பகுதிகளுக்கு பாதைகள் அமைக்கப்பட்டு பிரயாண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

**பெருங்காடு**

புங்குடுதீவு மத்தி முதலாம், இரண்டாம், மூன்றாம் வட்டாரங்களின் சில பகுதிகளை அடக்கிய இடமே பெருங்காடாகும். இப்பகுதியில் ஆல், அரசு, மருதம், கொன்றை, மாவிலங்கு, வேம்பு, கருக்குவாச்சி, பூவரசு, ஆவரை, ஒதியம், குறிஞ்சா, இலுப்பை, விளாத்தி, தென்னை, பனை, மா, முல்லை இன்னும் பல வகையான மரங்களையும், கொவ்வை, முசுட்டை, காத்துவெட்டி, குண்டுமணி போன்ற கொடிவகைகளும் மற்றும் மருத்துவ மூலிகைச்செடிகளும் நிறைந்த வனமாக பெரும் காடாக அது இருந்தமையால் பெருங்காடு எனப் பெயர் வழங்கலாயிற்று. இந்த மரம், செடி,



கொடிகளை இன்னும் நமது ஊருக்குச்சென்றால் எல்லோரும் காணக்கூடியதாய் இருக்கும். இங்கு கிராஞ்சியென்னும் பகுதியில் அருள்மிகு சிவன் கோவில் , கந்தசுவாமி கோவில் என்பன அமைந்திருக்கின்றன. கிராய் என்பது கருமையான சேற்று நிலங்களை குறிக்கும் சொல். கிராய், கிராஞ்சி என அழைக்கும் பகுதிகள் சிறந்த வயல் நிலங்களும், நன்னீர் ஊற்றுக்களும் காணப்படுபவையாகும். அதே போன்று புங்குடுதீவின் கிழக்கே பெரிய கிராய், சின்னக்கிராய் என அழைக்கப்படும் வளமிக்க வயல்நிலங்களும் உண்டு. கிராஞ்சியை அண்டிய பகுதியில் மானெழுவம் என்ற பகுதியில் அருள் வழங்கும் மாரியம்மன் குடிகொண்டு கொலுவீற்றிருக்கின்றாள். காடாக இருந்த காலத்தில் மான்கள் இப்பகுதியில் வாழ்ந்து வந்ததால் மானெழுவம் எனப்பெயர் வந்தது. வடக்குப் பெருங்காட்டுப்பகுதியில் மூத்த நயினார் புலம் என்ற இடத்திலேயே அருள்மிகு வரசித்தி விநாயகப்பெருமான் இருந்து அருள் ஆட்சி புரிகின்றார். இங்கு நயினார் என்பது ஊரிலே வசதிகள் கூடிய நிலக்கிழார்களை மக்களின் வாழ்வுக்கு உதவு



பவர்களாக கணிக்கப்படுவர். புலம் என்பது இடத்தை அல்லது குறிச்சியைக் குறிக்கும். அந்த எசமானர்களில் மூத்தவரை மூத்த நயினார் என்று அழைப்பதுண்டு. அந்த வகையில் மூத்த நயினார் புலம் என இப்பகுதிக்கு பெயர் வந்திற்று. இன்றும் நமது ஊரில் வயது முதிர்ந்த மக்களது வாயில் நயினார் என்ற சொல் பழக்கத்தில் இருக்கின்றது. கரம்பை, கரந்தை என்ற சொல் களிமண் நிலம், தரிசு நிலங்களைக்குறிக்கும். இன்றும் முதலாம் வட்டாரத்தில் கரம்பைக்குன்று, கரந்தலி என குறிச்சிகள் உண்டு. இப்பகுதியில் உள்ள களிமண்ணை எடுத்து மக்கள் வீடு கட்டவும், தோட்டங்கள் செய்யவும் பயன்படுத்துகின்றார்கள். கரந்தலிப் பகுதியில் உப்புக்களிக்குளமென முற்றவெளிக்கு மேற்காக உள்ளது. இங்கு மாரிகாலங்களில் மழைநீர் தேங்கி அதனோடு கடல் பெருக்கெடுக்கும்போது உப்பு நீரும் வந்து கலக்கும். அக்குளத்தில் குறிப்பிட்ட காலம் இறால்கள் உற்பத்தியாகி அப்பகுதி மக்களின் உணவாக அவை பயன்படும். தெற்குப்பெருங்காட்டில் தென்னை, பனை, மாமரம், முருக்கை போன்ற பயன்தரு மரங்கள் பெருமளவில் உண்டு. அத்தோடு கோவில்வயல், புட்டுனி, விளாங்கண்டல், அன்னைதேவன் வயல் போன்ற பகுதியில் நெற்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது. அன்னதேவன் வயலுக்கு அருகாமையில் பழம் பெரும் ஐயனார் கோவில் அமைந்மதிருக்கின்றது. வயலில் அறுவடை நடைபெறும் காலங்களில் காவல் தெய்வமான ஐயனாருக்கு மக்கள் பொங்கல் செய்து வழிபடுவார்கள். இவ்வயலுக்கு மேற்குப்புறமாக "இடிவிழுந்த குன்று" காணப்படுகின்றது. இது மழைக்காலங்களில் ஏற்பட்ட இடி மின்னல் தாக்கியே ஏற்பட்டதாக நம் முன்னோர்கள் கூறுவார்கள். மழை பெய்யும் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் போது இதனூடாகவும் மழைநீர் கடலிற்குள் செல்லும். இதனை அடுத்து "அருளியடி" என்ற நன்னீர்க்கிணறுகள் பல உள்ள தோட்ட நிலங்களும் உண்டு. இங்கு அருளி மரங்கள் நிறைந்து காணப்பட்டதால் இந்த இடத்திற்கு அருளியடியென பெயர் வழங்கப் பட்டது. இதன் தென்மேற்குப்பகுதியில் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு பெற்றோல் வளம் உண்டென வெளிநாட்டவர்களால் பரிசோதனை செய்யப் பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அப்போது ஏற்பட்ட நில வெடிப்பிலிருந்து இன்னும் நன்னீர் ஊறி வெளிவந்துகொண்டிருப்பதைக் காணலாம்.

# உயரப்புலம்

- செ. செந்தில்நாதன் -

தமிழரின் பேச்சுவழக்கில் குறிப்பாக கிராமிய மட்டத்தில் உயரம் என்றால் தூரம் என்னும் பொருள் படவும் பேசிக்கொள்வார்கள். கடலிற்கோ, அன்றி விளையாடுவதற்கோ போகும் போது பெரியவர்கள் சொல்லும் வாக்கியம் உயரப் போகாது சுறுக்கா வா என்பதே. அதாவது தூரப்போகாது விரைவாக வா என்பதே அதன் பொருள். இவ்வுயரப்புலம் புங்குடுதீவின் கிட்டத் தட்ட மத்திய பகுதியில் அமையப் பெற்றுள்ளது. அத்துடன் பனைகள் நிறைந்த பகுதியாகவும் வயற்பகுதிகளும் நிறைந்த பகுதி. மறுபுறம் கடல் நீரும் மழைநீரும் கலந்து இருக்கும் உவர் நிலம். இவ்வுயரப்புலத்தில் எம்முன்னோர்கள் வரகு, குரக்கன், சாமை அத்துடன் பனம்கிழங்கு போன் றவைகளையும் பயிரிடுவர். உவர்நிலம் சுற்றி யிருப்பினும் இப்பகுதி சற்று கூடுதலான பிட்டி போன்ற உயரத்தில் இருப்பதனாலும்இதற்கு உயரப்புலம் எனப்படுகின்றது. (உயரம்+புலம்) புலம் என்பதற்கு இடம் என்பதும் பொருள். ஆத்துடன் புங்குடுதீவின் கரையோரப்பகுதிகளில் உள்ளவர்களுக்கு தூர இடமாக இவ்விடம் அமைந்தமையாலும் பேச்சுவழக்கு மொழியில் உயரப்புலம் என்றனரோ தெரியாது. அவைகள் ஆய்வுகள் மூலமே அறியலாம்.

### மாவுதிடல்

எமதூரில் இப்போ ஓரிரு குதிரைகள் இருப் பினும், இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பல பகுதிகளில் கூட்டம் கூட்டமாக குதிரைகள் இருந்தது என்பது உண்மை. மக்கள் பெருக்கம், மற்றைய ஊருக்கான தரைவழிப்பாதை பொன்ற வற்றாலும் பல மிருகங்கள் எமதூரில் இருந்து எம்மைப் போல் இடம்பெயர்ந்து விட்டன. எம தூருக்கு குதிரைகள் எப்படி வந்தன என ஆராய் தால் அதில் பல ஆச்சரியங்கள் நிரம்பியிருக் கலாம். நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட பகுதிக்குள் எப்படி காட்டு மிருகங்கள் வந்தன என்பதே ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டிய முக்கிய காரணம். இருப்பினும் குதிரைகள் வந்த மைக்கான காரணத்தை நாம் நோக்கின் சில உண் மைகள் புலப்படலாம். அவற்றை நாம் பார்க்கின் அவை ஏதோ ஒருவகையில் கடல்வழியூடாக வந்திருக்க வேண்டும் என்பது எமக்கு புலனாகும். அப்படியாயின் எவ்வாறு என்பதே மிஞ்சியிருக்கும் கேள்வி. அவை வந்தமைக்கான காரணங்களாக நாம் கருதுவது வலிமைமிக்க அரசர்களின் படை யெடுப்புக்களினாலும், எமதூர் அவர்களின் நிர்வா கத்திற்குட்பட்டிருந்தமையாலும். அன்றி எம்தீவு மக்கள் பெரும் வணிகர்களாகவும் இருந்திருக்க வேண்டும். இதில் எம்மூர் மக்கள் பெரும் வணிகர்



களாக இருந்தமை உண்மையாயினும் அவர்கள் தமது வணிகப்பொருள்களை குதிரைகளில் வைத்து கொண்டுசெல்லவேண்டிய தேவை இருந்தி ருக்காது. தமக்கு தேவையான சில குதிரைகளை மட்டுமே அவர்கள் பாவித்திருக்கலாம். ஆகவே இக்கூற்று எமது ஆய்வுக்கு உட்படாதது. அதனால் அரசர்களின் படை நடவடிக்கைகளே இதுக்கு பொருந்தக்கூடியதாக இருக்கின்றது. அவர்களின் வருகையின் ஊடேதான் குதிரைகளின் வருகை களும் வந்திருக்க வாய்ப்பைக் கொடுத்திருக் கின்றது. அத்துடன் அனைத்து தீவுகளையும், மற்றும் யாழ்நகர், மன்னார், இந்தியா போன்ற வற்றை மாவுதிடல் அமைந்துள்ள இடத்திலிருந்து பார்க்கக்கூடியதாக இருந்தமையால் படை யெடுத்தவர்களின் பாதுகாப்பை முன்னிறுத்தி இவ் விடத்தில் முகாம் அமைத்து வாழ்ந்திருக் கலாம். அப்படியாக அவர்கள் படைமுகாம் அமைத்து வாழ்ந்திருப்பின் அவர்களின் படை நடவடிக்கை களுக்காக கொண்டுவரப்பட்ட குதிரை கள் தங்கிய இடமாக அது விளங்கியிருக்க வேண்டும். காரணம் இன்று மரங்களும் பற்றைகளும் நிறைந்த பூமியாக அது இருப்பினும் முன்னர் திறந்த வெளியாக அது விளங்கியிருக்க வேண்டும். அவ்வாறு அது விளங் கியமையால் தான் அரசர்கள் படையினருடன் தங்கியிருந்திருக்க வேண்டும். அவற்றை நோக்கின் இது புலப்படும். மா என்றால் குதிரை. திடல் என்றால் வெளி. ஆகவே குதிரைகள் கூட்டமாக தங்கி நின்ற வெளி மாதிடல். அதுவே மருவி மாவுதிடலாயிற்று முன் சொன்னது போன்று இது இந்தியாவின் பக்கமாகவும், யாழ் நகர்பக்கமாகவும் கூடுதலான கடற்பார்வைக்கு உட்பட்ட பகுதி யாகையால் இவ்விடத்தில் அரச கருமங்கள் நடை பெற்றிருப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகவிருக் கின்றது. எதிரிகள் தம்மீது படையெடுக்கின்றபோது எதிரிகளை கண்காணிப்பதற்கு இப்பகுதியை அரசர்கள் தேர்ந்தெடுத்திருக்கலாம். ஆகவே அரசர்கள், படையினரின் குதிரைகள் தங்கிய இடமே இது என பூரணமாக அறியமுடிகின்றது. இருப்பினும் முன்னோருடைய பதிவுகள் இன்மை யால் இவ்விடம் பற்றி பெறுமதி மிக்க தரவுகளை தரமுடியவில்லை.





# மனுவல் யேசுதாசன்

**கனடிய சட்டத்தரணி**

இட்டம் உடன் தமிழை வளர்ப்போம்
சட்டப் பிரச்சினையை சரிவர நாங்கள் தீர்ப்போம்
சட்ட உதவிச் சான்றிதழ்கள் தரின் நாம் ஏற்போம்
குற்ற குடிவரவுப் பிரச்சினைகள் பொறுப்பேற்போம்

80 Corporate Dr. Suite 210, Scarborough, ON. M1H 3G5

**Tel : 416-444-8070**

Fax : 416-444-9105

www.mjlawyers.com

Email : mjesudasan@mjlawyers.com

# சிறப்புமிக்க தீவு

- கந்தையா ஆசிரியர் -

புங்குடுதீவு என்னும் தாயகத்திலே பிறந்து பல்லாண்டுகள் வாழ்ந்து சீருஞ் சிறப்பும் பெற்ற முதியவர்களாகிய நாங்கள் செய்யவேண்டிய நன்றிக்கடனை இளைஞர்களாகிய இவர்கள் செய் கிறார்களே என்ற உணர்வு மேலிட்டது. நன்றிக் கடனாக இயன்ற அளவுக்கு உதவ ஆர்வமாக இருக்கிறேன். ஆனால் நயம்பட நல்ல தமிழில் அமிழ்தமாக மகிழ்ந்து சுவைக்கத்தக்கதாக அல்லவா எழுதவேண்டும் அறிஞர். அண்ணாத் துரையாக கவிஞர் கண்ணதாசனாக இருந்தால் ஊரும் பெயரும் உலகம் உள்ள அளவும் மக்கள் நாவில் நடமாடும். ''மாதமோ சித்திரை, நேரமோ



(இரவு) பத்தரை பேசுவதோ அண்ணாத்துரை மக்களோ நித்திரை'' நம் தாயகத்தது தமிழ் இளை ஞன் தொலைபேசியில் கூறினான். 'பெற்ற தாயும் பிறந்த பொன்நாடும்' இன்று எனக்கு ஒரு தெய்வீக மான திரு நாளாக அமைந்திருக்கிறது. அது மட்டு மல்ல 'அதிசயம் ஆனால் உண்மை!' ஆகவும் உள்ளது.

1917ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26ஆந் திகதி புங்குடுதீவு மேற்கில் உள்ள அரியநாயகன் புலம் என்ற தெய்வீகமான அமிழதின் இனிய தமிழர் மண்ணில் பிறந்த நான் இன்று 2007 ஒக்டோபர் 22 ஆந்திகதி புலம்பெயர்ந்த கனடா என வழங்கும் காருண்யம் மிக்க பூமியில் குறைவிலா நிறைவுடன் இனிது வாழ்கிறேன். இது உண்மை யில் அதிசயமே.

இதனினும் அதிசயம் அமிழ்தினும் இனிய செந்தமிழ் பேசும் தமிழ் ஈழத்தாயக மக்கள் மத்தியில் அவர்களோடு கூடி இன்ப துன்பங்களிலே பங்குகொண்டு வாழக்கிடைத்தது. தமிழீழத் தாயகத்து மக்கள் வாழ்ந்த வாழுகின்ற அத்தனை ஊர்களும் மக்களும் என் வாழ்நாளில் எனது பிறந்த மண் மக்களுடன் பழகிய அளவு பழகி மகிழ்ந்தவன் நான். இது உண்மை. வெறும் புகழ்ச்சிச் சொற்கள் அல்ல.

தீவுப்பகுதிகள் அனைத்தும் நெடுந்தீவு முதலாக நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு முதல் ஊர்காவற்றுறை உள் அடக்கிய லைடன்தீவு, காரை (நகர்)தீவு அனைத் துடன் யாழ்ப்பாணத் தீபகற்பம் அதாவது குடா நாட்டின் எல்லாப்பகுதியும் அப்பகுதி மக்களும் எனது அமிழ்தமான அன்புக்கும் நன்றிக்கும் உரிய நல்ல மக்களாவர். இது உண்மை.

வலிகாமப்பகுதி வட்டுக்கோட்டை தொடங்கி அராலி சங்குவேலி கோட்டைக்காடு கட்டுடை சித்தங்கேணி வடலியடைப்பு மானிப்பாய் சண்டிலிப்பாய் - என வலிகாமப் பகுதி மக்கள் - மாவிட்டபுரம் கொல்லங்கலட்டி மாரீசன்கூடல் அனைவருடனும் என் தாயகமக்கள் அளவுக்கு பழகியிருக்கிறேன். வடமராட்சி என்றால் உடுப்பிட்டி யிலேயே பாடசாலையில் அதிபராக ஆசிரியராக இருந்து சேவையாற்றியிருக்கிறேன். பச்சிலைப் பள்ளி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு கதிர்காமம் ஈறாக வதுளை, நுவரெலியா, இரத்தினபுரி, பேராதனை, கண்டி, தெல்தெனியா, மாத்தளை மக்கள் எனது இனிய நன்றிக்குரியவர்கள்.

தமிழீழத் தாயகத்து ஒவ்வொரு ஊர் மக்க ளும் தங்கள் தங்கள் பிறந்த மண்ணின் நன்றி உணர்வுடன் தாங்கள் படித்த பாடசாலைகளின் கல்லூரிகளின் பேரிலே புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் நன்றி உணர்வு குறையாது தங்கள் தாயகத்தின் மீதுள்ள தீராத அன்பு காரணமாக ''பழைய மாணவர்கள்'' என்ற பெயரில் சங்கங்கள் அமைத்துள்ளனர் அத்துடன் அந்த அந்த ஊரின் தனிச் சிறப்புக்குரிய கலைகள் பண்பாடுகள் இங்கும் நம் இளையதலைமுறையினர் அறிந்து





கொள்ளத்தக்க, நல்ல கைங்கரியங்களையுஞ் செய்து மகிழ்கின்றனர். இளைய தலைமுறை யினரும் பயின்று முன்னேறித்தாயக உணர்வு பெறுகின்றனர்.

எங்கள் புங்குடுதீவு வாழ்மக்களும் புலம் பெயர்ந்த இந்த மண்ணிலே எவருக்கும் சோடை போகாமல் சரிநிகர் சமானமாக சங்கம் "புங்குடுதீவு பழைய மாணவர் சங்கம்" என்ற பெயரில் அமைத் துச் சிறந்த கலை நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் விமரிசையாக புங்குடுதீவு மக்களின் பாராட்டுதலும் ஏனைய நாட்டுமக்களின் நன்மதிப்பும் பெறத்தக்க முறையிலே நடாத்துகின்றனர். சங்கத்தின் வளர்ச் சிக்காக "பூவரசம்பொழுது என்ற பெயரில் ஆண்டு தோறும் மலர் வெளியீடும் கலை நிகழ்ச்சி நாளிலே இடம்பெறுவது வழக்கம்.

எனது வயதின் முதுமை 90ஆண்டுகள் நிறைந்திருப்பதினாலே இளந்தலைமுறையினருக்கு நிறையச் சரியாகச் சொல்லமுடியும் எனக் கருதி யதிலே தவறு இல்லை. ஆனால் வயிற்று வலி வராத ஒருவனுக்கு வயிற்று வலி வந்தவன் அதனை விளக்க முயல்வது போன்றதாகவும் பழைய அனுபவங்களில் சில அமையும். தாயக ஊரின் பெயர்களும் விதிவிலக்கல்ல.

புங்குடுதீவும் அங்கு உள்ள ஊர்களின் பெயர்களும் அதற்குரிய காரணங்களும் என்பதில் - முதலாவதாக புங்குடுதீவு என்ற பெயரிலேயே வெளிப்படையாக அதன் விளக்கமும் உள்ளது. தமிழர் தாயகம் எங்கும் அந்த அந்த இடங்களில் காணப்படும். சிறப்பான அம்சங்கள்

1. முதற்பொருள் (நிலம்)
2. கருப்பொருள்

தெய்வங்கள், உணவு, விலங்கு, பறவை, தொழில், பண்ணிசை ஆகிய இயற்கையோடு இசைவானதாக அந்த அந்த ஊர்ப்பெயர்கள் காரணமும் விளக்கத் தக்கதாக அமைந்திருக்கும். யாழ்ப்பாணம் என்பதே காரணம் பற்றிய பெயரே என்பது விளக்க வேண்டியதில்லை.

ஊர்க்காவற்றுறை என்றாலே அது துறை முகம் என்பதும் காவலர் இருந்த காரணத்தால் அப்படி வழங்கி இருக்கிறார்கள் என்பதும் புலன் ஆகும். "வண்ணார் பண்ணை" என்றால் துணிகள் வெளுக்கும் குளமும் தொழிலும் பற்றிய பெயர் என்பது விளக்கமாகும்.

மருதடி (மானிப்பாய்) வேம்படி, அரசடி, ஆலடி என்பன மரத்தின் பேரிலேயே வந்திருக்கின் றன. மயிலம்புலம், மயிலிட்டி, மயிலாப்பூர் மயிலாடு துறை இவைகள் பறவைகள் அதன் கருப்பொரு ளாக இருந்த காரணத்தினாலே ஊர்ப் பெயர்களாகி இருந்திருக்கின்றன.

புங்குடுதீவு என்பது புங்கு மரங்கள் மிகுந்து சிறந்த மருந்துப் பொருளாகவும், கமத்திற்குப் பயன்படும் சிறந்த பசளையுள்ள குழையாகவும் உதவிய காரணத்தால் ஊர்ப்பெயராகியது. புங்கு மரமும் புன்குமரமும் ஒரே மரத்தின் பெயர்களாகும்.

மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் புன்குமரம் என்றும் அதன்பட்டை புங்கம் பட்டை என்றும், புங்கம் வேர் என்றும், புங்கம் கொட்டை மருந்து எண்ணெயாகவும் பயன்பாடுகள் பற்றி விளக்கப் பட்டுள்ளது.

இலங்கை ஆங்கிலயரிடம் இருந்து சுதந் திரம் பெறுவதற்கு முன்பும் ஏறக்குறைய 30 ஆண்டுகள் நான் வாழ்ந்திருக்கிறேன். எனது



பள்ளிப்பருவகாலத்திலும் அதன் பின்னர் நான் ஆசிரியராகச் சேவை செய்தகாலத்திலும் தமிழ் ஈழத்தாயகம் எவ்வாறு இருந்தது என்பதை இன்றைய தலைமுறையினருக்கு விளக்கவோ விளங்க வைக்கவோ என்னால் இயலாது என அனுபவ முறையிலே கூறுகிறேன்.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பர்மா,



கொங்காங் ஆகிய ஆசியப் பிரதேசங்கள் ஒரே ஆட்சியில் இருந்தன. நான் நமது அயல் நாடுகள் பற்றிய தொடர்பிலே இதனை எழுதுகிறேன். எல்லோருமே பிரிட்டிஷ் பிரசைகளாக இருந்தோம். ஒரே விதமான அரசாட்சி, ஒரே விதமான நீதி ஒரே விதமான அரசியல் நிர்வாகம் (பொது நலவாய நாடுகளாகப் பின்னர் பெயர் பெற்றன. அனைத் திலும் சமச்சீரான ஒரே ஆளுகை நிகழ்ந்தது.

இந்தியக் கரையும் நமது ஈழத்துக் கடற் கரையும் நீந்திக் கடக்கும் அளவு தூரந்தான் ஊர்க்காவற்றுறை, யாழ்ப்பாணம் அலுப்பாந்தி, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித் துறை, திருகோணமலை ஏன்? கொழும்புத்துறை முகம் எங்குமே ஆடும் மாடும் நெல்லும் அரிசியும் ஏனைய சட்டிபானையும் ஓடும், பிறபொருட்களும் இறக்குமதியாகும்.

புங்கு மரங்கள் கடற்கரைகளிலே நிறைந்து சூழ்ந்து பச்சைப் பசேல் என வளர்ந்தன. பருத்தியடைப்பிலுள்ள பரம்பரையான பேர் பெற்ற புண் (கட்டு) வைத்தியர்கள் வந்து புங்கம் வேர் களும் பட்டைகளுக்காகத் தடிகளையும் வெட்டிச் செல்வார்கள். ஆகவே சிறப்புக்கருதி அந்நாளிலே வாழ்ந்த பழந்தமிழர்கள் புங்குடுதீவு என அழைத்தனர்.

நான் படித்த காலத்திலே படிப்பித்த இளை யப்பா என அழைக்கப்படும் சதாசிவம்பிள்ளை அவர்கள் புன்குடுதீவு என்றும் எழுதுவதை கடித விலாசங்களிலே கண்டிருக்கிறேன். அவர் திருப் புன்கூர் என்பது புங்கு ஊர் தான் என அறிந்து தான் எழுதியிருக்கிறார். (அகராதியில் புங்கும் - புன்கும் ஒரே மரம்)

புங்குடுதீவிலேயே – மரங்களின் அடிப்படை யிலே பெருக்க மரம் - என்பது மிகமிகப்பெரிய ஒரு மரம் மலைகளிலே ஏறுவதுபோல அடிமரம் பரந்து பட்ட இடத்தை அடக்கி மரமோ அல்லது கல்லுப் பார்கள் தானோ என கோடரி கொண்டு கொத்திப் பார்க்கக் கூடிய காட்சியில் நான் அதில் ஏறி விளையாடி இருக்கிறேன். அந்த இடம் பெருக்கடி என அழைக்கப்படும்.

அடுத்துப் புளியடித்துறைமுகம். அதுவும் புளிய மரங்களின் காரணமாகவே வந்திருக்கலாம். அதேபோல தோப்பு, தனிப்பனை என்பனவும் மரங் களின் மிகுதி கருதி வந்திருக்கலாம்.

சிலசில துறைகளில் சிறப்பான முறையிலே அக்காலத்தில் சித்தவைத்தியர்கள் இருந்தார்கள். ஊர்காவற்றுறையிலே சிறந்த புண்வைத்தியர்கள் இருந்தார்கள். பருத்தி அடைப்பு வைத்தியர்கள் என மக்கள் அழைப்பர்.

அந்தப் பருத்தி அடைப்பு வைத்தியர்கள் வந்து புங்கம் வேர்களைப் பெற்றுச் செல்வர். இவைகள் எனது நேர் காலத்து உண்மையான செய்திகள். ஆகவே புங்குடுதீவு என்பது சரியான காரணப்பெயர் ஆகும்.

வாழையடி வாழையாக வாழ்ந்த பழந்தமிழ் தாயகத்து மக்கள் புங்குடுதீவில் இன்றும் என்னால் விளங்கிக் கொள்ள இயலாத விளக்க முடியாத ஞானமுங் கல்வியும் ஒழுக்கமும் வித்தைகள் சாஸ் திரங்கள் (வைத்தியம், சோதிடம், குருகுலக் கல்வியாக அனுபவத்துடன் பெற்ற மகரிஷிகள் ஆக வாழ்ந்தார்கள்.

நல்ல அந்தணர்கள் வேதங்கள் வேதாந் தங்கள் சித்தாந்தங்கள் புராண இதிகாசங்கள் சமஸ்கிருத விற்பன்னர்களாக கோயில்கள் கொடி யேற்றங்கள் கும்பாபிஷேகங்கள் செய்ய வல்லவர் களாக பரம்பரைக் குடிகளான தமிழர்களாகவே வாழ்ந்தார்கள். அவர்கள் ஆதியிலே தமிழகக் கடற்கோள் காலத்தில் இருந்தவர்களாகவே நான் கருதுகிறேன்.

புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு கிழக்கு என அக்காலத்தில் இருபகுதியாகவே அழைப்பது வழக்கம். புங்குடுதீவு மேற்கில் குடியிருப்புப் பகுதி கள் இருப்பிட்டி, பெருங்காடு, குறிகாட்டுவான் தொகுதியாக உள்ளன. யாழ்ப்பாணத்தில் சிறுப் பிட்டி, உடுப்பிட்டி என்பன போல இருப்பிட்டியும் காரணப்பெயரேயாகும்.



# CENTUM™
## Advance Realty Inc.

**Looking Out For Your Best Interest**

- New Credit
- Bad Credit
- No Credit
- Bankrupt
- No Problem

On Line - Credit Approval
All kind of Credit Repairs

"Refinancing King"
100% Refinance Guaranteed!

உங்கள்
வியாபார முதலீடு
வீட்டு முதலீடு
ஆகியவற்றுக்கான
பணத்தேவைகள்
உடன் ஒழுங்கு
செய்து தரப்படும்

Banks & Lenders Refused
Regardless of Your Credit History
***I Guaranteed***
Last Minute Mortgage/Rush
Residential/Commercial & Industrial Mortgage

**Shan. Kanapathipillai**

**416-890-2300**

Email : shankana@juno.com

# பெயர்கள் சில...

- திருமதி. க. சிதேவி -

## பாத்திப்பிட்டி

பாத்திப்பிட்டி எனப்படும் இடமானது வைத்தியசாலை வீதிக்கு கிழக்குப்பக்கமாக தாவக்குளத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. இப்பகுதியில் பலருடைய பனம்பாத்திகள் பாதுகாப்பாக போடப்பட்டிருக்கும். இதன் சிறப்பென்பது இப்பகுதியை சுற்றிவர களித்தன்மையான மண்ணே பரந்து காணப்படுகின்றது. ஆனால்



இப்பிட்டியில் மட்டும் மணற்பாங்கு மிகுந்து காணப்படும். அத்துடன் பத்தாம் வட்டாரம், இரண்டாம் வட்டாரம், முதலாம் வட்டாரம், மூன்றாம் வட்டாரம் போன்ற பகுதி மக்களில் பலர் இப்பிட்டியிலேயே பனம் விதைகளை பாத்தியாகப்போட்டு பனம் கிழங்கு எடுப்பார்கள். காரணம் மேற்குறிப்பிடப்பட்ட வட்டாரங்களில் சில பகுதிகளின் மண்ணின் தன்மையானது களித்தரையாக இருப்பதனால், அங்கே விதைக்கப்படும் பனங்கிழங்கு ஆழமாக வேர் விடாது என்றும், அதனால் கிழங்கின் பருமன் குறையும் என்பதனாலும், அப்பகுதி மக்களில் சிலர் இப்பகுதியில் பனம் பாத்திகள் போடுவார்கள். மணற்பாங்கான பிட்டிப் பகுதியாக இது இருப்பதனாலும், பலர் பனம்பாத்திகளை இதில் போடுவதாலும் பாத்திப்பிட்டி (பாத்தி+பிட்டி) எனப்பெயர் வந்திருக்கின்றது. இப்பெயர் கிட்டத்தட்ட நூற்றி நாற்பது ஆண்டு காலங்களாக பாவிக்கப்படுவதை உறுதி செய்யத்தக்கதாக இருக்கின்றது.

## சறட்டை

தொடரான கற்றறைகள் நிறைந்த பகுதி. கோடைகாலத்தில் கால்நடைகள் மேயும் புற்தரையாகவும், சிறுவர்களின் விளையாட்டுத் திடலாகவும், மாரிகாலங்களில் நீர் நிறைந்தும் காணப்படும். முன்னைய காலத்தில் புங்குடுதீவின் தெற்குப்பகுதி கடற்கரைக்கு போவதற்கான பாதை இதனூடாகத்தான் காணப்பட்டது. இவ்வழியூடே கடற்கரைக்குச்செல்பவர்கள் தமது சரட் வண்டிகளில் பயணித்து இப்பகுதியில் தமது வண்டில்களை நிறுத்திச்செல்வதால் அப்பெயர் வந்தது என்பார்கள். சரட்டை என்பதே மருவி சறட்டையாகியது இப்போ.

## வண்ணாங்குண்டு

இரண்டாம் வட்டாரத்திற்குள் முருக்கடி எனப்படும் இடத்திற்குள் இப்பகுதி அமைந்துள்ளது. கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்னர் எம் மக்கள் தமது ஆடைகளை தூய்மைப்படுத்துவதற்காக பாவிக்கப்பட்ட குண்டு. (குளம்)



இங்கு தூய்மைப்படுத்துவதற்கான ஆடைகளை துவைப்பவர்கள் பெரும்பெரும் மட்பாத்திரங்களில் இக்குண்டிலிருந்து பெறப்படும் மண்ணுடன் வேறு சில பதார்த்தங்களை சேர்த்து அப்பதார்த்தங்கள் நொதிப்பதற்காக ஓரிரு நாட்கள் விடுவார்கள். அதன் பின்னர் துவைப்பதற்கான ஆடைகளை அதனுள் போட்டு ஓரிரு நாட்கள் ஊறவைத்து பின் துவைப்பார்கள். நொதித்த பதார்த்தங்களுடன் ஆடைகளை போட்டு விடுவதால் அவ்வாடைகள் வெண்மைப்படும். எம்முன்னோர்கள் தொழில் சார்ந்து வர்ணம் பிரித்தமையால், ஆடைகளை வெளுப்பவர்கள் பாவிக்கும் குண்டு என்பதால் வண்ணான் குண்டு எனப்பெயர் பெற்றுள்ளது. நூறு ஆண்டுகள் பாவனையில் இல்லாது விடினும் அதன் பெயர் மட்டும் வர்ணம் குறிக்கும் வண்ணம் இன்றும் இருக்கின்றது.

## பாம்பு வரம்பு

இது மணியகாரன் தோட்டத்தின் மேற்குப் பக்க எல்லையோடு அமையப்பெற்றிருக்கின்றது. பேச்சு வழக்கின்படி பாம்புவரம்பு என்பது முன்னூறு வருடங்களாக இருக்கின்றது. மூன்று தலைமுறை


கண்ட ஒரு பெரியவரின் கூற்றின்படி, தனது பூட்டன் காலத்தில் இருந்தே அப்பகுதிக்கு அப்பெயர் வழங்கப்பட்டு வருகின்றதென்றும், அப்பகுதிக்குள் பாம்புகளின் நடமாட்டமானது அதிகம் என்றும், ஆனால் அவ்வளவின் எல்லை தாண்டி (வரம்பு) அவை வருவதில்லை என்பதினாலேயேயும் பாம்பு வரம்பு எனப்பெயர் வந்ததாக சொல்வார்கள் என்றார். கிட்டத்தட்ட முன்னூறு வருடங்களுக்கு முன்னரே இருந்து அப்பெயர் வழங்கப்பட்டு வந்தமையை வைத்து அக்கருத்தைத்தான் நம்ப வில்லையென்றும், அதற்கான எழுத்து வடிவிலான ஆதாரங்கள் இன்மையாலும் அதன் உண்மைத் தன்மையானது எவ்வளவு உறுதியானது என்பது தெரியாதென்றும், அப்படி அப்பெயர் வந்தது உண்மையாகின் பிறபகுதிகளில் பாம்பின் தொல் லைகளோ அன்றி தொடர்புகளோ இருந்திருக்க வாய்ப்பில்லை என்றும் தெரிவித்ததுடன், மேற் குறிப்பிடப்பட்ட பகுதியின் எல்லையானது பாம்பு செல்வது போன்று வளைந்து வளைந்து அமையப் பெற்றமையே பாம்புவரம்பு எனப்பெயர் வந்த மைக்கு காரணமாகத்தான் எண்ணுவதாகவும் தெரிவித்தார். இதில் எது உண்மை என்பது எமக்குத் தெரியாது.

## செம்பாணை


இது இப்போ அமையப்பெற்றுள்ள வைத் தியசாலை வீதிக்கு மேற்குப்பகுதியில் அரசடி வீதிக்கு தெற்குப்பக்கத்தில் அமையப்பெற்ற பகுதியாகும். இப்பகுதியில் கிட்டத்தட்ட பத்து பரப்பளவு காணிக்குள் செம்மண் கலந்து காணப் படுகின்றது. அத்துடன் இப்பகுதியின் பின்பக் கத்தினுள் கூடுதலான கற்பக தருக்கள் (பனைகள்) இருக்கின்றன. இவற்றின் சிறப்பு யாதெனில் அங்கேயுள்ள அனைத்து பனைமரங்களின் பனம் பழங்களும் செம்மை கலந்த நிறமுடையவை களாகும். பொதுவாக பனைகளில் பலவிதமான நிறங்களில் காய்கள் கிடைக்கப்பெற்றாலும் இந்தப் பகுதியில் வளர்ந்திருக்கின்ற அனைத்து பனை களும் செம்மையாக இருப்பதனால் செம்பனை எனப்பட்டதாக அறியமுடிகின்றது. அவ்வாறு கூறப் பட்ட பகுதியே பிற்காலத்தில் செம்பாணையாக உருமாற்றம் பெற்றதென்பார்கள். இத்துடன் இன்னு மொரு கருத்தும் உண்டு. அங்கே பாணை சட்டி செய்பவர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்றும் சொல்பவர்கள் உண்டு. இங்கே கிடைக்கும் செம்மண்ணைக்கொண்டு பாத்திரங்கள் செய்ய முடியாது. ஆனால் குறிப்பிடப்பட்ட பகுதியில் மட்டும் எப்படி செம்மண் வந்தது என்பது தெரிய வில்லை. சிலவேளைகளில் மட்பாண்டம் செய் கின்ற தொழிலாளர்கள் அங்கே வாழ்ந்தார்களா? என்பது தெரியவில்லை. அதனை அடிப்படையாக வைத்து பார்க்கின்றபோது பாணை செய்யப்பட்ட பகுதியாக அப்பகுதி இருந்து செம்பாணையானதா? அல்லது பனம்பழங்களின் நிறத்தை வைத்து அப்பெயர் வந்ததா? என்பதை ஆய்வுகள் தான் தெளிவுபடுத்தும்.

## முருக்கடி

புங்குடுதீவின் வைத்தியசாலை வீதிக்கு மேற்குப்பக்கமாக அமைந்துள்ள பகுதி முருக்கடி எனப்படும். இதற்கான காரணங்களை பலவாறாகக் கூறினும் இதற்கான காரணமாக கூறிக்கொள்வது யாதெனில் அவ்விடத்திலே அதிகமான முருக்கு மரங்கள் நிறைந்து காணப்பட்டமையே. சாதாரண மாக இந்துக்களின் சுபகாரியங்களுக்காக முள் முருக்கு பாவிக்கப்படும். அதாவது கன்னிக்கால் நடுதல் என்கின்ற சடங்கிற்கு பாவிப்பதற்காக எமது இடத்திலிருந்தே இவ்வகையான முருக்குகளை அனைத்து வட்டாரங்களிலிருந்தும் மக்கள் வந்து பெற்றுச்செல்வர். காரணம் நேரிய மரங்களே அதற் காக பாவிப்பார்கள். அதற்காக எமது பகுதிக்கு வரும் மக்களால் கூறப்பட்ட பெயரே முருக்கடி என்று அழைக்கப்பட்டது. இருப்பினும் இன்னும் சிலர் அவ்வட்டாரத்தில் வாழ்ந்த மக்கள் முருகப் பெருமானின் பத்தர்களென்றும் முருகனின் அடிய வர்கள் என்பதால் அவ்விடம் முருகனடியவர்கள் வசிக்கும் இடம் என்னும் பொருள்படும் வகையில் அது முருகனடியவர்கள் என்று இருந்ததாகவும் அதுவே மருவி முருக்கடி எனப்பட்டதாகவும் கூறுவர். இக்கருத்தில் எவ்வளவு உண்மை உண்டு என்பது தெரியாது. இக்கருத்தை மறைந்த ஆசிரியர் பொன் வித்துவான் கனகசபை அவர்கள் தெரிவித்திருந்ததாக அவரின் மாணாக்கர்கள் தெரிவித்திருந்தார்கள்.



# சு. வில்வரெத்தினம் உடன் நேர்காணல்



"ஒரு கலைஞன் என்பவன் நான் போரை விரும்பி ஆராதிக்கின்றேன் என்று புகழ்பாட முடியாது. ஆனால் இதுவரை ஆற்றப்பட முடியாமல் விருத்தி பெற்றுச் செல்லும் சிங்கள பௌத்த பெரும் தேசியவாத நடவடிக்கைகள் ஈழத்துத் தமிழ் மக்களுடைய சகல துறை சார்ந்த வளர்ச்சிகளுக்கும் எதிரான போராக உருவெடுத்துள்ளது. எனவே சகல துறைசார்ந்த தளங்களில் நின்றும் எங்களுடைய விடுதலைக்கு எதிரானவற்றை எதிர்த்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. இதில் கலைஞர்கள் எழுத்தாளர்கள் என்பவர்களும் தங்களது பண்பாட்டு எழுத்துத்துறை தளங்களில் இருந்தும் விடுதலை சார்ந்து எழுதப்பட வேண்டிய கலை இலக்கியங்களை முன்னெடுப்பாக நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திலேயே உள்ளனர்.

உக்கிரமான போராட்டத்துக்கான மனோ நிலைக்குரிய சூட்டைத் தனது படைப்புகளில் தக்க வைத்துக் கொண்டிருக்கும் அதே சமயம், ஒரு பெரிய புயல் அடித்துப் போகின்ற பொழுது பிய்த்து எறியப்படும் மலருக்காகக் குரல் கொடுக்கும் ஒரு மெல் இதயம் கொண்டவனாகவுமே ஒரு கலைஞன் எப்போதும் இருப்பான். இதனால் இந்தப் போரின் இன்னொரு முகமாக அது சக மனிதர்கள் மீது விதைத்து விட்டுச் செல்லும் சோகங்களையும் அவலங்களையும் தன்னுடைய குரலாகவும் மாற்றி ஒலிக்க வேண்டிய கடமை ஒன்றும் எங்களுக்கு இருக்கிறது"

என்று சொல்லும் கவிஞர் சு. வில்வரத்தினம் ஈழத்துக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்க ஒருவர் எழுபதுகளின் முற்பகுதியில் எழுதத் தொடங்கிய இவரது – 'அகங்களும் முகங்களும்', 'காற்று வழிக்கிராமம்', 'காலத்துயர்', 'நெற்றிமண்' என்ற நான்கு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன.

சமீபத்தில் காலச்சுவடு இதழ் முன்னின்று நடத்திய "தமிழ் இனி – 2000" என்னும் உலகத் தமிழ் இலக்கிய அரங்கில் "கடந்த நூற்றாண்டில் ஈழத்தில் தமிழ்த் தேசிய இலக்கியம்" என்னும் ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பிப்பதற்காகச் சென்னை வந்திருந்த இவர் ஈழத்தமிழ்த் தேசியத்தின் மீது பிசிறு இல்லாத பார்வையும் வலுவான பற்றும் கொண்டவர்.

ஈழ ஆதரவுக்குரல்களை அடக்கி வாசிக்க வேண்டிய இன்றைய தமிழகச் சூழலில் அதற்கு எதிரான போக்குடையவர்களுக்குக் காலச்சுவடு தாராளமாகக் களம் அமைத்துக் கொடுத்து விட்டது என்ற அதிருப்தியுடன் கடுமையான பல விமர்சனங்களையும் "தமிழ் இனி" எதிர்கொண்டு விட்ட நிலையில், அதில் கலந்து கொண்ட கவிஞர் சு. வில்வரத்தினம் அவர்களைச் சந்தித்து மாநாட்டை மையப்படுத்தி நிகழ்த்திய நேர்காணலில் இருந்து சில பகுதிகள்:

**தமிழ் இனி 2000 என்ற உலகத்தமிழ் இலக்கிய அரங்கில் நீங்கள் கலந்து கொள்வதற்கான சூழல் எப்படி உருவாகியது என்பதில் இருந்து நேர்காணலை ஆரம்பிக்கலாமே?**

காலச்சுவடும் ஆறாம் திணை என்கின்ற இணைப்பத்திரிகையும் தாங்களும் சேர்ந்து சென்னையில் தமிழ் இனி - இரண்டாயிரம் என்ற ஆய்வு மாநாட்டை நடத்த இருப்பதாக சரிநிகர் ஆசிரிய பீடத்திடம் இருந்து தொலைபேசியினுடாக எனக்கு அழைப்புக் கிடைத்தது. ஏற்கனவே திருகோணமலையில் "கூடல்" என்கிற இலக்கிய அமைப்பினூடாக சரிநிகர் பத்திரிகையினதும், புலம் பெயர்ந்த நண்பர்கள் பத்மநாப ஐயர், மு. நித்தியானந்தன்

BRACE FOR GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES


# DR. ILLANGO & ASSOCIATES

***Dental Office***

பல் மருத்துவ நிலையம்


**பற் சிகிச்சையில் சகல துறைகளிலும் எமது சேவை**

- டாக்டர் மு. இளங்கோ
  B.D.S. Dip. Orth. (Oslo), General Practitioner Mainly Orthodontics
- டாக்டர் மெஹ்ரன் மொஜானி
  D.D.S, Dip. Perio, Gum Specialist பல்முரசு வைத்திய நிபுணர்
- டாக்டர் சாபாபதி ரவீந்திரன்
  B.D.S, M.S, F.D.S.R.C.S(Eng.), General Practitioner (Mainly Oral Surgery)
  அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்
- டாக்டர் அலி அடிபார்
  D.DS, M.D, F.R.C.D(C), Plastic Surgeon
  (Wisdon tooth extraction under sedation)
  மயக்கமாக்கி ஞானப்பற்களை அகற்றுபவர்
- டாக்டர் ஜானகி இளங்கோ
  B.D.S. குடும்ப பல் வைத்தியர்
- Dr. Lai Yung Cheong
  D.D.S. குடும்ப பல் வைத்தியர்





## SCARBOROUGH OFFICE

3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**416.292.7004**




